REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 18 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 221 | Monday 18, September, 2023 | 20பக்கங்கள் | 50/-

## சனல் 4 க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம்

### பல வழி முறைகள் உள்ளன

செனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கான பல வழிமுறைகள் உள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார் நேர்காணொலொன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். செனல் 4 ஒரு நம்பகதன்மையற்ற ஊடகம் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான 06

## ஆசிய கிண்ணம் இந்தியா வசம்

### 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஆசிய கிண்ணத்தை எட்டாவது முறையாகவும் இந்திய அணி வெற்றி கொண்டுள்ளது. இலங்கை, இந்தியாவிடையே நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், மிக இலகுவாக வெற்றியீட்டியது.

இந்திய அணியில் இருவர் மாத்திரமே துடுப்பாட்டத்தில் களமிறங்கி, ஐம்பது ஓட்டங்கள் என்ற இலக்கை இலகுவாகச் சாதித்தனர் . இந்நிலையில் இந்திய அணி 10 விக்கெட்டுக்களால் ஆசிய கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. ஆசியக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப்போட்டி நேற்றைய தினம் இலங்கை இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதற்கிணங்க போட்டிக்கான நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது. 06

## திரைப்பட நடிகர் பிரபு தேவா பிரதமருடன் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்னிந்திய பிரபல நடிகரும், திரைப்பட இயக்குநருமான பிரபுதேவா, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இக்கலந்துரையாடல் (15) 06

## ஐ.நா.பொதுச் சபையில் பங்கேற்க ஜனாதிபதி நியூயோர்க் சென்றடைந்தார்

### 21ஆம் திகதி விசேட உரை



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்

கியூபாவில் நடைபெற்ற "ஜி77 + சீனா" அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை நேரப்படி (17) அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார். "2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் செப்டம்பர் 18 முதல் 21 06

### தொழினுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள் மீதான மதிப்பீடுகளுக்காக

# நான்கு புதிய தொழினுட்பவியல் பல்கலைக்கழகங்களை நிறுவ திட்டம்

### 'G77 + சீனா' அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில்

விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்ள தொழினுட்ப, புத்தாக்க சபையொன்றை நிறுவுவதற்கு இலங்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் மாற்ற முகவர் நிறுவனமொன்றை நிறுவுவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, புதிய நான்கு தொழினுட்பவியல் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கியூபாவின் ஹவானா நகரில் நடைபெறும் "G 77 + சீனா" அரச தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உச்சி மாநாட்டில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்கும் உத்தேசித்துள்ளோம்.

உலகெங்கிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் தற்போதைய அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்வதில் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கங்களினால் கூடுதல் பங்களிக்க முடியும்.

தொற்றுநோய்கள், காலநிலை மாற்றங்கள், உணவு, உரம் மற்றும் வலுசக்தி நெருக்கடிகள் போன்றவை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. உலகளாவிய கடன் நெருக்கடியானது இந்நிலைமையை மேலும் அதிகரிக்கச் செய்வதால் , முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்ளும் நிலை உலகளாவிய ரீதியில் தெற்கு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

15 ஆம் நூற்றாண்டில் துப்பாக்கிக் குண்டுகள், பீரங்கிகள் மற்றும் கடல் பயணக் கப்பல்கள் போன்ற துறைகள் மூலம் ஐரோப்பா அடைந்த முன்னேற்றங்களால் உலகின் பிற நாடுகளை அவர்களால் கைப்பற்ற முடிந்தது.

இதன் விளைவாக, உலகில் இன்று 06

## தமிழகத்தில் நிறுவப்பட்ட 1591 வீடுகள் இலங்கை அகதிகளுக்கு கையளிப்பு

### 79.70 கோடியில் வேலைகள் பூர்த்தி

(திருச்சி சாஹுல் ஹமிட்)



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் 13 மாவட்டங்களிலுள்ள 19 இலங்கைத் தமிழா் முகாம்களில் மொத்தம் 79.70 கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 புதிய வீடுகளை நேற்று திறந்து வைத்தார். நேற்றுக் காலை வேலூரிலுள்ள மேல்மொணவூா் முகாமில் 11 கோடி ரூபா மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 220 வீடுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இலங்கை தமிழர்களிடம் கையளித்தார். அத்துடன் இலங்கை தமிழர்களுக்கு வீட்டு உபயோக பொருட்களையும் அவர் வழங்கினார். 06

## அனுமதி பெற்ற மணல் அகழ்வுக்கு கிளிநொச்சியில் தற்காலிக தடை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை



கிளிநொச்சி, இரணைமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்ட விரோத மணல் அகழ்வு முழுமையாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளும் முழுமையாக கட்டுப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அதிகாரிகள் உத்தரவாதமளித்துள்ளனர். சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் 06



மட்டக்களப்பு ,சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்..

## திருத்தம் செய்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் வர்த்தமானியில்

### ஆட்சேபனைகளை உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



திருத்தம் செய்யப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் மீண்டும் வர்த்தமானி 06

## திலீபனின் ஊர்தியை வழிமறித்த குழு கஜேந்திரன் எம்.பி குழுவினர் மீது தாக்குதல்

### திருலை–கொழும்பு வீதியில் சம்பவம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)



திருகோணமலையில் தியாகதீபம் திலீபனின் ஊர்தியை வழிமறித்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குழுவினர் ஊர்தியை 06

## காட்டு யானை தாக்கி இருவர் உயிரிழப்பு



ஹதுன்கம மற்றும் மஹாஓயா பிரதேசங்களில் காட்டு யானைகள் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர். காட்டு யானை தாக்கியதில் 82 வயதுடைய முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக 06

### சர்வதேச விசாரணை தொடர்பாக

## TNA இதுவரை காலமும் கூறி வந்தமை பொய்



### பச்சைப் பொய் என்கிறார் சட்டத்தரணி சுகாஷ்

இலங்கை "ரோம்" பிரகடனத்தில் கையெழுத்திடாததால், தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோரமுடியாதென, சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதுவரை காலமும் கூறியது பச்சைப் பொய் என்பதையும் 06

## அரசியல் உச்சத்தை எட்டும் பாதையில் முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்துவோம்



### அஷ்ரப்பின் நினைவு நிகழ்வில் ஹக்கீம்

(கல்முனை மத்திய தினகரன், அட்டாளைச்சேனை குறூப், அம்பாறைமாவட்டகுறூப்பெரியநீலாவணை விசேட நிருபர்கள்)

அரசியல் உச்சத்தை எட்டும் பாதையில் முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்துவோம். இதற்காக மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின் அந்திமகால முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப நிகழ்வாக, இன்றைய நினைவேந்தலை எடுத்துக் கொள்வதாக 06

## வழக்கு பொருட்களாக வைக்கப்பட்ட தங்க நகைகள் அடகு வைப்பு

### சந்தேகத்தில் பொலிஸ் அதிகாரி கைது



(லோரன்ஸ் செல்வநாயகம்)

வழக்குப் பொருட்களாக பாதுகாக்கப்பட்டு வந்த தங்க நகை ஒரு தொகையை, அடகு வைத்து பணம் பெற்றுக் கொண்ட பொலிஸ் பரிசோதகர் ஒருவரை மிரிஹான பொலிஸார் கைது செய்துள்ளனர். மிரிஹான பொலிஸில் கடமை புரியும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள்: நூறு பேர் கைது!



2023 இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளுடன் தொடர்புடைய 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொதுமுகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் இந்த வருடத்தில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 06

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஆறு வயது சிறுமி உயிரிழப்பு

### மாளிகாகந்தை நீதிமன்றுக்கருகில் சோகம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கொழும்பு, மருதானை மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில், ஆறு வயது சிறுமி உயிரிழந்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்துள்ள சிறுமியின் தந்தையும் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானதுடன், இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 06

## ஆலய திருப்பணிக்கு யாசகரின் நன்கொடை

### 02 இலட்சம் ரூபாவை வழங்கினார்



யாழ். வண்ணை வேங்கட ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபனம் நிகழ்ந்து, புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது. இதற்காக,யாசகர் ஒருவர் தன்னால் சேகரிக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபா பண உதவியை ஆலய நிர்வாகத்தினரிடம் (17) வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.

### அரச நிறுவனங்களின் மின்னஞ்சல்களில்

## இணைய வழி தாக்குதல் CID துரித விசாரணைகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரச அலுவலகங்களில் ஈமெயிலை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சைபர் தாக்குதல் தொடர்பில், குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழினுட்பத்துறை பதில் அமைச்சர் 06

# நகர்வலம்



## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முதுமாணி டிப்ளோமா பட்டமளிப்பு விழா



மலேசியன் யுனிவர்சல் கல்லூரியின் இரண்டு வருடங்கள் பயிற்சியை பூர்த்தி செய்த பாலர் பாடசாலை முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற முதுமாணி டிப்ளோமா பட்டமளிப்பு விழா B.M.I.C.H. மண்டபத்தில் கடந்த புதன்கிழமை (13) மாலை நடை பெற்றது. நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி சப்ரீனா பாரிஸ், பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளதையும் டிப்ளோமா பட்டங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு நாட்டை பின்னோக்கி நகர்த்த வேண்டாம்

### காலியில் ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி

**வெலிகம தினகரன் நிருபர்**



வங்குரோத்து நிலையில் இருந்த நாடு மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பப்படும் இவ்வேளையில், வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு மீண்டும் நாட்டை பின்னோக்கி நகர்த்த எவரும் முயற்சிக்க வேண்டாமெனவும் இவ்வாறானவர்களின் வலையில் மக்கள் சிக்க வேண்டாமெனவும் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.கட்சி தவிசாளருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி கடவத்ஸதர பகுதியில் அண்மையில் நடைபெற்ற கட்சி இணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், சுதந்திரம் அடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டங்களால் டிர்லியன் கணக்கில் நாட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தது. ரயில்வே திணைக்களம் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டங்களால் ஏற்பட்ட நட்டத்தின் மூலம் 100 கிலோ மீட்டர் தூர ரயில் பாதைகளை அமைக்க முடிந்திருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 மே மாதம் 12ம் திகதி பிரதமராக பதவியேற்ற போது நாட்டை மீள்கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் பற்றி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தார். இவ் வேலைத்திட்டங்கள் பற்றி தற்போது சர்வதேச மட்டத்துக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றுக்கும் முன் வைக்கப்பட்டுள்ளன.

இவைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டும்உள்ளனர். மேலும் இவை பாராளுமன்றத்துக்கும் முன்வைக்கப்பட்டு அதன் மூலமாக மக்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெளிவாக முன் வைக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவிப்பது தான் அரசியல் மோசடியாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து வருகிறார்.

புதிய வரவு செலவு அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக பொருளாதார விசேட செயலாளர்கள் நியமிக்கப்படுவர். யாருக்கும் இவ் அலுவலகத்துக்கு யோசனைகளை முன் வைக்க முடியும்.

எனவே மோசடி அரசியலை கைவிட்டுவிட்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டிச் செல்ல கைகோர்ப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலை டாக்டரின்

## ரூ. 04 இலட்சம் பெறுமதியான கையடக்க தொலைபேசி திருட்டு

### ரூ. 6000க்கு விற்ற நபர் பொலிஸாரால் கைது

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**



பாணந்துறை, பெண்கள் வைத்தியசாலை டாக்டரின் காணாமற்போன சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியொன்றை ஆறாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த நிலையில் பாணந்துறை தெற்கு பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபுல் பிரியங்கரவின் ஆலோசனையின் பிரகாரம் விஷேட தொழில்நுட்ப தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போது காணாமல்போன கையடக்க தொலைபேசி பாணந்துறை நகர் பிரதேசத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, தொலைபேசியை தன்னகத்தே வைத்திருந்த பெண் ஒருவரை விசாரணை செய்த பொலிஸார் அந்த பெண்ணிடமிருந்து தொலைபேசியை மீட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த பெண்ணிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், பிரதேசத்தைச் சேர்ந்த போதைப் பொருளுக்கு அடிமையான நபரொருவரிடமிருந்து ஆறாயிரம் ரூபாவுக்கு வாங்கியமை தெரிய வந்துள்ளது.

குறிப்பிட்ட சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ள பொலிஸார், போதைப் பொருளுக்கு அடிமையான சந்தேக நபர் பிரதேசத்திலிருந்து தப்பியோடியுள்ளதாகவும் நபரைத்தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கையடக்க தொலைபேசியைப் பறிகொடுத்த வைத்தியர், கடமை முடிந்த பின்னர் ஓய்வு அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த போது அங்கு நுழைந்த சந்தேக நபர் தொலைபேசியை களவாடியுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிய வருவதாக பொலிசார் மேலும்தெரிவித்தனர்.

## செனட்டர் மசூர் மௌலானாவின் மனைவி காலமானார்

மர்ஹூம் செனட்டர் மசூர் மௌலானா அவர்களின் அன்பு மனைவி பிஸ்ரத்துல் நயீமா மௌலானா நேற்று முன்தினம் (16) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜெஸ்மின் மௌலானா, அக்ரம் மௌலானா, ஷியாம் மௌலானா, மபாஹிர் மௌலானா, இல்ஹாம் மௌலானா, நௌஷாட் மௌலானா ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று (17) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கொழும்பு மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## நூலின் பிரதி ஊடக அமைச்சருக்கு வழங்கி வைப்பு



பிரபல பெண்ணெழுத்தாளரும் பத்திரிகை கலைஞருமான சுரேக்கா நில்மினி இலங்கோனால் எழுதப்பட்ட 'தியசித்தம்' எனும் நூலின் முதற்பிரதி போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் அண்மையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது வழங்கி வைக்கப்பட்ட போது எடுத்த படம். இது எழுத்தாளரின் 17ஆவது நாவலாகும்.

அடுத்தவர்களுக்காக உழைக்கும் தன்னலமற்ற மனிதர்கள் மற்றும் துன்பம், வேதனைகள் மற்றும் சவால்களுக்கிடையே வாழ்க்கைக்கு முகம் கொடுக்கும் தைரியமான பெண்ணைப் பற்றி இந்நாவலில் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிகழ்வில் லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் மற்றும் பணிப்பாளர் குழுவின் அனைத்து அங்கத்தவர்களுடன் லேக் ஹவுஸ் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## உல்லாச பயணியின் பணம் திருட்டு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

கதிர்காமம் பிரதேச ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு தம்பதியினரின் பணம் திருடப்பட்டுள்ளதாக குறித்த தம்பதியினர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக கதிர்காமம் பொலிஸார் (17) தெரிவித்தனர்.

யால தேசிய சரணாலயத்தை பார்வையிட வருகைதந்து, நுழைவாயினுள் டிக்கெட்பெற தனது பணப் பையினை எடுத்து பரீட்சித்துப் பார்த்தபோது அதிலிருந்த பணம் காணாமல் போயுள்ளது. உடனே செயற்பட்ட வெளிநாட்டு உல்லாச பயணி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதில் ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் 100 டொலர், 150 யூரோ என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 'GOLDEN GATE' அணி சம்பியன்




தெரிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுபோட்டியொன்று அண்மையில் பேருவளை, காலி வீதியிலுள்ள ' Unic Futsal' உள்ளக விளையாட்டுத்திடலில் நடைபெற்றது. 12 வயதுக்குட்பட்ட அணிக்கு 06 பேர் கொண்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் பேருவளை "Golden Gate" சர்வதேச பாடசாலை உதைபந்தாட்ட அணி வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. வெற்றிபெற்ற வீரர்களை பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் ஹஸன் பாஸி தலைமையில் பாடசாலை வளாகத்தில் வரவேற்றபோது எடுத்த படம்.

## புத்தளம் பிரதேச செயலகத்தில் விசேட நடமாடும் சேவை

- பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவு இல்லாதோருக்கு ஒரே நாளில் சட்டரீதியான பதிவு வழங்கி வைப்பு
- உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சரும் பங்கேற்பு



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சும், பதிவாளர் நாயகம் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட நடமாடும் சேவையொன்று நேற்று முன்தினம் (12) புத்தளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் ஆனந்த வன்னிநாயக்க, பதிவாளர் நாயகம் சமந்த விஜேசிங்க, புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் , புத்தளம் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளர் சம்பத் வீரசேகர உட்பட பலரும் கலந்துகொண்டனர். இதன்போது புத்தளத்தில் பிறப்பு , இறப்பு மற்றும் திருமண பதிவு இல்லாதவர்களுக்கு ஒரே நாளில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இங்கு முன்னெடுக்கப்பட்டன.

மேலும், சுமார் 45 வருடங்களுக்கும் மேல் சட்டரீதியாக திருமணப் பதிவு செய்து கொள்ளாமல் வாழ்ந்த வயோதிப குடும்பம் ஒன்றுக்கு இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த மற்றும் பதிவாளர் நாயகம் சமந்த விஜேசிங்க ஆகிய இருவரும் சாட்சிகளாக ஒப்பமிட்டு திருமணப் பதிவை பெற்றுக் கொடுத்தனர்.

குறித்த நடமாடும் சேவை மூலம் பிறப்பு , இறப்பு மற்றும் திருமண பதிவு சான்றிதழ் இல்லாத 300 பேருக்கு மேற்படி சேவைகளினூடாக ஒரே நாளில் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இதேவேளை, பிறப்புச் சான்றிதழ் இல்லாத 14,000 பேருக்கு விஷேட வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு நடமாடும் சேவை மூலமாக பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பியந்த இதன்போது தெரிவித்தார்.

# கல்விக் காலத்தை ஓராண்டு குறைத்தால் முன்னதாக பட்டப்படிப்பை பெற முடியும்

உரிய காலத்தில் பரீட்சைகளை நடத்தி, உரிய காலத்திலேயே பெறுபேறுகளை வழங்க வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்விக் காலத்தை ஓராண்டு குறைக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அதனைச் செய்ய முடியுமாக இருந்தால், எமது பிள்ளைகள் ஒரு வருடம் முன்னதாகவே பட்டப்படிப்பை முடித்து, பல்வேறு துறைகளுக்கும் செல்ல முடியும். அந்தச் சவாலை நாம்

06







'வைஷாலி ஜனநாயக விழாவில்' கலந்துகொள்வதற்காக மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொ பீகார் மாநிலத்துக்குச் சென்றார். பீகார் முதலமைச்சர் ஸ்ரீ நிதீஷ் குமாரை மாநிலத் தலைநகர் பாட்னாவிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம். பீகார் மாநிலத்துக்கும் இலங்கைக்குமிடையே உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இச்சந்திப்பில் பேச்சு நடத்தப்பட்டது.

## மொரோக்கோ, லிபியா அனர்த்தம்; ஜனாஸாத் தொழுகை நடத்த கோரிக்கை

மொரோக்கோவில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கம் மற்றும் லிபியாவின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் உயிரிழந்தோருக்கு ஜனாஸா தொழுகை நடாத்துமாறு,அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வனர்த்தங்கள் மொரோக்கோவில் எட்டாம் திகதியும் லிபியாவில் பத்தாம் திகதியும் இடம்பெற்றிருந்தன.

இவ்விரண்டு அனர்த்தங்களால் மரணித்த சகோதரர்களுக்கு அல்லாஹுத்தஆலா சுவனத்தை வழங்கவும், அவர்களது குடும்பத்தார்களுக்கு பொறுமையைக் கொடுக்கவும் மற்றும் காயமுற்றிருப்பவர்கள் விரைவில் குணமடையவும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறும் உலமா சபை வேண்டியுள்ளது.

இவ்வாறான அனர்த்தங்கள், வெள்ளப்பெருக்குகள், சோதனைகள், சிரமங்கள் ஏற்படும் போது அவை நீங்க தொழுகை, நோன்பு, துஆ, திக்ர், இஸ்திஃபார் மற்றும் ஸதகா போன்ற நல்லமல்களில் ஈடுபடுவது அவசியம். இது போன்ற நிகழ்வுகளின் போது மரணிக்கும் எமது சகோதரர்களுக்காக பாவமன்னிப்புத் தேடுவதும் அவர்களுக்காக ஜனாஸாத் தொழுகை நடாத்துவதும் இஸ்லாமிய வழிகாட்டலாகும். இவ்வனர்த்தம் மற்றும் வெள்ளப்பெருக்கால், மரணித்த எமது சகோதரர்களுக்காக இன்று (18) திங்கட்கிழமை இஷாத் தொழுகையைத் தொடர்ந்து மறைவான ஜனாஸாத் தொழுகை நடாத்துமாறு மஸ்ஜித் நிர்வாகிகளையும் இமாம்களையும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டிக் கொள்கிறது.

## மரம் முறிந்து தலையில் விழுந்து 17 வயது யுவதி ஸ்தலத்தில் பலி

பூண்டுலோயா, நியாங்கந்த பஹாலுவத்த பகுதியில் மரமொன்று முறிந்து தலையில் வீழ்ந்ததில்,17 வயது யுவதி உயிரிழந்தார். இச்சம்பவம் சனிக்கிழமை (16) மாலை 06 மணியளவில் இடம்பெற்றதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து பூண்டுலோயா வழியாக அக்கரப்பத்தனை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணிக்கையிலே, திடீரென

06



## இன்னும் ஒரு வருடத்துக்கு சமுர்த்தி உதவி அவசியம்

### பட்ஜட்டில் SLPP கோரிக்கை முன்வைக்கும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில், சமுர்த்தி தொடர்பிலான முன்மொழிவுகளை வழங்கவுள்ளதாக, ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் கருத்துக்களும் இந்த முன்மொழிவுகளில் உள்வாங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும், ஒரு வருடத்திற்காவது சமுர்த்தி வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர்,

நிவாரணத் தொகையை அவசரமாக அமுல்படுத்துவதால் சில அநீதிகள் ஏற்படுவதோடு சிலர் அவதியுறுவதாகவும் தெரிவித்தார்.

ரன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, பாராளுமன்ற உறுப்பினர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் - 828

அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி (20) புதன்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்ச்சியில், "அதிபரின் வகிபாகம் ஓர் அனுபவப்பகிர்வு" என்னும் தலைப்பில் ஓய்வுநிலை பரீட்சை ஆணையாளர் ஜீ.போல் அன்ரனி உரை நிகழ்த்தவுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகம் அச்சிடல், வெளியீட்டுத்துறை பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே.பிரபாகரன் தலைமையில் புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜதந்திரிகளின் இரத்து செய்யப்படும் வாகன இலக்கங்களை வைத்து மோசடி

### அரசாங்கத்துக்குகு 15 கோடி ரூபா இழப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சில அதிகாரிகள் நாட்டிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளின் ரத்து செய்யப்படும் வாகன இலக்கங்களை வைத்து வேறு அதிசொகுசு வாகனங்களை பதிவு செய்து நீண்ட காலமாக மேற்கொண்டு வந்துள்ள மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் அதனை கண்டுபிடித்துள்ளதுடன் இந்த மோசடியினால் அரசாங்கத்திற்கு 15 கோடி ரூபா வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் தீர்வையற்ற அதிசொகுசு மோட்டார் வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதுடன் அதில் சில வாகனங்களுக்கு சொகுசு வாகனங்களின் செசி இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கத்தை உள்ளடக்கி வேறு நபர்களுக்கு பதிவு செய்து உறுதிப்படுத்தியுள்ளதன்

06

ஒக். 24, 25 ஆம் திகதிகளில்

## தென் சீனக் கடல் வலய வட்ட மேசை மாநாடு இலங்கையில்

தென் சீன கடல் வலய எட்டாவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு (South China Sea Buddhist Shenzhen Roundtable) எதிர்வரும் அக்டோபர் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறும்.

கொழும்பு ஹுனுபிட்டிய கங்காராம விகாரையால் நடத்தப்படவுள்ள இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இதன் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் ஷென்ஸன் வட்ட மேசை மாநாடு, ஒற்றுமையுடன் ஒன்றாக பயணித்து பட்டுப்பாதையின் ஞானத்தை பெறுவோம் (Walk Together in Harmony and Gather the Wisdom of the Silk Road) என்ற தொனிப்பொருளின் கீழ் வருடாந்தம் நடைபெறுகிறது.

இதில்,22 நாடுகள் பங்கேற்கின்றன.

பௌத்த மற்றம் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

## காதல் விவகாரத்தால் யாழில் பெற்றோல் குண்டு தாக்குதல்

### ஐந்து பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்.விசேட நிருபர்

காதலியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிய குற்றச்சாட்டில் காதலன் உள்ளிட்ட மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.யாழ். தாவடி பகுதியிலுள்ள வீடொன்றின் மீது சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை இளம் கும்பலொன்று திடீரென அவ்வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசியதுடன் , வீட்டின் மீதும் , வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மீதும் தாக்குதல் நடாத்தி சேதங்களை ஏற்படுத்தியது. வீட்டிலிருந்தவர்கள் மீதும் தாக்குதல்

06

## தென்பகுதி ஆழ் கடல் மீனவர் யாழ்.கடலில் விழுந்து மரணம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவர், படகிலிருந்து கடலுக்குள் தவறி விழுந்து உயிரிழந்தார்.

திருகோணமலையைச் சேர்ந்த நிமல் கருணாரத்ன (வயது 44) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். தென்பகுதியைச் சேர்ந்த பலநாள் மீன் பிடி படகுகள் , பருத்தித்துறை துறைமுகத்தில் ஓய்வெடுத்துச் செல்வது வழமையாகும். இவ்வாறு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஓய்வெடுத்த பின்னர், மீண்டும் ஆழ் கடல் நோக்கிச் சென்ற படகிலிருந்த கடற்றொழிலாளரே தவறி கடலில் விழுந்துள்ளார். இவரது சடலம், சக கடற்தொழிலாளர்களால் மீட்கப்பட்டு, கொண்டு வரப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


சுற்றாடல் அமைச்சு

காபன் நிகர பூச்சிய 2050 பயணத் திட்டம் மற்றும் இலங்கைக்கான மூலோபாயத் திட்டம் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களைக் கோருதல்

காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழுவின் (IPCC) கூற்றுப்படி, பாரிஸ் உடன்படிக்கைக்கு மதிப்பளித்து, புவி வெப்பமடைதலை 2 பாகைக்குக் குறைவாகக் கட்டுப்படுத்துவதற்கும் அந்த வெப்பநிலை அதிகரிப்பை 1.5℃ ஆகக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைத் தொடருவதற்கும், 2050 ஆம் ஆண்டில் உலகளாவிய காபன் உமிழ்வு நிகர பூச்சியத்தை எட்ட வேண்டும். அதனடிப்படையில், இற்றைப்படுத்தப்பட்ட தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs)-2021இல் காபன் நடுநிலைமையை 2050ஆம் ஆண்டளவில் அடைவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

இந்த உறுதிப்பாட்டை நிறைவேற்றும் வகையில், இலங்கைக்கான காபன் நிகர பூச்சிய 2050 பயணத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வைக் குறைக்கவும், காபன் தன்மயமாக்கம் மற்றும் சேமிப்பை அதிகரிக்கவும் காலநிலை நடவடிக்கைகளை முன்மொழிகிறது, அதேவேளை வலுசக்தி, போக்குவரத்து, கைத்தொழில், கழிவு முகாமைத்துவம், விவசாயம் மற்றும் வனவியல் என தேசிய ரீதியில் தீர்மானிக்கபட்டுள்ள பங்களிப்புகளில் (NDCs) இனங்காணப்பட்ட ஆறு முக்கிய தூண்டும் பகுதிகள் மூலம் காபன் நடுநிலைமையை அடைவதற்கு நாட்டின் சமூக-பொருளாதார சூழல், பாலினம் மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள அமுலாக்கத்தை உறுதி செய்வதற்காக, சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களின் ஏற்றுக்கொள்ளலுடன், இந்த பயனத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் வலுவானதாகவும், ஆற்றல் மிக்கதாகவும், நாட்டின் சூழலுக்கு ஏற்றவாறு உருவாகி, இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பு முழுவதும் செயல்படுத்த எளிதானதாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பயனத் திட்டம் பரந்த பங்குதாரர்களின் ஆலோசனைகள் மூலம் உருவாக்கப்பட்டது.

இலங்கைக்கான காபன் நிகர பூச்சிய 2050 பயனத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்ட வரைவு தற்போது பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் காலநிலை மாற்ற செயலகத்தின் இணையத்தளத்தில் இருக்கிறது. www.climatechange.lk. சுற்றாடல் அமைச்சு 18.10.2023 அன்று அல்லது அதற்கு முன்னதாக பின்வருவனவற்றின் மூலம் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறது.

அஞ்சல் முகவரி : பணிப்பாளர்
காலநிலை மாற்ற செயலகம்
சுற்றாடல் அமைச்சு
6வது தளம்
"சொபாதம் பியச"
இல. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை
பத்தரமுல்ல

மின்னஞ்சல் : climatesec@gmail.com

கேள்விகள் : காலநிலை மாற்ற செயலகம்: 0112034198

செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

18.09.2023

N & G Ads


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

ஆணவமின்றிப் பணிவுடன் நடத்தலே, ஆற்றலாளரின் ஆற்றல் என்பதால் அதுவே பகைமையை மாற்றுகின்ற படையாகச் சான்றோர்க்கு அமைவதாகும்.

# போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கு யோசனைகள் சமர்ப்பிக்க வாய்ப்பு

நாட்டில் போதைப்பொருட் குற்றச்செயல்கள் பெரிதும் அதிகரித்துள்ளன. இவ்வாறான அதிகரிப்பை முன்னொரு போதுமே இக் குற்றச்செயல்கள் பெற்றதில்லை.

நாடு நாலாபுறமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் கடல் மார்க்கவும் கூட போதைப்பொருட்கள் சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தி வரப்படுகின்றன. சர்வதேச கடற்பரப்பினைப் பயன்படுத்தி கப்பல்கள் ஊடாகவும் ஏற்கனவே அவை கடத்தி வரப்பட்டிருக்கின்றன. இதற்கு இந்நாட்டின் கடற்படையினர் உள்ளிட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் முன்னெடுத்த நடவடிக்கைகளும் அவற்றின் ஊடாக முறியடிக்கப்பட்ட போதைப்பொருள் கடத்தல்களும் நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

அதேநேரம் விமானம் மார்க்கவும் கூட போதைப் பொருட்கள் நாட்டுக்குள் சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்படவே செய்கின்றன. அவையும் அவ்வப்போது முறியடிக்கப்படுகின்றன. அந்த வகையில் கடந்த வாரம் ஒரு கோடி ரூபா பெறுமதியான கொக்கைய்ன் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

மேலும் போதைப்பொருட் துஷ்பிரயோகங்களையும் குற்றச்செயல்களையும் கட்டுப்படுத்துவதற்காக சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் உச்ச பட்ச நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர். சட்டங்களும் தண்டனைகளும் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் சட்டவிரோதப் போதைப்பொருட்களின் பாவனைக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானவர்கள் அவற்றுக்கு அடிமையாகியுள்ளனர். அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் வறுமையின் பிடிக்குள் தள்ளப்பட்டிருப்பதோடல்லாமல் சமூக, கலாசார நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் உள்ளனர். அத்தோடு இப்பாவனைக்கு அடிமையானவர்கள் ஆரோக்கிய ரீதியிலும் தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான செலவு மிக அதிகம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இந்த நிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி நோய் நிலைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்ற அதேநேரம், அவற்றின் பாவனைக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் விஷேட புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் தங்க வைக்கப்பட்டு புனர்வாழ்வும் அளிக்கப்படுகின்றன.

போதைப்பொருட் குற்றங்களை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் கூட, சில பாடசாலைப் பிள்ளைகள் ஐஸ் போன்ற போதைப்பொருட்களைப் பாவிக்கும் அளவுக்கு நிலைமை வளர்ச்சி பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவனையால் நாட்டிலும் சமூகத்திலும் தாக்கங்களும் பாதிப்புக்களும் அதிகரித்துள்ளது போன்று குற்றச்செயல்களும் அதிகரிக்கவே செய்திருக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் சமூக, கலாசார சீரழிவுக்கு பாரிய பங்களிப்பை நல்கக்கூடியதாக போதைப்பொருட் குற்றங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

இதன் தாக்கங்களும் பாதிப்புகளும் தெளிவாக உணரப்பட்டுள்ளன. நாட்டின் அனைத்து மட்டங்களிலும் இந்நிலைமை தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இலங்கையின் உயர் சபையாக விளங்கும் பாராளுமன்றம் கவனம் செலுத்தி இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புக்களையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ட்ரான் அலஸ் தலைமையில பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இக்குழு கடந்த ஜுன் 8 ஆம் திகதி அமைக்கப்பட்டமை தெரிந்ததே.

போதைப்பொருள் குற்றச்செயல்கள் வேகமாகப் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் குறித்த கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் இக்குழு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்கேற்ப எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் ஆர்வமுள்ள தரப்பினர் இது தொடர்பிலான தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் மின்னஞ்சல் மூலமோ அல்லது பாராளுமன்ற முகவரிக்கோ அனுப்பி வைக்க முடியும்.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் விரிவாக ஆராய்வதற்கு இக்குழு தீர்மானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சட்ட விரோதப் போதைப்பொருள் குற்றச்செயல்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளின் ஊடாக போதைப் பொருள் அச்சுறுத்தலை முழுமையாக ஒழித்துக்கட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதுவே நாட்டின் அனைத்து மக்களின் விருப்பமும் கூட. அதற்காக எல்லாத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது நாட்டின் சமூக, கலாசார மேம்பாட்டுக்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமைவதோடு போதைப்பொருள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி தனிநபர்களும் குடும்பங்களும் பாதிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# செனல் 4 ஊடக கலாச்சாரத்தை மோசமாக மீறியுள்ளது



## சுவிட்சர்லாந்தின் முன்னாள் தூதுவர் சட்டத்தரணி சரத் கோன்கஹகே

சர்ச்சைக்குரிய செனல் 4 காணொளிக்காக போலியான தகவல்களை பெற்றுக்கொடுத்து தன்னை தவறாக வழி நடத்தி பேட்டியினை பெற்றுக்கொள்வதற்கு இந்நாட்டின் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் காலை நேர நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் ஆங்கில ஊடகவியலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், செனல் 4 காணொளியில் உள்ள அநேகமான காட்சிகள் இந்நாட்டின் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையிலிருந்து எடுக்கப்பட்டதாவென சந்தேகிப்பதாகவும், சுவிட்சர்லாந்தின் முன்னாள் தூதுவரும் இந்நாட்டின் தேசிய ஊடக நிறுவனங்கள் பலவற்றில் உயர் பதவிகளை வகித்த சிரேஷ்ட அரசியல்வாதியான சரத் கோன்கஹகே தெரிவித்துள்ளார்.

அவருடனான நேர்காணலை இங்கு தருகின்றோம்.

**செனல் 4 வின் சர்ச்சைக்குரிய காணொளியில் உங்களுடைய உருவமும் குரலும் உள்ளடக்கிய காட்சிகள் பல உள்ளன. இக்காட்சிகளில் நீங்கள் எதன் அடிப்படையில் கருத்து தெரிவித்துள்ளீர்கள்?**

இலங்கையிலுள்ள தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஆங்கிலத்தில் காலைநேர நிகழ்ச்சியொன்றை நடத்தும் ஊடகவியலாளர் ஒருவரே இதற்கான ஆரம்ப முயற்சியை எடுத்துள்ளார். அவருடன் நான் நீண்ட காலமாக தொடர்பிலிருந்தேன். அது மாத்திரமல்ல அவரை அந்த அலைவரிசையில் சேர்த்துவிட்டதும் நான் தான்.

அவர் என்னிடம் வந்து பிரித்தானிய ஐ.ரி.என் செனலுக்கு ஒரு 'வொய்ஸ் கட்' தர முடியுமா? என கேட்டார். நான் அதற்கு விருப்பம் தெரிவித்தேன். அதன்படி பிரித்தானிய ஐ.ரி.என் செனல் குழுவினர் என கூறப்பட்டவர்கள் நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்ய வந்தார்கள். அவர்கள் இரண்டரை மணி நேரம் பதிவு செய்தார்கள். அவர்கள் என்னிடம் ராஜபக்ஷக்களின் கடந்த கால அரசியல் வெற்றிகள் தொடர்பாகவே வினவினார்கள். அன்று அரசியல் ரீதியாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என்ற முறையில் இது பற்றி நீண்ட விளக்கம் அளித்தேன். அதன்பின்னர் சில காலம்வரை இக்காணொளி குறித்து எந்தவித செய்தியும் இருக்கவில்லை. ஆனால் திடீரென கடந்து வாரம் இக்காணொளி வெளியானது. நான் ஆச்சரியமடைந்தேன். உண்மையில் நான் பெற்றுக்கொடுத்த காணொளி பெருமளவு எடிட் செய்யப்பட்டிருந்தது. அதில் எனது உருவமும் சில நிமிட காணொளியுமே காணப்பட்டது. அதைவிட அதிசயம் என்னவென்றால் நான் ஒருபோதும் காணொளியையோ அல்லது நேர்காணலையோ பெற்றுக்கொடுக்காத செனல் 4 அலைவரிசை இக்காணொளியை ஒளிபரப்பியதுதான். நான் இக்காணொளியை பி.பி.சி அலைவரிசையின் ஊடாகவே பார்த்தேன். எனக்கு எவ்வித அறிவித்தலும் அளிக்காமலே செனல் 4வில் எனது செய்தி ஒளிபரப்பப்பட்டது. உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக கலாச்சாரத்தை சீர்குலைத்த ஒரு சம்பவம் என நான் இதனை குறிப்பிடுவதில் தவறில்லை.

உண்மையில் அவதூறான அலைவரிசை என பெயர் பெற்றுள்ள செனல் 4 நேர்காணலை பெற்றுக்கொள்வதாக குறிப்பிட்டிருந்தால் நான் ஒருபோதும் பேட்டியளித்திருக்க மாட்டேன்.

**நீங்கள் அக்காணொளிக்காக அளித்த பேட்டி தொடர்பில் தெளிவுபடுத்த முடியுமா?**

என்னிடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக வினவினார்கள். அதற்கு நான் தெளிவாக இத்தாக்குதலுக்கு அரசியல் தொடர்பு இல்லை எனவும் தாக்குதலை மேற்கொண்டது தீவிரவாத முஸ்லிம் இளைஞர்கள் குழு எனவும் தெரிவித்தேன். அதன் பின்னர் ராஜபக்ஷகளின் அரசியல் நடவடிக்கை மற்றும் பிரபல்யம் தொடர்பாக கேட்டார்கள். நான் அது தொடர்பில் தெளிவாக எனது கருத்தை தெரிவித்தேன். ஆனால் இறுதியில் தாக்குதலை நடத்தியது முஸ்லிம் தீவிரவாத குழுவினர் என்பதற்கு எனது ஆய்வு பூர்வமான மற்றும் தர்க்க ரீதியான கருத்துக்களை தெரிவித்தேன். ஆனால் நான் கூறிய எதுவும் செனல் 4 காணொளியில் இல்லை. எனது உருவமும் நான் 30 வினாடிகள் தெரிவித்தவை மாத்திரமே காணொளியில் காணப்பட்டது. உண்மையில் என்னை தவறாக வழிநடத்தி போலியான விடயங்களை முன்வைத்து என்னிடம் பெறப்பட்ட இரண்டரை மணி நேர காணொளி மோசமாக தொகுக்கப்பட்டு அதில் காணப்பட்ட விளக்கங்கள் முற்றாக திரிபுப்படுத்தப்பட்டிருந்தன.

**★ இது உங்களுக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதா?**

நான் எனது அரசியல் கருத்துகளுக்காக எவ்வேளையிலும் ஆஜராவேன். நான் பல ஊடகங்களில் நிறைவேற்று தரத்தில் பதவிகள் வகித்தவன் என்பதோடல்லாமல் சிரேஷ்ட சட்டத்தரணியும் ஆவேன். எனது அனுமதியின்றி ஒளிபரப்பான இக்காணொளியால் நான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. அதனால் எனக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களுக்கு என்னை தவறாக வழிநடத்தி பேட்டியை பெற்றுக்கொண்ட நிறுவனத்தை போன்று இந்நாட்டின் தனியார் தொலைக்காட்சி அலைவரிசையின் காலை நேர ஆங்கில நிகழ்ச்சியை நடத்தும் ஊடகவியலாளரும் பொறுப்புக் கூற வேண்டும்.

**உங்களுடைய பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ள செனல் 4 எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய சாத்தியம் உள்ளதா?**

இது தொடர்பான அடிப்படை விடயங்களை பற்றி ஆராய்ந்து வருகின்றேன். இச்சம்பவம் மற்றும் என்னை தவறாக வழிநடத்தி பெறப்பட்ட பேட்டி மற்றும் அதற்காக பிரிட்டிஷ் ஐ.ரி.என் அலைவரிசையின் பெயரை பயன்படுத்தியமை குறித்து முறைப்பாடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளேன். அந்த முறைப்பாட்டை முதலில் பிரித்தானிய ஐ.ரி.என் அலைவரிசைக்கே முன்வைக்கவுள்ளேன். அதன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் சரியான முறையில் நடைபெறும்.

இக்காணொளி நாட்டை சங்கடத்துக்குள்ளாக்கவும் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, புரிந்துணர்வு என்பவற்றை குலைப்பதற்குமான திட்டமாக இருக்கக்கூடும். உண்மையில் செனல் 4 எப்பொழுதும் எம் போன்ற நாடுகளை நிலையற்றதாக்கி மோதலை ஏற்படுத்தி பல நோக்கங்களை வெற்றி கொள்ளும் முயற்சியையே மேற்கொள்கிறது.

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக அன்றைய எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளராக பெயர் குறிப்பிடப்படவிருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சாதகமான நிலைமை ஏற்பட்டதாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றது. இது பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

அது அர்த்தமில்லாத கதை. சில குழுவினர் கூறும் கருத்துக்கு அமைய சஹரான் போன்று கார்தினால் அவர்களும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை விரும்பினார் போன்றது. சிலர் சஹரானின் பயங்கரவாத நடவடிக்கை கோட்டாபாய வெற்றிக்கு காரணமானது என கூற முடியும். ஆனால் அந்த குரூர பயங்கரவாத தாக்குதல் ராஜபக்ஷக்களுக்கு தெரிந்தே நடந்ததாக உறுதி செய்ய எவ்வித சாட்சியமும் இல்லை. யாரும் வாய்க்கு வந்தவாறு குற்றச்சாட்டுகளை சுமத்தலாம். ஆனால் அக்குற்றச்சாட்டு உண்மை என்பது அவர்களால் உறுதி செய்யப்பட வேண்டும். இன்று மாத்திரம் அல்ல காலம் காலமாக இவ்வாறான பல குற்றச்சாட்டுகள் காணப்பட்டுள்ளன. 1959 இல் பண்டாரநாயக்கவை கொலை செய்தது சோமாராம என நிரூபிக்க கண்ணால் கண்ட சாட்சியங்கள் பல இருந்தன. ஆனால் அதனை ஏற்காதவர்களும் இருந்தார்கள். பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் புலிகள் அமைப்பு மற்றும் தேசப் பிரேமி மக்கள் இயக்கம் என்பன பல கொலைகளைச் செய்திருந்தன. விஜய, லலித், கொப்பேகடுவ போன்றவர்களின் படுகொலைகள் அவற்றில் பிரதானமானவை. ஆனால் அக்கொலைகள் அனைத்தையும் பிரேமதாசவின் தலையில் சுமத்தினார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என காலத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் அனைத்து விடயங்களிலும் உண்மை என்ன என ஆராய்ந்து குற்றம் சுமத்த வேண்டும்.

இப்ராஹிம் நானா ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியலில் இருந்தார். அவரின் பிள்ளைகள் சஹரானின் பயங்கரவாதத்துடன் இணைந்து தற்கொலை தாக்குதல் நடத்தி மரணம் அடைந்தார்கள். ஆனால் சஹரானுடன் ஜே.வி.பி. க்கு தொடர்பு உள்ளது என நான் கூற மாட்டேன். அதைவிடுத்து நிரூபிக்க முடியாதவற்றை கூறுவது அரசியல் குற்றமாக சுட்டிக்காட்டலாம். இன்று சஜித் பிரேமதாச குற்றம் சாட்டுகிறார். அவரால் அந்த குற்றங்களை நிரூபிக்க முடியாது. போலி குற்றச்சாட்டுகளால் குற்றவாளியாக்கப்பட்ட பிரேமதாசவின் மகனே இன்று உறுதி செய்ய முடியாதவற்றை பகிரங்கமாக கூறுவது கவலைக்குரிய விடயமாகும்.

இவர்கள் சஹரான் தற்கொலை குண்டு தாக்குதலில் ஈடுபட்டது கோட்டாபயவை அதிகாரத்துக்கு கொண்டு வர என கூறுகிறார்கள். அவ்வாறு என்றால் அன்று கார்தினால் அவர்களுக்கும் அரசியல் சார்பு கோட்டாபய பக்கமே இருந்தது. அவ்வாறு என்றால் சஹரான் போன்று கார்தினலும் அவரின் வெற்றியை பிரார்த்தித்தாரா? உண்மையில் இதனை ஆச்சரியத்துக்கான காரணம் என சுட்டிக்காட்ட முடியும்.

**நீங்கள் நாட்டை குழப்பத்துக்கு உள்ளாக்க திட்டம் உள்ளது என எதன் காரணமாக கூறுகின்றீர்கள்?**

தமிழ் மக்களிடையே யுத்தத்துக்கான மனநிலையை ஏற்படுத்தவே முயற்சி செய்கின்றார்கள். அத்திட்டத்தின் பின்னால் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இருக்கின்றார்கள். உண்மையில் தமிழ், முஸ்லிம் என எம்மிடையே பேதம் கிடையாது. நாம் வேலைத்தளத்தில், காரியாலயத்தில் ஒற்றுமையாக பணிபுரிகிறோம். ஆனால் சிலருக்கு அந்த ஒற்றுமையை காண பொறுக்க முடியவில்லை. அவர்கள் தங்களின் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள இனங்களுக்கு இடையே குரோதத்தை விதைக்க முயற்சிக்கின்றார்கள். யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தீராத பகை உண்டு. இவர்களுக்கும் அதுபோன்ற குரோதத்தை சிங்கள, தமிழ் இருதரப்பாரிடையும் ஏற்படுத்துவதே தேவையாக உள்ளது. அதனால் நான் தமிழ் மக்களிடம் மிகவும் அன்புடன் அரசியல் சூழ்ச்சியில் சிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

**30 வருட கால யுத்தத்தின் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட ஒற்றுமையை குலைத்து புரிதலின்மையை ஏற்படுத்த செனல் 4 நடவடிக்கை எடுப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இது பற்றிய உங்களுடைய கருத்து?**

எமது நாடு யுத்தத்தின் பின் ஒற்றுமையாக முன்னோக்கிச் செல்லும் நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பத்தில் முயற்சி எடுத்தது. அன்று எமக்கு சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் கூட வெற்றியடைய கூடியதாக சர்வதேச ஒத்துழைப்பு காணப்பட்டது

அந்நிலமையில் செனல் 4 எமது நாட்டின் யுத்த குற்றங்கள் நடைபெற்றதாக கிளீன் பீல்ட் என்னும் பெயரில் ஆவண திரைப்படம் ஒன்றை முன் வைத்தது. அவர்கள் இறுதி யுத்தத்தின்போது 40 ஆயிரம் பேர் வரை சமூக கொலை செயப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையில் அப்படி ஒரு படுகொலை நடக்கவில்லை. அக்காலத்தில் யுத்த களத்தில் ஏழாயிரம் மரணங்கள் அளவிலேயே நிகழ்ந்திருந்தன. செனல் 4 வின் இந்த ஆவண திரைப்படத்தால் நாட்டுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. செனல் 4 இன்னும் புலனாய்வு பிரிவை தொடர்புபடுத்தி போலியான தகவல்களை சமூகத்திற்கு வழங்குவதற்காகவே முயற்சி செய்கின்றது.

**உயிர்த்த தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என கருத்துக்கள் கூறப்படுகின்றன. உண்மையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியமா?**

சர்வதேச விசாரணை அல்ல தேவைப்படுவது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படும் உள்ளூர் விசாரணையாகும். அதற்குத் தேவையான சர்வதேச புகழ் பெற்ற நபர்கள் இங்கும் இருக்கிறார்கள்.

உதித குணவர்தன
தமிழில் – வீ.ஆர். வயலட்





# புத்திஜீவிகளை நாட்டுக்கு வழங்கும் மருதானை புனித ஜோசப் கல்லூரி

இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய சாதனையை நிலைநாட்டிய மருதானை புனித ஜோசப் கல்லூரி, கல்வி நவீனமயமாக்கலில் எப்போதும் முன்னோடியாகவும் புதுமைகளை உருவாக்கவும் தொடங்கப்பட்டதிலிருந்து அதிக புத்திஜீவிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் கல்வியாளர்களை நாட்டிற்கு வழங்கியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் வெளிச்சத்தில், இக்கல்லூரி மாணவர்களை தேசிய பொருளாதாரத்தை உயர்த்துவதில் பங்குதாரர்களாக மாற்றுவதற்கு பொருளாதார ரீதியாக முன்னேறும் சமகால உலகிற்கு ஏற்ற தொழில்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

ஒரு பொறுப்புள்ள கல்லூரியாக, புனித ஜோசப் கல்லூரி நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சரிசெய்ய உதவிக்கரம் நீட்டவும், இந்த இலக்கை அடைய தனது மாணவர்களைப் பபயன்படுத்துகின்ற ஓர் பாரிய பொறுப்பையும் கையேற்றுள்ளது.

புனித ஜோசப் கல்லூரி, தனது முன்மொழியப்பட்ட மற்றும் தொடரும் திட்டங்களின் முன்முயற்சியாக, தனது மாணவர்களை தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய உலகத்திற்கு ஏற்ற தொழில் வல்லுநர்களாக மாற்றவும், தொழிற் சந்தையும் கல்வி முறையும் ஒன்றோடொன்று இணைக்கப்படவில்லை என்ற தவறான எண்ணத்தைத் மாற்றுகின்ற ஓர் திட்டத்தைத் தற்போது தொடங்கியுள்ளது.

அத்தகைய சூழ்நிலையின் காரணமாக இணையாகப் பயணிப்பது வேலையின்மைக்கான சாத்தியக்கூறுகள் மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கும். புனித ஜோசப் கல்லூரி புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்நாட்டின் கல்வி முறைக்கு ஒரு புதிய முகமாற்றத்தை கொடுக்க பாடுபடுகிறது.

கல்லூரியானது தனது மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான திட்டத்தைத் தொடங்கியுள்ளது, அவர்களை தொழிற் சந்தைக்கு ஏற்ற தொழில்ரீதியாகத் தகுதியான நிபுணர்களாக மாற்றும் வகையில் பொருத்தமான ஸ்ட்ரீமைத் தேர்ந்தெடுக்கும். ஒவ்வொரு வருடமும் க.பொ.த (உ/த) மாணவர்களை இலக்கு வைத்து இவ்வாறான நிகழ்ச்சிகளை நடத்த கல்லூரி திட்டமிட்டுள்ளது. இதன் தொடக்க விழா அண்மையில் அதன் பொன்ஜீன் மண்டபத்தில் கல்லூரி அதிபர் அருட்தந்தை, டொக்டர் ரஞ்சித் அன்ட்ராடி தலைமையில் அன்மையில் நடைபெற்றது. புனித ஜோசப் கல்லூரியின் 99 ஆம் ஆண்டு பழைய குழுவின் தலைவர் சுரந்த பொரலஸ் ஸாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நிகழ்ச்சிக் குழுவின் தலைவர் ஷெனால் கொலோன் உள்ளிட்ட ஷெனல் கொலோன், அதிகாரம்கே இஷார, ஸ்ரீமல் விக்கிரமசிங்க, தரிந்து சாமர குழுவினர் முக்கிய பங்கினை வகித்தனர். புனித ஜோசப் கல்லூரியில் சுமார் 450 மாணவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.



# இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான மட்டக்களப்பு சர்வதேச திரைப்பட விழா

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மட்டக்களப்பு சர்வதேச திரைப்பட விழா இம்மாதம் 13 ஆம் திகதி முதல் 21 வரை நடைபெறுகிறது. இலங்கையில் சமூக ஒத்திசைவையும் சமாதானத்தையும் வலுப்படுத்துவதற்கான செயற்திட்டம் (SCOPE) மூலம் இடம்பெறும் இத்திரைப்பட விழாவை சிறகுநுனி கலை, ஊடக மையம் ஏற்பாடு செய்துள்ளது.

'சமூக ஒத்திசைவுக்காக சினிமா' எனும் தொனிப்பொருளிலான இத்திரைப்பட விழா கடந்த 13ஆம், 14 ஆம் திகதிகளில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீட மண்டபத்திலும் நேற்றும், இன்றும் நாளையும் கல்லடிப் பாலம், கிழக்கு பல்கலைக்கழக CEDEC மண்டபம் (ஜி.வி வைத்தியசாலை அருகே) ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 20ஆம், 21 ஆம் திகதிகளில் திருகோணமலை ஜுபிளி மண்டபத்திலும் நடைபெறுகிறது.

தமிழில் உபதலைப்பிடப்பட்ட அல்லது டப் செய்யப்பட்ட ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், ஈரான், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கென்யா, நைஜீரியா, இலங்கை, இந்தியா, எகிப்து, பொஸ்னியா ஆகிய நாடுகளின் உலகத்தரமான 19 முழுநீளத் திரைப்படங்கள், ஆவணப் படங்களை இத்திரைப்பட விழாவில் அனைவரும் இலவசமாகக் கண்டு களிக்கலாம்.

குறிக்கப்பட்ட தினங்களில் திரைப்படங்கள் காலை 9.00, பி.ப. 2.00 மாலை 6.00 என மூன்று காட்சிகளாக இடம்பெறும். காலை நேரக் காட்சிகள் க.பொ.த உயர்தர/சாதாரண தர வகுப்பு பாடசாலை மாணவர்களையும் பிற்பகல் காட்சிகள் அரச ஊழியர்களையும் மாலைநேரக் காட்சிகள் பொதுவான பார்வையாளர்களையும் இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. திரையிடல்களின் நிறைவில் பார்வையாளர் கருத்துப்பகிர்வு இடம்பெறும்.

தொடராக மூன்று நகரங்களில் 7 தினங்கள் பயணிக்கும் இத்திரைப்பட விழாவின் பிரத்தியேக வைபவம் செப்டம்பர் 17 மாலை 5.30க்கு பழைய கல்லடிப் பாலத்தில் இடம்பெறவுள்ளது. இப்பிரமாண்ட வெளிப்புற நிகழ்வில் இலங்கையின் பிரபல இசை விற்பன்னர் அன்ரனி சுரேந்திரா உள்ளிட்ட கலைஞர்களது இசையாற்றுகையும் அதனைத் தொடர்ந்து சிறப்புத் திரைப்படக்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வரலாற்றுக் காலந்தொட்டு நட்புறவோடு வாழ்ந்த கிழக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் கடந்த நான்கு தசாப்த காலமாக நிலவி வரும் விரிசலை நிவர்த்திக்கும் ஒன்றுகூடல்கள் இன்று அவசியமாக உணரப்படுகின்றன. பாடசாலைகள், நிர்வாகப் பிரிவுகள், வைத்தியசாலைகள், விளையாட்டு மைதானங்கள் என அனைத்தும் இனரீதியாகப் பிரிந்துள்ள சூழலில் இரு சமூக இணைவுக்கான மார்க்கமாக எஞ்சியிருப்பது சினிமாவாகும். அத்துடன் இளந்தலைமுறையினரை அபரிமிதமாக ஈர்க்கும் சக்தியாக தற்கால டிஜிட்டல் உலகில் சினிமா பரிணமித்துள்ளது. ஒன்று சேர்ந்து கற்பதற்கும் பழகுவதற்குமான வாய்ப்பற்றுள்ள கிழக்கின் தற்கால தமிழ், முஸ்லிம் சந்ததியினரைச் சினிமா மூலம் ஒன்றிணைக்க முடியுமெனும் நம்பிக்கையோடு சிறகுநுனி கலை ஊடக மையம் 2018 முதல் பல்வேறு திரைப்பட நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# கண்டி குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஞானதீப விருது விழா

**கண்டி குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஞானதீப விருது வழங்குதல் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் முன்னாள் அதிபர் எஸ். சிவ ஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மலையக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் கலந்து கொண்டு சிறப்பித்தார். கிழக்கு மாகாண முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் மூக்கையா பிரதான வளவாளராகக் கலந்து கொண்டார். இதன் போது விசேடமாக மலையக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் ஞானதீப விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மூக்கையாவுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.**

**இதில் மலையக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் அவர்களால் குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் பகல்போசன சமையலுக்கென சமையல் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.**

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மலையக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேஷன் உரையாற்றும் போது...**

## மலையக கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் நடேஷன் சுந்தரேசனால் பாடசாலைக்கு உபகரணங்கள் வழங்கல்...









நாங்கள் எவ்வளவுதான் பணிகள் புரிந்தாலும் இடைஞ்சல்கள் சவால்கள் வருவது வழக்கம். இது உந்து சக்தியாகவும் மருந்தாகவும் அமையும் என்று கூறி எனக்கு கிடைத்த இந்த பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

உலகெங்கும் எமது இந்து மதத்தின் பெருமையை எடுத்துச் சென்ற சுவாமி விவேகானந்தரின் பெயரிலே இயங்கும் மலையக மண்ணில் அமைந்துள்ள பாடசாலையில் காலடி வைத்தமையையிட்டு நான் மிகவும் சந்தோசம் அடைகின்றேன். பெருமையும் அடைகின்றேன்.

என்னுடைய சமூகப் பணிகளுக்கு வழிகாட்டியாக இருந்து வருகின்ற பேராசிரியர் எஸ். மூக்கையா மற்றும் பேராசிரியர் சந்திரபோஸ் ஆகிய இருவருடைய ஊக்குவிப்பின் காரணமாகத் தான் இந்த விருது கிடைத்திருக்கின்றது. நிச்சயமாக எனது பெற்றோர்களுக்குத் தான் இந்த விருதை நான் சமர்ப்பிக்க வேண்டும். ஈன்ற பொழுதும் தன் மகனைச் சான்றோர் எனக் கேட்ட தாய் என்று சொல்வார்கள். அதாவது என்னுடைய பெற்றோர்களுக்கு என் கடமையைப் பூர்த்தி செய்திருக்கின்றேன். இன்னும் செய்யவுள்ளேன். அந்த வகையில் விருதினைச் சமர்ப்பித்து விட்டு மென்மேலும் அவர்களுடைய பெயர் ஓங்க சமூகப் பணிகளை மேற்கொள்ளச் சித்தமாகவுள்ளேன் என்பதை இந்த இடத்தில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது மலையகப் பிரதேசத்தின் கல்வி நிலையை நாங்கள் அறிந்து வைத்துள்ளோம். பின்தங்கிய நிலையில் இருக்கின்றோம். இப்பொழுது இந்த நாட்டின் அரசியலில் நல்ல தலைமைத்துவம் கிடைத்திருக்கின்றது. நல்ல சூழல் நிலவுகின்றது. நல்ல அரசியல் கட்டமைப்புக்கள் இருந்தாலும் அவர்களால் எல்லா அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். மலையகத்தின் மாற்றத்திற்கான தீர்வு கல்வி. கல்வி ஒன்றேதான். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு பட்டதாரிகள் உருவாக வேண்டும். இதைத் தான் நண்பர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அவர்கள் தெரிவித்து வருகிறார்.

மாணவர்கள் மென் திறமைகளை வளர்க்க வேண்டும். வானத்தைத் தொட வேண்டும் என்று வழிகாட்டப்படும் தலைமைத்துவப் பயிற்சி மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும். அத்தகைய வழிகாட்டல் கருத்தரங்குகளை நாங்கள் மலையகப் பாடசாலைகளில் செய்து வருகின்றோம். அது முக்கியம்.

எமது திட்டத்தின் அடிப்படையில் எவ்வாறு உயர் கல்வியினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் மென் திறமைகளை எவ்வாறு வளர்த்துக் கொள்வது பற்றி நாங்கள் மலையக மாணவர்களுக்கான வழிகாட்டல்களைச் செய்து வருகின்றோம். இதனை இரு பேராசியர்கள் மாணவர்களுடைய காலடிக்குச் சென்று வழிகாட்டல் உரைகளை நிகழ்த்தி வருகின்றனர். இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காக எமக்கு ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றிய அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூன்றாவது கட்டம், கல்வியில் உயர்ச்சி பெற்றாலும் அறநெறி இருத்தல் வேண்டும். நாங்கள் படித்து விட்டு எமது பெற்றோர்களை மறக்கக் கூடாது. நாம் பிறந்த நாட்டை மறக்கக் கூடாது. நமது இந்து சமயத்தை மறக்கக் கூடாது.

உலகெங்கும் எமது பட்டதாரிகள் நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போல் நாமும் வர வேண்டும். ஒருவரால் இன்னும் 50 பட்டதாரிகளை உருவாக்க முடியும். அது தான் என்னுடைய நோக்கம். நமது மலையகத்தில் இருந்து நிறையப் பட்டதாரிகள் உருவாக வேண்டும். உலக நாட்டை நோக்கி இன்னுமின்னும் அதிகளவிலான பட்டதாரிகள் வெளிநாடுகள் சென்று நிறைய சம்பாதிக்க வேண்டும். அதேபோல் அங்கு இருப்பவர்கள் மலையக மக்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

இதன் காரணமாக அவர்களோடு சேர்ந்து நாமும் பங்காற்ற வேண்டிய வர்களாக இருக்கின்றோம். நாங்கள் தான் எங்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் நான் ஹப்புத்தளையில் பிறந்தவன். அவுஸ்திரேலியாவில் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஏனென்றால் வடபுலத்தில் இருந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வருபவர்கள் நிறையப் பேர் வடபுலத்திலுள்ள பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்காக நிதி உதவிகளைத் திரட்டி உதவி செய்து வருகிறார்கள். அவைகளைப் பார்த்த பின்பு எமது மலையகத்தில் வாழ்கின்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அவர்களைப் போன்று பெரியளவில் செய்யா விட்டால் நம்மால் முடிந்தளவு ஏதாவது செய்வோம் என்ற அடிப்படையில் உங்கள் பாடசாலைக்கு வருகை தந்துள்ளேன். இந்தப் பணி ஒருவர் இருவர் செய்யும் பணியல்ல. பலரும் சேர்ந்து செய்யவதாகும். மலையகத்தில் கல்வி கற்று இன்று இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பங்களிப்பு மலையக மக்களுக்கு மிக மிக அவசியம்.

எவ்வளவுதான் அரசியல்வாதிகள் தம் மக்களின் பிரதிநிதியாக இருந்தாலும் அவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. அதுதான் யதார்த்தம். அவர்களால் மக்களின் தேவையை பூரணமாக பூர்த்தி செய்ய முடியாது. தற்போது நான் தனி மனிதனாக செய்து வருகின்றேன். இதைத் திறன் படச் செய்து காட்டினால் என்னோடு சேர்ந்து இயங்குவதற்கு நிறையப் பேர் வருவார்கள். என்னோடு கைகோர்த்துக் கொண்டு பங்களிப்பு நல்க, செயற்பட வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இப்பாடசாலையின் மண்டபத்தின் திருத்தப் பணிகளையும், முன்பள்ளிப் பாடசாலையினையும் நிர்மாணித்துக் கொடுக்க முயற்சி செய்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.





### கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் எஸ். முக்கையா

அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கு வருகை தந்துள்ள நடேசன் சுந்தரேசன் அவர்கள் மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பங்களிப்புச் செய்வது பாராட்டத்தக்க விடயமாகும். எமது மாணவர் சமூகத்திற்கு நல்ல உயரிய அபிலாஷைகளையும் கல்வி வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற கால கட்டத்தில் நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். நான் 1960 களில் மத்திய பகுதிகளில் பல்கலைக்கழகம் சென்றேன். அப்பொழுது பல்கலைக்கழகத்தில் பல நிகழ்வுகள் நடைபெறும்.

2000 மாணவர்கள் கல்வி பயிலும் நேரத்தில் 28 பேர் இருந்தால் காந்த கல்லைக் கொண்டுதான் இழுத்துப் பார்க்க வேண்டும். அந்த காந்தக் கல்லில் என்னவென்று ஒட்டிக் கொள்வது ஒன்றுமில்லை.ஏதோ ஒரு காரணத்திற்காக நாங்கள் அப்பொழுது மலையகத்தில் இருந்து வந்தவர்கள் என்று சொல்வதற்கு உற்சாகப்படுத்தப்படுவதில்லை. பேராசிரியர் தனஜெயராஜ் அவர்கள் தமிழ் துறைத் தலைவராக இருந்தார். அவரைச் சிங்கி என்று அழைப்பார்கள். அவர் தான் என்னுடைய பெயரை அறிந்திருந்தவராக இருந்தார்.

இன்று ஏனைய பல்கலைக்கழகங்களில் வந்திருப்பவர்கள் வருடா வருடம் ஒன்று கூடலை உற்சாகத்துடனும் பெருமையுடனும் நடத்துவார்கள். நாங்களும் அதற்குச் சொல்லுவோம். இப்பொழுது நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் 2 இலட்சம் பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி பயிலும் போது 2500 மலையக மாணவர்கள் இருக்கிறார்கள். தற்போது 600, 700 பேர் அளவில் பல்கலைக்கழகத்திற்குச் செல்லுகிறார்கள். நாங்கள் வளர்ந்திருக்கின்றோம். ஆனால் இல்லை என்று சொல்லவில்லை. இவை போதுமா என்ற கேள்விதான் எழுந்திருக்கின்றது. உயர் கல்வித் துறையில் திறந்த பல்கலைக்கழகம் முதல் ஏனைய பல்கலைக்கழகம் வரையிலும் 8 எட்டு இலட்சம் பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் நாங்கள் கொஞ்சப் பேர் இருந்து கொண்டு அதைப் பெரிதாகப் பேசி திருப்தி அடைபவர்கள் இருக்கிறார்கள். அது அவர்களுடைய போதும் என்ற மனப்பான்மையாக இருக்கலாம். இது அவ்வளவு ஆரோக்கியமான விடயமல்ல. இது எங்கே போதுமானது. உயர் கல்வி விடயத்திலே மாணவர்களாகிய நீங்கள்தான் முயற்சி செய்து சாதிக்க வேண்டும். ஆசிரியர் இதற்கான மாற்றத்தை எப்படிக் கொண்டு வரலாம் என்று யோசிக்க வேண்டும். போட்டியான உலகத்திலே பெறுமதி வாய்ந்த விடயங்களை அடைவதானால் கடும் முயற்சிகள் செய்ய வேண்டும். ஒன்றுமே இலேசாகக் கிடைப்பதும் அல்ல. இன்று அதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. பெரும்பாலான தோட்டப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் இருக்கிறது. அதன் முக்கியத்துவம் என்னவென்றால் உங்கள் வாழ்க்கையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவை. என்னோடு அக்கால கட்டத்தில் தோட்டப் பகுதிகளில் இருந்த படித்த மாணவர்கள் சொல்லுவார்கள் மாலை 6.00 அல்லது 7.00 மணிக்குள் படித்து முடித்து விட வேண்டும். மின்சாரம் இல்லை. எங்களுடைய வீட்டிலும் ஆக பெட்ரோல் மெக்ஸ் விளக்குத் தான் இருந்தது. அந்த பெற்றோல் மெக்ஸ் வந்த பிறகுதான் பெரிய மாற்றம் ஏற்பட்டது. எனவே இந்த மின்சார விளக்கு என்பது கல்விக்கு மிக முக்கியமானது. இதை வைத்து கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

மாணவர்களாகிய நீங்கள் கல்வி கற்பது வெற்றியடைவது என்பது இது உங்களுக்கு மாத்திரம் அல்ல. நீங்கள் மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டிய உத்வேகம். அது உங்களுடைய அங்கீகாரம். ஆசிரியர்கள் பெறும் சம்பளம் பெரிய சம்பளம் அல்ல. அது அவர்களுக்கு இறுதிக் காலங்களில் ஆத்ம திருப்தியை ஏற்படுத்தக் கூடியவை. பெரும்பாலானவர்கள் இதன் முக்கியத்துவத்தை உணர்வதில்லை.ஆகவே உங்களுக்கு கிடைக்கப்பெற்ற தொழில் மிகவும் கௌரவமான நல்ல தொழில். இதனால் உங்களது சேவையின் மூலம் இறுதி காலப் பகுதிகளில் நீங்கள் நல்லதொரு காரியத்தைச் செய்த ஆத்ம திருப்தியோடு வாழலாம். மாணவர்கள் கற்று முன்னேறும் போது அது உங்களுக்கு மாத்திரமல்ல நமது பின்தங்கிய சமூகத்திற்கு நீங்கள் முன்னோடியாக இருந்து அவர்களை ஊக்கு வித்தீர்கள் என்ற ஒரு பெருமை உங்களுக்கு உண்டு.

எனவே பின்தங்கிய சமூகத்தில் இருந்து வந்த ஆசிரியர்களானாலும் சரி மாணவர்களானாலும் சரி நமக்கும் பெரிய சமூகப் பணி இருக்கின்றது. ஆசிரியர்களும் மாணவர்களும் நம்மை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இது ஒரு அட்சயபாத்திரமல்ல. எடுத்துப் போடப் போட திருப்பவும் வந்து கொண்டு இருக்காது.



### கண்டி குண்டசாலை விவேகா-னந்தா தமிழ் மகா வித்தியாலய அதிபர் எஸ் சிவஞானசுந்தரம்

'சித்திரமும் கைப் பழக்கமும் செந் தமிழும் நாற்பழக்கமும் வைத்ததொரு கல்வியும் மனப்பழக்கம் கொடையும் நற்பும் தகையும் பிறவிக் குணம்' என்பார்கள்

எனவே கொடை என்பது சிலருக்கு பிறவியிலே பிறந்த குணம் என்பார்கள். ஆகவே தான் கொடையினைச் செய்து வருகிறார்கள். கிட்டத்தட்ட ஆறு ஏழு மாதங்களுக்கு முன் நடசேன் சுந்தரேசன் அவர்களுடன் தொடர்பு கொள்ளக் கிடைத்தது. அந்த வகையில் எமது நாட்டுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவாவில் கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள சில தமிழ் பாடசாலைகளுக்குச் சென்று பல்வேறு உதவிகளை வழங்கியிருக்கிறார். மலையக தமிழ் கல்வி அபிவிருத்தி திட்டத்தின் மூலம் பல உதவிகள் செய்து வருகிறார். இவ்வாறான ஒருவர் எமது பாடசாலைக்கு வருகை தந்தது எமக்குப் பெருமைக்குரிய விடயமாகும். அவுஸ்திரேலியா நாட்டில் இருந்து எங்களுடன் ஆறு ஏழு மாதங்கள் தொலைபேசியில் உரையாடினோம்.இந் நிகழ்வில் தான் அவரைச் நேரடியாகச் சந்திக்கக் கிடைத்தது.

உண்மையில் மலையக இருநூறு வருட காலத்தில் நாம் எங்கு இருக்கின்றோம். ஏன் நாம் அந்த இடத்தில் இருந்து இன்னும் நகர முடியாமல் இருக்கின்றோம்.எனினும் எங்களை நகர்த்திச் செல்வதற்காக எங்களுடைய மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறப்பதற்காக புதிய செயற்கை நுண்ணறிவுக் கற்கை நெறிக்குள் எவ்வாறு கொண்டு செல்லலாம் என்ற அவாவுடன் எமது பாடசாலைக்கு வருகை தந்துள்ளார் நடசேன் சுந்தரேசன். அத்துடன். மலையக மண்ணின் மைந்தன் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். மூக்கையா வருகை தந்துள்ளார். மலையகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தான் இவ்வாறு பிரகாசிக்கிறார்கள். அவர்களுக்கும் ஓர் எண்ணம் இருக்கிறது எமது சமூகத்தை முன்நோக்கிச் கொண்டு செல்ல வேண்டும் என்று. இத்தகைய பெரியார்களுடைய புனித பாதங்கள் எமது பாடசாலை மண்ணின் பூமியில்பட்டது, பெருமையாக இருக்கிறது.

எங்கள் பாடசாலையின் கல்வி மறுமலர்ச்சியானது சுமார் பத்து வருட காலமாக க. பொ. த சாதாரணப் பரீட்சையில் 100 விகிதம் சித்திகளைப் பெற்று வருகிறோம். கணித, விஞ்ஞானப் பாடம் உட்பட அநேகமாக இவ்விரு பாடங்களிலும் Cக்கு மேலான பெறுபேறுகளைப் பெறுகிறார்கள். அந்த வகையில் இந்தப் பாடசாலை சமுதாயத்திற்கு சிறந்த பெறுபேறுகளை வழங்கி வருகின்றது. ஒரு மாணவனும் பரீட்சையில் தோல்வியடைவதில்லை. எனினும் கணித, விஞ்ஞானத் துறையில் ஆசிரியர் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன. இந்தக் குறைபாட்டை நிர்வத்தி செய்யும் வகையில் இப்பாடங்களை மீட்டிக் கொள்வதற்காக செயற்கை நுண்ணறிவு மின் பொறியியல் தொழில் நுட்ப வகுப்புக்கள் நடசேன் சுந்தரேசன் அவர்களினால் ஏற்படுத்தப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.



**இக்பால் அலி**

## ஆசிய கிண்ணம்....

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 15. 2 ஓவரில் சகல விக்கட்டுகளையும் இழந்து 50 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக மெஹமட் சிராஜ் 6 விக்கெட்டுகளையும் பாண்டியா 3 விக்கெட்டுக்களையும் பும்ரா 01 விக்கெட் டையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டியின் ஆரம்பம் முதலே இந்திய பந்துவீச்சாளர்களின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல், இலங்கை அணியினர் தடுமாற்றத்துடனேயே விளையாடினர்.

50 ஓவர்களில் 51 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, விக்கெட் இழப்பின்றி 6.1 ஓவர்களில் 51 ஓட்டங்களைப் பெற்று ஆசிய கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

## TNA இதுவரை....

நாங்கள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கூறியதே சத்தியம் என்பதையும் காலம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவரது உத்தியோகபூர்வ சமூக ஊடகத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இனப்படுகொலையிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றுவது யார்? தமிழினத்தைக் காட்டிக்கொடுப்பது யார்? என அவர் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

## ஐ.நா.பொதுச் சபையில்...

வரை இம்முறை கூட்டத்தொடர் நடைபெறும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி இக்கூட்டத்தொடரில் பங்கேற்று, உரைநிகழ்த்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடருக்கு இணையாக இன்று 18 நடைபெறவுள்ள 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், அன்று ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன், கடல்சார் நாடுகளுக்கான ஆசியபசுபிக் தீவு நாடுகளின் கலந்துரையாடலிலும் பங்கெற்கவுள்ளார்.

## வழக்கு பொருட்களாக...

பொலிஸ் நிலையத்தினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேற்படி வழக்குப் பொருட்களான தங்க நகைகளை, முறைப்பாட்டாளர்களிடம் மீள வழங்குமாறு

கடந்த ஜூலை 31 இல், நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த வகையில் சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகர் அந்த நீதிமன்ற உத்தரவை உதாசீனப்படுத்தி, அந்த தங்க நகைகளை நுகேகொட மற்றும் மகரகம நகரங்களில் உள்ள நகைக்கடைகளில் அடகு வைத்து பணம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கு அமைய, அக்மீமன பிரதேசத்தில் மறைந்திருந்த மேற்படி பொலிஸ் உப பரிசோதகரை கைது செய்ய, நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சனல் 4 க்கு...

பிரச்சாரங்களில் ஈடுபடுபவர்களென நன்கறியப்பட்டவர்கள் சனல் 4 ஊடகத்தினர் என தெரிவித்துள்ள அவர், இவர்களின் செய்திகள் நம்பகதன்மையற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

கேள்வி 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து செனல் 4 சமீபத்தில் வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா?

பதில் அவர்கள் தெரிவித்துள்ள விடயங்களிலுள்ள உண்மையை ஆராய்ந்து உறுதி செய்த பின்னர், அவர்களுக்கு எதிராக எங்களால் நடவடிக்கை எடுக்கமுடியுமென்று தெரிவித்தார்.

## தமிழகத்தில்...

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழா் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருக்காக, தமிழக அரசு சார்பில் வீடு கட்டும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பா் மாதம் வேலூரை அடுத்து மேல்மொணவூரில் ஆரம்பித்தார்.

இத்திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக 142.16 கோடி ரூபாவில் மொத்தம் 3,510 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. தற்போது கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மேல்மொணவூரிலுள்ள இலங்கைத் தமிழா் முகாமில் நேற்றுக் காலை நடந்தது.

இதில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று காணொளிக் காட்சி மூலம் 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கைத் தமிழா் முகாம்களில் மொத்தம் 79.70 கோடிரூபாவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 புதிய வீடுகளை திறந்து வைத்தார்.

## திரைப்பட நடிகர்....

அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பில் பிரபு தேவாவுடன் வருகை தந்திருந்த திரைப்பட குழுவினரும் கலந்து கொண்டனர்

## அனுமதி பெற்ற.,...

(16) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இவ்விசேட கூட்டத்தை தொடர்ந்து, இரணைமடுப் பகுதிக்கு கண்காணிப்பு விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது. அங்கு சென்றிருந்த

அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவினர், இப் பகுதியில் அண்மைய நாட்களில் மணல் அகழ்வு இடம்பெறவில்லை என, உறுதிப்படுத்தினர்.

அதேவேளை, மறுஅறிவித்தல் வரை மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதை நிறுத்துமாறு இக்கூட்டத்தில் வைத்து அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

நாளை செவ்வாய்க்கிழமையில் (19) இருந்து அமுலுக்கு வரும் அனுமதி பெற்ற மணல் அகழ்வு மற்றும் மணல் ஏற்றும் செயற்பாடுகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்துமாறும் அமைச்சர் இதன் போது உத்தரவிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வை முழுமையாக நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே தற்காலிக தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தம் செய்த...

யில் வெளியிடப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழித்து, அதற்குப் பதிலாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது.

இது தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு, கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது. இதன்படி கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

எவ்வாறாயினும் இச்சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ள சில சரத்துக்கள் தொடர்பில், பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் வெளிப்பட்டன. இதையடுத்து அதனை திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை உள்ளடக்கி புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், இ தற்கு எதிரான ஆட்சேபனைகளை உயர் நீதிமன்ற த்தில் மனுக்களாக தாக்கல் செய்ய முடியும் என்றும் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் உச்சத்தை...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர், மர்ஹூம் எம். எச்.எம்.அஷ்ரப்பின் 23 ஆவது வருட நினைவு தின தேசிய நினைவேந்தல் நிகழ்வு (16) சாய்ந்தமருது பௌஸி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இந்தியா வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் கவிமாமணி பேராசிரியர் முனைவர் அப்துல் காதர் கலந்து கொண்டு அஷ்ரப்பின் அரசியல் முன்னெடுப்புகள், இலங்கை அரசியலில் அஷ்ரப்பின் வகிபாகம், இலங்கை தேசிய அரசியலில் அஷ்ரப்பின் சாதனைகள், முஸ்லிம் அரசியலில் அஷ்ரப் சாதித்தவை, சர்வதேச தொடர்புகளை பேண அஷ்ரப் கையாண்ட முறைகள் தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தினர்.

மு.கா. தவிசாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.எம்.மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் ஆத்ம ஈடேற்றத்துக்காக விசேட கத்தமுல் குர்ஆன், மற்றும் விசேட துஆ பிரார்த்தனை நடைபெற்றது.

கல்முனை மாநகர முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீரா சாஹிப்பின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கம் நாட்டின் ஆட்சிக் கதிரைகள் பக்கம் இருந்தாலும், எதிர்த் தரப்பில் இருந்தாலும், முஸ்லிம் சமூகத்தின் ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸேதானாகும். மறைந்த தலைவர் அஷ்ரப் தமது அந்திம காலத்தில் முன்னெடுத்து விட்டுச் சென்ற விடயங்கள் பல உள்ளன.

முக்கியமாக அவர் அந்திம காலத்தில் கட்சியோடு முரண்பட்டு இருந்தவர்கள் மற்றும் மாற்றுக் கட்சிகளில் இணைந்து இருந்தவர்களை வீடு வீடாகச் சென்று சந்திப்புகளை நடத்தி, முஸ்லிம் காங்கிரஸுக்குள் உள்வாங்கும் முயற்சிகளைச் செய்து வெற்றியும் கண்டார்.

இந்த வகையில் வெளியில் உள்ளவர்களையும் நமது பாசறையில் இணைப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுக்கவேண்டும். இதற்காக முஸ்லிம் காங்கிரஸின் கதவு எப்போதும் திறந்தே இருக்கும்.

நமது அரசியலைப் பொறுத்தவரை அஷ்ரப்புக்கு முன்பும் பின்பும் என்றே எழுதப்படும்.முஸ்லிம் காங்கிரஸை மலினப்படுத்தி, சிறுமைப்படுத்தி, சிதைத்து விடும் எத்தகைய முயற்சிக்கும் இடமளிக்க முடியாது. அனைவருக்கும் நியாயம் செய்யும் தலைவராகவே கட்சியின் செயற்பாடுகளை நான், முன்னெடுத்து வருகிறேன். முஸ்லிம் காங்கிரஸைத் தொடர்ந்து முஸ்லிம்கள் அனைவரதும் பாசறையாகவும் அரவணைக்கும் அரசியல் கட்டமைப்பாகவும் முன் கொண்டு செல்வோம். என்றார்

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரிஷ் ,பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் ஆகியோர் உரையாற்றினர்.

## திலீபனின் ஊர்தியை...

அடித்து நொறுக்கி, அதில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

திருகோணமலை கொழும்பு வீதியில், சர்தாபுர பகுதியில் இக்கொலைவெறி தாக்குதல் நடந்துள்ளது.

தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பொத்துவிலிலிருந்து பயணத்தை ஆரம்பித்து, வடக்கு நோக்கி பயணித்து கொண்டிருக்கிறது.

இவ்வூர்தி நேற்று (17) திருகோணமலை மூதூர், சேனையூர், தம்பலகாமம் பகுதிகள் ஊடாக திருகோணமலை நகரத்தை நோக்கி, திகோணமலை கொழும்பு வீதியில் பயணித்துக் கொண்டிருந்தது.

இதன்போதே இந்த கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் கற்களை நடுவீதியில் போட்டு, வீதியை வழி மறித்திருந்தனர்.

இப்பகுதியில் பொலிஸாரும் , இராணுவ புலனாய்வுத்துறையினரும் பிரசன்னமாகியிருந்தனர். எனினும்,பொலிஸார் தாக்குதலை தடுக்க தவறியதாகவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் குற்றம் சாட்டினர்.

முதலில் முகத்தை கறுப்புத்துணியால் கட்டிய பெரும்பான்மை இளைஞரொருவர் பெரிய கல்லினால் வாகனத்தை தாக்கியுள்ளார்.

தொடர்ந்து வாகனம் முன்னேறிய போது, வீதியின் குறுக்கே தடைகளை ஏற்படுத்தி காத்திருந்த, ஆண்களும், பெண்களும் நிறைந்திருந்த கூட்டம், வாகனத்தை சுற்றிவளைத்து, தடிகளால் அடித்து தாக்கின.

வாகனத்தில் இருந்தவர்களையும் கண்மூடித்தனமாக இக்குழு தாக்கியது. அங்கு கடமையிலிருந்த பொலிஸாரால் நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை.

இக்கொலைவெறி தாக்குதலில் இருந்து தப்பித்து, ஊர்தியை திருப்பி அருகிலுள்ள தம்பலகாமம் பகுதிக்கு கொண்டு சென்றனர்.இந்நிலையில்,

தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையில், அங்கேயே தங்கினர்

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோரும் கடுமையாக தாக்கப்பட்டனர்.

இந்த ஊர்தி பவனிக்கு நேற்று முன்தினமும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் ஒரு குழுவினர் மட்டக்களப்பு, மொறக்கொட்டான்சேனை இராணுவ முகாமுக்கு அருகாமையில் நின்று தேசியக் கொடிகளை ஏந்தியவாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைக் கடந்து சென்றபோது வாழைச்சேனை சந்திக்கு அண்மையில் நின்ற ஒரு குழுவினர், பேனர்கள் போஸ்டர்களைத் தாங்கியவாறு மாலை 6.30 மணியளவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## நான்கு புதிய...

தொழினுட்ப ரீதியிலான ஏற்றத் தாழ்வுகள் தோன்றியுள்ளன.

போதுமான டிஜிட்டல் திறன்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, கலாசார மற்றும் நிறுவன ரீதியில் நிலவும் தடைகள் மற்றும் நிதி தொடர்பான தடைகள் போன்ற சவாலான சூழ்நிலைகள் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்தது என்பதே எமது நம்பிக்கை.

21ஆம் நூற்றாண்டில் இந்தப் புதிய தொழினுட்ப ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகரித்துள்ளது.

அந்த இடைவெளியைக் நிரப்புவதற்காக, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் Big Data, Internet of Things (IoT), செயற்கை நுண்ணறிவு (AI), Blockchain, உயிரியல் தொழில்நுட்பவியல் (Biotechnology) மற்றும் மரபணு வரிசைமுறை (Genome Sequencing) போன்ற புதிய தொழினுட்பங்களை நோக்கி நாம் விரைவாக செல்ல வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்திப் பொறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான செயல்முறையை இலகுபடுத்துவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும், அந்தச் செயல்முறைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குத் தேவையான அறிவு மற்றும் முழுமையான தொழினுட்பத்துடன், கற்ற தொழிற்படையும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழினுட்ப ஒத்துழைப்பின் பிரதிபலனாக, புதிய தொழினுட்பவியலுக்காகவே விசேடமான நான்கு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றம் குறித்த உத்தேச சர்வதேச பல்கலைக்கழகத்தை அதில் ஐந்தாவதாக ஸ்தாபிப்பதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

“G77 + சீனா” குழுவில் செயற்திறன் மிக்க ஒத்துழைப்பு பொறிமுறை ஒன்றும் தேவை. உலகளாவிய தெற்கிற்கான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுக்கான ஒன்றிணைவு (COSTIS) புத்துயிர் பெறச்செய்வதற்கு அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக ஒரு தசாப்தமாக அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% ஒதுக்குவதன் மூலம், உறுப்பு நாடுகள் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும் என்றும் நான் பரிந்துரைக்க விரும்புகின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையைப் பின்பற்றி, டிஜிட்டல் மயமாக்கல், சுகாதாரம், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பசுமை ஹைட்ரஜன் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைகளில், தொழினுட்பத் தளங்களை உருவாக்குவதற்கு அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டும் ஒத்துழைப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமாகும்.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் தொழிற்படைப் பலத்தை மேம்படுத்தி, அதன் மூலம் விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் முன்னேற்றியுள்ளன.

உலகளாவிய ரீதியில், தெற்கு நாடுகளுக்கு இடையில் அதிக ஒத்துழைப்பை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

## காட்டு யானை...

தெரிவிக்கப்படுகின்றது.

யாக்கினிகல மலை பகுதிக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த போது, இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் ஹதுன்கம, ஹிம்பிலியாகட பகுதியில் காட்டு யானை தாக்கி 53 வயதுடைய மற்றுமொரு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அருகில் உள்ள வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்ற அவர்,

வீடு திரும்பாத நிலையில் பிரதேசவாசிகள் மற்றும் வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலின் போதே, அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு...

குறிப்பாக அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பியமை தொடர்பிலும், தனிநபராக அல்லது குழுவாக வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதாக தெரிவித்து பண மோசடியில் ஈடுபட்டமை தொடர்பிலும் இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் தனி நபர்களாக, குழுக்களாக செயற்பட்ட 90 பேரும் அனுமதிப் பத்திரமின்றி வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்புவதற்கு முற்பட்ட 0 9 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதி பத்திரத்தை பெற்றுத் தவறாக செயற்பட்ட நிறுவனமொன்றின் உரிமையாளரும், இதில் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சூட்டு.,...

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே ஆறுவயது சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்கள் இருவரே மேற்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்துள்ள சிறுமியின் தந்தையை இலக்கு வைத்தே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. அவர் கடந்த வருடம் கொட்டாஞ்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ள குற்றச் செயலொன்றுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகம் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ள வேளையில் முச்சக்கர வண்டி ஒன்றில் அவரும் அவரது மனைவியும் ஆறு வயது சிறுமியும் பயணம் செய்துள்ளனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே நீதிமன்றத்திற்கு அருகாமையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், துப்பாக்கி சூட்டை நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையிலேயே அந்த சிறுமி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணையை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இணைய வழி...

கனக ஹேரத்தின் பணிப்புரைக்கு அமைய மேற்படி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆகஸ்ட் 26 ஆம் திகதி நடத்தப்பட்ட சைபர் தாக்குதலால் அமைச்சரவை அலுவலகம் உட்பட பல அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் முகவரிகள் முடக்கப்பட்டன.

இதன் காரணமாக பல அரச நிறுவனங்களின் தரவுத் தொகுதிகள் சீர்குலைந்துள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்நிறுவனத்தின்ன பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் பெரேரா இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடந்த மே மாதம் 17 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் அமைச்சரவை அலுவலகம் உள்ளிட்ட 300 அரச அலுவலகங்களின் ஈமெயில் 5000 ற்கும் அதிகமானவைகளில் தகவல்கள் சீர்குலைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல அரச நிறுவனங்களுக்கு எமது ICP நிறுவனம் ஈமெயில் வசதிகளைப் பெற்றுக்கொ டுத்துள்ளது. அந்த தரவு தொகுதி 2007 ஆம் ஆண்டிலிருந்து எமது நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2013 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி ஈமெயில் தரவு கட்டமைப்பு தற்போது காலாவதியான நிலைக்கு சென்றுள்ளது. அதனால் அந்த கட்டமைப்பு பல்வேறு செக்கியூரிட்டி தாக்குதலுக்கு உள்ளாகிவருகிறது.

## கல்விக் காலத்தை ஓராண்டு... (03 ஆம் பக்கத் தொடர்)

வெற்றி கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

விசாகா கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் (15) கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்.

ஒரு கல்லூரியை விட்டு வெளியேறி, உலகளாவிய அறிவை அணுகுவதற்கான மையமாக இருக்கும் பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறோம். இதன் மூலம் நாட்டிற்கு பல நன்மைகளை சேர்க்கிறோம். அதனால்தான் கல்லூரிக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

மாணவிகளாக, நீங்கள் ஒரு கடினமான காலத்தை கடந்து வந்துள்ளீர்கள். அண்மைய காலங்களில், நாடு மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டது. இப்போது நாம் மீண்டும் எழுந்து நிற்கும் நாடாக இருக்கிறோம். அறிவை வழங்கும் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்பும், பல புதிய துறைகளும் உருவாகியுள்ளன. நீங்கள் பெரிய பதவிகளுக்கு சென்று நாட்டுக்கு சேவை செய்யலாம்.

எங்களைப் போலவே, பெற்றோர்களும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும், உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும், உரிய நேரத்தில் பெறுபேறுகளைப் பெற வேண்டும், உயர்கல்விக்கான கதவுகள் சரியான நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த காலச் சட்டகத்தை உறுதியுடன் செயற்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. இது அவசியமானது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பரீட்சைகள் ஆணையாளர் எச். ஜே.எம்.சி. ஜயசுந்தர, அதிபர் மனோமி செனவிரத்ன, ஆசிரியர்கள், தற்போதைய மற்றும் பழைய மாணவிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மரம் முறிந்து தலையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மரம் முறிந்து விழுந்துள்ளது. இதில்,தந்தையுடன் மோட்டார் சைக்கிளின் பின் பகுதியில் பயணித்த யுவதியின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.இதனால்,ஸ்தலத்திலே மாணவி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கோர விபத்தில் அக்கரப்பத்தனை அப்பர் கிரேக்லி தோட்டத்தை சேர்ந்த விஜயராஜ் திவ்யராணி (வயது 17) என்ற மாணவி உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பூண்டுலோயா பொலிஸார், சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இராஜதந்திரிகளின் இரத்து... (03 ஆம் பக்கத் தொடர்)

மூலம் இந்த மோசடி இடம் பெற்றுள்ளது. இந்த விடயத்தை தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க கடந்த வருடங்களில் பதிவு செய்யப்பட்ட இராஜதந்திரிகளின் ஆறு வாகனங்கள் மீள் ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பத்தில் பதிவை ரத்துச் செய்து இவ்வாறு மோசடியான விதத்தில் இலக்கங்கள் மாற்றப்பட்டு வேறு நபர்களின் பெயர்களில் அதனை பதிவு செய்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காதல் விவகாரத்தால்... (03 ஆம் பக்கத் தொடர்)

இக்கும்பல், அங்கிருந்து வேகமாக தப்பிச்சென்றது.

தாக்குதலில் வீட்டிலிருந்த யுவதி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் ஐந்து பேர் காயமடைந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், வீட்டில் வசிக்கும் யுவதிக்கும் உரும்பிராய் பகுதி இளைஞன் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட காதல் விவாகரமே தாக்குதலுக்கு காரணமென கண்டறிந்தனர்.

இதையடுத்து யுவதியை காதலித்ததாக கூறப்படும் இளைஞன் மற்றும் இருவரை நேற்றைய தினம் மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், அடையாளம் காணப்பட்டுள்ள இன்னும் இருவரை கைது செய்வதற்கும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




மடவளை எமரல் மகளிர் கல்லூரியின் 60 நாள் ஆங்கில மொழி கல்வி, குடும்ப நல வாழ்வியல் கல்வியை நிறைவு செய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மடவளை நொடா ரிஜன்சி மண்டபத்தில் எமரல் மகளிர் கல்லூரியின் பணிப்பாளர் ஏ. எம். எம். சுல்பிகார் அலி தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி , சிறப்பு வளவாளராக அல் ஹாபிழ் ஏ. எல். அலியார் (மதனி) கௌரவ அதிதியாக அல்ஹுதா சர்வதேச பாடசாலை அதிபர் எச். எச். எம். அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (படம் மாவத்தகம தினகரன் நிருபர்)

# ஐ.நா கூட்டத்தொடரில் மலையக மக்களின் 200 வருட கசப்பான வரலாறு பேசப்படும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி

**ஊவா சுழற்சி நிருபர்**

ஐக்கிய நாட்டு சபையின் கூட்டத்தொடரில் பெருந்தோட்ட மலையக மக்களின் 200 வருட கசப்பான வரலாறு எடுத்துரைக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஐக்கிய நாட்டு சபையின் கூட்டத் தொடருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செல்லும் முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாட்டு சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமல்லாது நான் சார்ந்த மலையகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

இக் கூட்டத் தொடரில் பிற நாட்டினுடைய தலைவர்கள், இராஜதந்திரிகளை சந்திக்கும் போது என்னுடைய மலையக மக்கள் சார்பாக பல விடயங்களை முன்வைக்க நான் ஆலோசித்திருகின்றேன். அதற்கு தயாராகவும் செல்கின்றேன்.

200 வருட மலையக மக்களின் கசப்பான வாழ்க்கை முறை, உரிமைகள், பாதுகாப்பு தொடர்பிலும் விசேடமாக கலந்துரையாடப்படவுள்ளது என்றார்.



இம் முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களுக்கான அல் பலாஹ்வின் அனுசரணையுடன் பரீட்சை முன்னோடி இலவச விசேட கருத்தரங்கு, பெற்றோர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு உப அதிபர் திருமதி எம். வை. எச். ஜன்னா தலைமையில் மாவனல்லை பதுரியாவில் நடைபெற்றது.நிகழ்வில் அல் பலாஹ்வின் சிரேஷ்ட முகாமையாளர் முஹம்மது தில்பவ்சி முஸ்லிம் கலந்து கொண்டு சிறப்பித்தார். படம் மாவத்தகம தினகரன் நிருபர்

# தோட்ட அதிகாரிகள் இருவருக்கு குளவிக்கொட்டு

**அக்குறணை குறூப் நிருபர்**

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள அரச பெருந்தோட்டம் ஒன்றில் குளவி கொட்டியதில், தோட்ட அதிகாரிகள் இருவர் சுகவீனமுற்று சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்டத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது, இதில் தோட்ட உதவி அதிகாரி ஒருவரும், களஞ்சிய பொறுப்பாளர் ஒருவருமே நேற்று முன்தினம் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இதையடுத்து இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தற்போது அங்கிருந்து வெளியேறி உள்ளதாதக தோட்ட நிர்வாகம் தெரிவித்தது.

# முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அழுகிய நிலையில் ஆணின் சடலம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

புதுக்குடியிருப்பு பகுதியில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வசிக்கும் நபரொருவர் கடந்த புதன்கிழமை காணாமல் போயிருந்த நிலையில் இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் தென்னம் காணியொன்றில் இருந்து துர்நாற்றம் வீசியமையால் குறித்த கிராமவாசியொருவர் சென்று பார்த்தவேளை அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் இருந்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட குறித்த நபர் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதிய சேர்ந்த இராசலிங்கம் சுதர்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.கெங்காதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி சுபுண் ஏக்கநாயக்க மற்றும் கிராம சேவையாளர் வே.மேகானந்தசிவம் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டுள்ளதுடன் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார். தற்போது உடலம் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது.

# திரவப் பால் உற்பத்தியாளர்கள் பல சவாலை எதிர்கொண்டுள்ளனர்

**அக்குறணை குறூப் நிருபர்**

இலங்கையில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மத்திய மாகாணத்தில் போதியளவு கால்நடை உற்பத்தி மற்றும் மிருக வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மத்திய மாகாண பால் உற்பத்தியாளர்கள் பாரிய சவாலுக்கு உற்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார். மேற்படி விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அவர் கண்டியில் வைத்துத் தெரிவித்தார். எனவே பால் உற்பத்தியை கடந்த காலங்களைப் போல் பேணிக் கொள்வதில் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் கால்நடை வைத்தியர்களுக்கான இடமாற்றத்திட்டம் ஒன்றை அமைத்துக் கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார். இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இது விடயமாக ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'மலையகம் 200' ஆய்வறிக்கை வெளியீடும், கருத்தாடலும்

ஆ.ரமேஸ்

மலையக மக்களின் 200 வருட காலத்தில் காணி உரிமை மற்றும் வீட்டு உரிமை அற்று வாழும் இம் மலையக மக்களின் ஆய்வறிக்கை வெளியீடும், கருத்தாடலும் மொன்ரால் அமைப்பின் பரிந்துரைக்கு அமைய எதிர்வரும் (21.09.2023) வியாழக்கிழமை அன்று கொழும்பு 07 சுதந்திர அவனியு தேசிய பொது நூலக மண்டபத்தில் பிற்பகல் 02 மணியளவில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் பேராதனை பல்கலை'கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா.ரமேஷ் எழுதிய மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பான ஆய்வு நூல் வெளியீடு மற்றும் கருத்து பகிர்வு இடம்பெறவுள்ளது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — NLB

வெள்ளிக்கிழமை 2023.09.15 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5238 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,808,456.00 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 0 9 1 0 7 8

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1586 — 15/09/2023 — 42359 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,883,424.00 — ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 07 13 63 69 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

தன நிதானய — தேதி 2023/09/15 — சீட்டிழுப்பு இலக்கம் 1268 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,120,603.20 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 24 42 46 56 — விஷேட ஆங்கில எழுத்து P — Double Chance இலக்கம் 04411

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3480 — சீட்டிழுப்பு திகதி 2023.09.15 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,584,553.60 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 07 27 48 74 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26422

Lucky 7 — திகதி 15.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0064 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 8 9 5 9 7 3 — L7 இலக்கம் 0 9 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-15 — சீட்டிழுப்பு இலக்கம் 547 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,575,913.20 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 14 22 45 61 — விசேட இலக்கினம் மிதுனம்

சனிக்கிழமை 2023.09.16 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5239 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,864,432.00 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 9 2 2 8 3 8

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1587 — 16/09/2023 — 63242 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,016,072.00 — ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 18 38 53 70 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

தன நிதானய — தேதி 2023/09/16 — சீட்டிழுப்பு இலக்கம் 1269 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,345,118.40 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 20 32 49 80 — விஷேட ஆங்கில எழுத்து V — Double Chance இலக்கம் 42496

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3481 — சீட்டிழுப்பு திகதி 2023.09.16 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,758,015.60 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 23 39 60 79 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28165

Lucky 7 — திகதி 16.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0065 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 1 0 1 2 8 4 — L7 இலக்கம் 0 2 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-16 — சீட்டிழுப்பு இலக்கம் 548 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00 — வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 16 18 25 50 — விசேட இலக்கினம் கும்பம்



## பீபல்ஸ் மைக்ரோ–கொமர்ஸ் லிமிடெட் மற்றும் பீபல்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பீஎல்சி திறந்த வாகன ஏல விற்பனை

75 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள்

**2023 செப்டெம்பர் 23 ஆம் திகதி சனிக்கிழமை** மாபிம வாகனக் கூடத்தில் காலை 09.30 தொடக்கம் இடம்பெறும்.

பரீட்சிப்பது செப்டெம்பர் 20 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 22 வெள்ளிக்கிழமை வரை. காலை 9.00 தொடக்கம் மாலை 4.00 வரை கலேவல, மாபிம, மொனராகலை மற்றும் மாத்தறையில் அமைந்துள்ள வாகன கூடத்தில்.

கலேவல வாகனக் கூடம் - கேதலகொல்ல, பெலிகமுவ, கலேவல. தொலைபேசி - 066-2287355
மாபிம வாகனக் கூடம் - இல. 225/D, நயாகல வீதி, ஹெய்யன்துடுவ, மாபிம. தொலைபேசி - 011-2401031
மொனராகலை வாகனக் கூடம் - இல. 08, பொத்துவில் வீதி, மொனராகலை. தொலைபேசி - 055-2277461
மாத்தறை வாகனக் கூடம் - இல. 364, நுபே, மாத்தறை. தொலைபேசி – 042-3127271
தலைமை அலுவலகம் - 0112 890 990 / 0112 828 169 / பாத்தும் 0770 80 10 56

| VEHICLE NO. | MAKE | MODEL | YEAR |
|---|---|---|---|
| **MABIMA VEHICLE YARD** | | | |
| **THREE WHEELER** | | | |
| WP AAE-4XXX | BAJAJ | RE 205 | 2012 |
| EP YN-2XXX | BAJAJ | RE205 | 2011 |
| SP YC-5XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| SP-AAX-8XXX | BAJAJ | RE | 2015 |
| WP QK-2XXX | BAJAJ | AUTO RE 4 S | 2007 |
| WP ABR-5XXX | BAJAJ | RE-SB | 2018 |
| WP YU-7XXX | BAJAJ | RE 205 | 2012 |
| WP YJ-5XXX | BAJAJ | RE 205 | 2011 |
| SP AAX-1XXX | BAJAJ | RE-SB | 2015 |
| SP AAZ-7XXX | PIAGGIO | APE | 2015 |
| SP AAO-8XXX | BAJAJ | RE-SB | 2013 |
| SP QW-6XXX | PIAGGIO | APE | 2010 |
| SP AAV-6XXX | BAJAJ | RE-SB | 2014 |
| SP YJ-6XXX | BAJAJ | RE 205 | 2011 |
| WP AAP-1XXX | BAJAJ | RE | 2014 |
| WP QF-5XXX | BAJAJ | AUTO RE 2 STOCK | 2006 |
| WP QJ-5XXX | BAJAJ | AUTO AR-4S | 2007 |
| CP AAZ-6XXX | BAJAJ | RE SB | 2015 |
| UP-AAI-7XXX | BAJAJ | RE 205 | 2013 |
| WP-YU-9XXX | BAJAJ | RE205 | 2011 |
| WP ABJ-3XXX | BAJAJ | RE | 2015 |
| WP QP-6XXX | BAJAJ | AUTO AR 4S | 2008 |
| SP AAU-6XXX | BAJAJ | RE-SB | 2014 |
| WP AAZ-1XXX | BAJAJ | RE | 2015 |
| SG YA-9XXX | BAJAJ | RE-4S | 2010 |
| SP ABH-5XXX | BAJAJ | RE | 2015 |
| SP AAV-9XXX | BAJAJ | RS | 2015 |
| WP-YD-5XXX | TVS | KING | 2010 |
| WP-AAM-2XXX | TVS | KING | 2013 |
| WP YA-2XXX | BAJAJ | AR 4S-UG | 2010 |
| WP ABA-5XXX | BAJAJ | RE | 2015 |
| SG AAX-3XXX | BAJAJ | RE | 2015 |
| SG AAA-9XXX | BAJAJ | RE 205 | 2012 |
| SG YK-2XXX | BAJAJ | RE 205 | 2011 |
| WP AAR-0XXX | BAJAJ | RE-SB | 2014 |
| WP YD-4XXX | BAJAJ | AR 4S-UG | 2010 |
| WP AAH-9XXX | BAJAJ | RE 205 | 2013 |
| WP QV-5XXX | BAJAJ | 4S | 2009 |
| SG QN-2XXX | BAJAJ | AR 4S | 2007 |
| UP AAL-3XXX | PIAGGIO | APE CITY PET | 2013 |
| SG-AAG-8XXX | BAJAJ | RE 205 | 2013 |
| WP-AAE-7XXX | BAJAJ | RE 205 | 2012 |
| WP-AAU-5XXX | BAJAJ | RE- SB | 2014 |
| **LORRY** | | | |
| SP LE-5XXX | ATCO | KMC1021 | 2007 |
| **MOTOR CYCLE** | | | |
| WP-BBT-2XXX | YAMAHA | FZ-16 | 2014 |
| NW BIN-7XXX | BAJAJ | PULSAR 150 | 2019 |
| SP -BIZ-3XXX | HONDA | AVIATOR | 2018 |
| SP BFW-2XXX | HERO | MAESTRO EDGE | 2017 |
| SG BFI-9XXX | TVS | WEGO | 2017 |
| UP BDG-8XXX | MAHINDRA | RODEO UZO | 2015 |
| SG BCN-9XXX | BAJAJ | PULSER 135 LS | 2015 |
| SG XR-8XXX | BAJAJ | PULSER 135 LS | 2011 |
| SP BHU-9XXX | YAMAHA | FZ-S VER 2.0 | 2019 |
| **GALEWELA VEHICLE YARD** | | | |
| **MOTOR CYCLE** | | | |
| NC BDC-6XXX | HONDA | ACTIVA I | 2015 |
| NW BDP-0XXX | YAMAHA | RAY-ZR | 2015 |
| CP BII-4XXX | BAJAJ | PLATINA | 2019 |
| NW BFU-5XXX | YAMAHA | RAY ZR | 2017 |
| **THREE WHEELER** | | | |
| SG QX-7XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| CP AAH-0XXX | BAJAJ | RE-205 | 2013 |
| CP-QP-5XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| CP-YM-6XXX | BAJAJ | RE 205 | 2011 |
| CP QR-5XXX | BAJAJ | AUTO 4RS | 2008 |
| WP QX-3XXX | BAJAJ | AR 4S UG | 2010 |
| CP ABS-7XXX | BAJAJ | RE-SB | 2018 |
| NC AAW-8XXX | TVS | KING | 2014 |
| **MONARAGALA VEHICLE YARD** | | | |
| **MOTOR CYCLE** | | | |
| UP BGT-9XXX | BAJAJ | PLATINA | 2018 |
| WP BER-3XXX | HERO | HUNK | 2016 |
| CP BGS-7XXX | YAMAHA | RAY ZR | 2018 |
| **THREE WHEELER** | | | |
| UP YZ-1XXX | BAJAJ | RE 205 | 2012 |
| UP AAS-3XXX | BAJAJ | RE SB | 2014 |
| CP AAB-2XXX | BAJAJ | RE 205 | 2012 |
| UP AAM-3XXX | BAJAJ | RE 205 | 2013 |
| **MATARA VEHICLE YARD:** | | | |
| **THREE WHEELER** | | | |
| WP-QP-7XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| SP-AAW-4XXX | BAJAJ | RE | 2015 |
| SP-AAW-4XXX | BAJAJ | RE | 2015 |

இந்த ஏல விற்பனைக்கு **Online** தொழில்நுட்பம் ஊடாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு கீழுள்ள **PLC** கிளைகளில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தம்புள்ளை **PLC** கிளை - இலக்க 632, அநுராதபுரம் வீதி, தம்புள்ளை. தொ.இ. – 066-2285485
மொனராகலை **PLC** கிளை - இலக்கம் 32, பொத்துவில் வீதி, மொராகலை. தொ.பே. – 055-2055316

**விற்பனை நிபந்தனைகள்**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்திற்கு முன்னதாக வருகை தரும் வரிசைக்கு அமைய நுழைவுச் சீட்டு வழங்கப்படும். ஏல விற்பனைக்கான உள்நுழைவுக் கட்டணம் ஒருவருக்காக மீளளிக்கப்படாத ரூபா 1500 நுழைவுச் சீட்டு மற்றும் 5,000 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகை அறவிடப்படும்.
- கொடுப்பனவு: சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை பணமாகச் செலுத்த வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2023 செப்டம்பர் 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00க்கு முன்னர் பீபல்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் லிமிடெட் தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு பீபல்ஸ் மைக்ரோ-கொமர்ஸ் கிளையில் செலுத்தி வாகனத்தை அகற்றிக் கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து நீக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உள்ளது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER — Black Tie Service with True Aloha!
ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com
lankaauction.lk

# கிழக்கின் குரல்



# அஷ்ரபை நினைவுகூர்ந்து கிழக்கில் பல கூட்டங்கள்

## சாய்ந்தமருதுவில் விஷேட துஆவுடன் பிரதான கூட்டம்











**கல்முனை மத்திய, அட்டாளைச்சேனை குறூப், பாலமுனை தினகரன், அம்பாரை மாவட்ட குறூப், பெரிய நீலாவணை விசேட நிருபர்கள்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் 23 வருட நினைவு தினம் கடந்த சனிக்கிழமை (16) கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் இடம்பெற்றன.

அஷ்ரபின் நினைவுதினத்தை முன்னிட்டு பொதுக்கூட்டம், மரம் நடுகை மற்றும் விஷேட துஆப்பிரார்த்தனைகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன் பிரதான நிகழ்வு சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் நிகழ்ந்தது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், ஊர்ப் பிரமுகர்கள், கவிஞர்கள், பொது மக்கள், கட்சித் தொண்டர்கள், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அண்மையில் கட்சியில் இணைந்துகொண்ட முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் உட்பட பெருந்திரளானோர் பங்கேற்றிருந்தனர்.

சாய்ந்தமருது லீ மெரிடியன் ஹோட்டலில் ஏற்பாடாகியிருந்த இக்கூட்டம் பின்னர், பௌஸி விளையாட்டு மைதானத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தது.

இக்கூட்டத்துக்கு ரவூப்ஹக்கீம் வருவதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு, உலமாக்களால் விஷேட துஆப்பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது.

முஸ்லிம்களின் தனித்துவ அரசியல் பற்றி சிந்தித்த மர்ஹூம் அஷ்ரப், 1986 காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்து தனது 14 வருட அரசியலில் பெரும் விழிப்புணர்வு, சாதனையை நிகழ்த்தியிருந்தார்.

1989 முதல் 2000 வரை பாராளுமன்றத்திலிருந்து இவரது பயணம் முஸ்லிம் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இதனால், அவரது இழப்பு இன்று வரை நினைவு கூரப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமன்றி எனைய முஸ்லிம் கட்சிகளும் அஷ்ரபின் இழப்பை நினைவு கூர்ந்திருந்தன.

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாமம் குடிநிலம் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 21வயது இளைஞன் உயிரிழந்துள்ளதாக (16) பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்தானது சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதுடன் இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

திருக்கோவிலில் இருந்து சாகாமம் குடிநிலம் நோக்கி பயணித்த போது பலத்த காற்று காரணமாக வேக கட்டுப்பாட்டை இழந்து வயல் வெளியில் தூக்கி வீசப்பட்டு இளைஞன் உயிர் இழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இவ்விபத்தில் உயிர் இழந்தவர் சாகாமம் குடிநிலம் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதுடைய தர்மராசா நிதர்சன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## மண் அகழ்வுக்கு எதிராக குச்சவெளியில் ஆர்ப்பாட்டம்

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி இக்பால் நகர் தொடக்கம் தென்னமரவாடி வரை கடற்கரை ஓரமாக மணல் அகழும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மணல் அகழ்வினால் பாதிக்கப்படும் கிராமங்களில் வசிக்கும் மூவின மக்களும் இணைந்து நேற்று (17) குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மிட்வெஸ்ட் கெவி சான்ஸ் பிரைவேட் லிமிட்டட் (Midwest Heavy Sands pvt Ltd) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள குறித்த மணல் அகழ்வு அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யுமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



குறித்த மணல் அகழ்வின் மூலம் இயற்கை வளம் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

வழங்கிய அனுமதிக்கு முரணாக மணல் அகழப்படுவதால் கடற்கரையை அண்டி இருக்கின்ற கிராமங்கள் கடலுக்குள் உள்வாங்கப்படுகின்ற அபாயமும் நிலவுவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

ஐ.நா கூட்டத்தொடரில் கலந்து கொள்ள

## இலங்கை குழுவினர் அமெரிக்கா பயணம்

### முஷர்ரப் எம்.பியும் பங்கேற்பு

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் இலங்கை குழு நேற்று முன்தினம் (16) அதிகாலை அமெரிக்கா நோக்கி பயணமானது.

இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, ப்ரேம்நாத் தொலவத்த எம்.பி, வடிவேலு சுரேஷ் எம்.பி, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன ஆகியோர் அடங்குகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா நாட்டுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து அமெரிக்கா செல்கின்றார்.

அமெரிக்காவில் வைத்து இக்குழுவினர் ஜனாதிபதியுடன் இணைந்து கொள்வர்.

இம்மாதம் 21 ஆம் திகதி ஐ.நா சபையில் ஜனாதிபதியின் விசேட உரை நிகழ இருக்கிறது. அத்தோடு அமெரிக்காவில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் ஜனாதிபதியும் அவரது குழுவினரும் பல்வேறு சந்திப்புக்களிலும், பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில்

## சமூக மட்டத்திலான அபாய குறைப்பு திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை

### மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் சமூக மட்ட அனர்த்த அபாயக் குறைப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடகீழ் பருவகால பெயர்ச்சி மழை எதிர் காலத்தில் அதிகமாக கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதனால் ஏற்படுகின்ற அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம், நிறுவன ரீதியான அனர்த்த அபாய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் சமூக மட்ட அனர்த்த அபாய முகாமைத்துவம் என்பவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட்டார ரீதியில் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்களை அமைத்து விழிப்புணர்வூட்டல் மற்றும் வலுப்படுத்தல், அனர்த்த அபாயமுள்ள பகுதிகளை அடையாளம் கண்டு அப் பகுதியில் மக்களுடன் இணைந்து அனர்த்த தணிப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தல்.

அனர்த்த முன்னாயத்த திட்டத்தினை தயாரித்தல், அவசர கால பிரதிபலிப்பு குழுக்களை வலுப்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கல்.

எனவே, மழை வெள்ளத்தினால் அதிகம் பாதிக்கப்படக் கூடிய பிரதேசங்களை அடையாளம் காண்பதுடன் வெள்ளம் ஏற்படுவதற்கான மூல காரணங்களை அடையாளம் கண்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை உரிய திணைக்களத்தினுடாக முன்னெடுக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

திருக்கோவில் பகுதியில் பலத்த காற்று;

## தம்பிலுவில் பாடசாலை பார்வையாளர் அரங்கு சரிந்து வீழ்ந்தது



**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தம்பிலுவில் தேசிய பாடசாலையின் பார்வையாளர் அரங்கு சரிந்து விழுந்து சேதமடைந்துள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மாலை வேளையில் தொடர்ச்சியாக பலத்த காற்று வீசுவதுடன் இடையிடையே சிறிதளவான மழை வீழ்ச்சியும் இருந்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று நண்பகல் வேளையில் வீசிய பலத்த காற்று காரணமாக தம்பிலுவில் தேசிய பாடசாலையின் பார்வையாளர் அரங்கு சரிந்து விழுந்துள்ளதுடன் இவ் அரங்கானது சுமார் 30 வருடங்களுக்கு மேலான பழைமையான பார்வையாளர் அரங்காக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி கடற்கரை பகுதியில் கடலரிப்பு மும்முரம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக் காரணமாக அங்கிருந்த மரமொன்று விழுந்துள்ளதுடன் அவ்விடத்திலுள்ள மீனவர் கட்டிடங்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி கடற்கரையின் ஏத்துக்கால் கடற்கரையில் தொடர்ச்சியாக கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது.

கடந்த ஒருசில வாரங்களாக இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள மோசமான கடலரிப்புக் காரணமாக நேற்று(17) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மரமொன்றும் விழுந்துள்ளது. அதே போன்று இங்குள்ள மீனவர் தங்குமிட கட்டிடம், மீனவர் சங்க கட்டிடம் போன்ற கட்டிடங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கட்டடங்களுக்கு அடியில் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இங்கு கடந்த வருடமும் கடலரிப்பு ஏற்பட்ட போது கரையோரம் பேணல் திணைக்களம் காத்தான்குடி பிரதேச செயலகம், காத்தான்குடி நகர சபை இணைந்து கடலரிப்பை தடுக்கும் வகையில் மண் மூடைகளை போட்டு கடலரிப்பை தடுத்த போதிலும் மீண்டும்தற்போது இங்கு பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து இன்று அங்குவிரைந்த கரையோரம் பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர் நிலைமைகளை பார்வையிட்டதுடன் கற்களை போடுவதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டதுடன் அவ்விடத்திலுள்ள மீனவ கட்டிடங்களுக்குள் இருப்பவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேறியுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# மானுடவியல்

## சுந்தரர்– சிவனின் அற்புதங்கள்



133

பல மாதங்கள் இல்லறத்தை மகிழ்ச்சியோடு நடத்தினார் நம்பியாரூரர். ஒருநாள் சுந்தரருக்கு தன் சொந்த ஊரான திருவாரூருக்கு செல்ல வேண்டும், முதல் மனைவி பரவையாரை பார்க்க வேண்டும் என்கிற ஆவல் உண்டானது. தன் விருப்பத்திற்கு சங்கிலி தடையாக இருப்பாள் என்பதால் அவளிடம் சொல்லாமல் புறப்பட்டார்.

சங்கிலியாருக்கு தெரியாமல் போனாலும் இறைவனுக்கு தெரியாமல் போகுமா. திருவொற்றியூர் எல்லையை விட்டு வெளியேறியதும் சுந்தரரின் கண்பார்வை பறிபோனது. “அய்யோ குருடன் ஆனேனே" என்று கதறி அழுதார். அத்துடன் வயதானவர் போல் அவர் உருவம் மாறிப் போனது.

சத்தியத்தை மீறியதால் இந்த தண்டனை என்பதை உணர்ந்தார். “இறைவா" என்னை மன்னிக்க வேண்டும்.“ என்று அழுது, “அழுக்கு மெய்கொடு“ என தொடங்கும் பதிகத்தை பாடினார் சுந்தரர் செய்வது தவறு என்று தெரிந்தும் அந்த தவறை துணிச்சலுடன் செய்வோர்க்கு மன்னிப்பு கிடையாது என்பதில் சிவபெருமான் உறுதியாக நின்றார். அதுவும் “திருவொற்றியூர் எல்லையை விட்டே தாண்ட மாட்டேன்" கடைசிவரை சங்கிலியாருடன்தான் வாழ்வேன்” என்று தன் முன்னே செய்த சத்தியத்தை மீறியதால் கடும் கோபத்தில் இருந்தார் சிவன். அதனால் தன்னுடைய நண்பராக இருந்தாலும் கருணை காட்டாமல் சுந்தரருக்கு திரும்ப கண்பார்வையை தரவில்லை இறைவன். இனி நடப்பது நடக்கட்டும்.

இறைவன் மனம் ஒருநாள் கருணையால் விடிவு காலம் பிறக்கும். அதுவரை பொறுமையாக இருப்போம் என்ற எண்ணத்தில், கால் போன போக்கில் சென்று எப்படியும் திருவாரூரை அடைய முடிவெடுத்தார் சுந்தரர். சுந்தரருக்கு கண்பார்வை போனதால் வழியில் உள்ள ஊர்மக்கள் அவர் மேல் பரிதாபம் அடைந்தார்கள். இதனால் ஆங்காங்கே சிலர் ஆரூராரின் கையை பிடித்து அழைத்து சென்று வழி காட்டினார்கள். திருவடமுல்லை வாயிலை அடைந்து (சென்னை – திருமுல்லை வாயில்) அங்கு அருள் செய்யும் திருமுல்லைநாதரை வணங்கி தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டு ஒரு பதிகம் பாடினார்.

ஆனால் இறைவன் கண்டுகொள்ளவில்லை. இதனால் திருவெண்பாக்கம் சென்றார். இறைவனை வேண்டி ஒரு பதிகம் பாடினார். ஆனால் சிவபெருமான் இங்கும் சுந்தரரை மன்னிக்கவில்லை. இதனால் பெரிதும் வருந்திய சுந்தரர், “சிவபெருமானே இத்திருக்கோயிலில் நீ இருக்கிறாயா இல்லையா?“ என்றார். அதற்கு இறைவன் சுந்தரருக்கு ஒரு ஊன்றுகோல் தந்து, “நாம் இங்கேதான் இருக்கிறோம். நீ இங்கிருந்து போ.“ என்று சுந்தரரின் மீது கோபம் தணியாமல் சொன்னார். சிவனிடம் மன்னிப்பு கேட்டு மீண்டும் ஒரு பதிகம் பாடிவிட்டு அங்கிருந்து கிளம்பினார். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# விநாயகர் சதுர்த்தி

**விநாயகர் சதுர்த்தி நாளில் வீடுகளில் பல வண்ணங்களில், களிமண்ணால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை வாங்கி வந்து பிரதிஷ்டை செய்து, விநாயகருக்கு விருப்பமான அருகம்புல், கொழுக்கட்டை, மோதகம், அவல், பொரி, கடலை, பழங்கள் படைத்து வழிபடுவார்கள்.**



விநாயகர் பூஜை முடிந்ததும் 3,5,7 அல்லது 10 வது நாளில் வீடுகளில் வைத்து வழிபடப்பட்ட விநாயகர் சிலைகளை பொது இடத்தில் வைத்து பூஜை செய்து, ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர் நிலைகளில் கரைப்பது வழக்கம்.முழு முதற்கடவுளான விநாயகப் பெருமானின் அவதார தினத்தை நாம் விநாயகர் சதுர்த்தியாக ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம்.

விநாயகப் பெருமான் அறிவு, ஞானம், செல்வ வளம், அதிர்ஷ்டம் ஆகியவற்றை தரும் கடவுளாக வணங்கப்படுகிறார்.

ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமான் அவதரித்ததாக புராணங்கள் சொல்கின்றன. இதனால் சதுர்த்தி திதி விநாயகப் பெருமானுக்குரிய திதியாக ஆனது. பொதுவாக விநாயகப் பெருமானை வழிபடுபவர்களுக்கு துன்பங்கள், தடைகள் அனைத்தும் விலக நன்மைகள் பெருகும் என்பது ஐதீகம்.

நவகிரக தோஷம், சர்ப்ப தோஷம், குறிப்பாக சனி பகவானால் ஏற்படும் தொல்லைகள், திருமணத் தடை, காரியத் தடை, வறுமை, கடன் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளும் விநாயகரை வழிபட விலகி விடும். அதிலும் அவருக்குரிய சதுர்த்தி திதியில் விரதம் இருந்து வழிபட்டால் சகல விதமான நன்மைகளும் கிடைக்கும்.

அனைத்து மாதங்களிலும் வரும் சதுர்த்தி திதி சிறப்பானது என்றாலும் ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். சதுர்த்தி விரதம் இருக்க துவங்குபவர்கள் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியில் துவங்குவது சிறப்பானதாகும்.

## சைவ மஞ்சரி



கண்டி திகன அம்பாள் கோட்டை அருள்மிகு ஸ்ரீ குன்றுக்குமரன் மற்றும் ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா நிகழ்வுகளில் பிரதான கும்ப ஊர்வலம், ஸ்தூபி அபிஷேகம், கும்பாபிஷேகம் என்பன அண்மையில் இடம் பெற்றன.
டி.வசந்தகுமார், நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 54



இரண்டு கைகள் நிறைய லட்டு வேண்டும் என நினைப்பது சிறுபிள்ளைத்தனம். அதே சிறுபிள்ளைத் தனத்துடன். சின்னதாய் ஒரு பூஜை மட்டும் செய்து விட்டு. பெருமளவு சுகபோகங்களும் கிடைக்க வேண்டும். முக்தியும் கிடைக்க வேண்டும் என்று நம்மில் பலரும் கருதுகிறோம். இரண்டில் ஒன்று மட்டுமே கிடைக்கும். ஒன்றை பெற மற்றொன்றை இழக்க வேண்டும். சுகபோகமான வாழ்க்கை, முக்திக்கான வாழ்க்கை இவ்விரண்டிலும் குழம்பி, செய்வதறியாமல் மக்கள் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகிவிடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்ளை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

எனவே, உணர்வுடையே ஆத்மாக்களே விழித்தெழுங்கள். உலகம் துக்கம் என்னும் நெருப்பில் பொசுங்கி கருகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பது அழகல்ல. வெளிச்சமூட்டக் கூடிய பொறுப்பு உங்களிடம் தான் உள்ளது.

# தெமட்டகொடை மாவில ஒழுங்கை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று

கொழும்பு மாநகரின் தெமட்ட கொடை பேஸ் லைன் வீதியில் மஹாவெல ஒழுங்கையில் 150 ம் இலக்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் 24ஆவது வருஷாபிஷேகம் கடந்த 9ஆம் திகதி கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது. இவ்வாயலத்தில் அன்று தொடக்கம் தினமும் சுவாமிக்கு நவகலச அபிஷேகமும் விஷேட அலங்கார பூஜையும் நடைபெற்று வந்தது. ஆவணி சதுர்த்தியாகிய இன்று இவ்வாலயத்தில் பால்குட பவனி, 108 சங்காபிஷேகம், மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். இன்று காலை 7 மணிக்கு கொழும்பு, தெமட்டகொடை, ஆராமாயா வீதியிலுள்ள ஸ்ரீ செந்தில் முருகன் ஆலயத்தில் இருந்து பால்குட பவனி ஆரம்பமாகும். இந்த பால் குட பவனியில் கலந்து கொள்ளும் பக்தர்களிடம் இருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது எனவும் பால் குட பவனியில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பால், வேப்பிலை, பட்டு என்பன இலவசமாக வழங்கப்படும் எனவும் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இந்த பால் குட பவனி பேஸ்லைன் வீதி ஊடாக ஆலயத்தை வந்தடைந்ததும், சுவாமிக்கு நவோத்திர (108) சங்காபிஷேகமும் |ஆவணி சதுர்த்திக்கான விஷேட பூஜையும் நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். இன்று 18ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழாவானது ஆலயத்தில் இருந்து புறப்பட்டு, பேஸ்லைன் வீதியூடாக மிஹிந்து சென்புர தொடர் மாடி வரை சென்று பேஸ்லைன் வீதியூடாக ஆராமய வீதியிலுள்ள ஸ்ரீ செந்தில் ஆலயத்திற்கு சென்று ஆராமய பிளேஸ் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், காளியப்புள்ளை ஸ்ரீமுருகன் கோயில் ஊடாக ஞானவிமல வீதி அம்மன் கோவிலை சென்றடையும். அங்கிருந்து கொலன்னாவ வீதியூடாக தெமட்டகொடை சந்திக்கு பிரவேசித்து மீண்டும் பேஸ்லைன் வீதியூடாக ஆலயத்தை சென்றடையும். யாழ்ப்பாணம் சிவஸ்ரீ பாஸ்கர குருக்கள் உற்சவகால கிரியைகளை முன்னின்று நடத்த, ஆலய பிரதம குரு பாண்டிருப்பு பிரம்மஸ்ரீ சுதர்ஷன நிரேச ஷர்மா, கிரிபோருவ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சக்தி காந்த சர்மா, தெமட்டகொடை ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய குரு பிரம்மஸ்ரீ தினேஷ் சர்மா, தெமட்டகொடை ஸ்ரீ செந்தில்குமரன் ஆலய குரு பிரம்மஸ்ரீ டிக்ஷன் சர்மா ஆகியோர் வருஷாபிஷேக கிரியைகளை செய்வார்கள். துஷாந்தன் குழுவினர் மங்கள வாத்தியம் இசைப்பார்கள்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது.

இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் ஆரம்பத்தில் ஒரு பெரிய மரநிழலின் அடியில் கல்லை நாட்டி வணங்கி வந்தனர். காலப்போக்கில் அவ்விடம் பலகைக் கொட்டகையாக மாறியது.

காலங்கள் செல்லச் செல்ல 1990 இல் இக் கொட்டகை மடாலயமாக மாற்றி அமைக்கப்பட்டது. அங்கு விநாயகர், சிவலிங்கம், அம்பாள், வைரவர் ஆகிய தெய்வங்களின் திருவுருவச் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூஜைகளும் விரதங்களும் விழாக்களும் சீராக நடந்து வந்தன.

200623 ம் திகதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆலயம் அமைக்கப்பட்டிருந்த இடம் முழுமையாக உடைக்கப்பட்டு விஸ்திரமாக்கப்பட 2006.2.11 ம் திகதி தைப்பூசத் திருநாளில் அத்திபாரக் கல் நடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மூலஸ்தானம், அர்த்தமண்டபம், கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதனோடு சுற்று புற சுவரும் கட்டப்பட்டதுடன் பொருளாதார பற்றாக்குறையால் வேலைகள் காலதாமதமாகின. 2007 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் திகதி வாயிற்கோபுரம் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

**கே. ஈஸ்வரலிங்கம்**

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19829) எந்தெந்த நேரங்களில் துளசி இலைகளைப் பறிப்பது தடை செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது?** சூரிய உதயம் மற்றும் சூரியன் மறையும் நேரத்தில்

**19830) துளசி பறிப்பதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்று சாஸ்திரங்களில் இரண்டு சூழ்நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன அவை எவை?** துளசியை குளிக்காமல் பறிக்கக்கூடாது. அசைவம் உண்டு விட்டு தொடக்கூடாது.

**19831) துளசியை குளிக்காமல் பறித்தால் என்ன நடக்கும்?** துளசி அசுத்தமாகிறது.

**19832) துளசியை ஒவ்வொன்றாகப் பறிக்கலாமா?** பறிக்கவே கூடாது. இது தவறான வழி.

**19833) துளசி பறிப்பது எப்படி?** துளசியை அதன் கீழ் பகுதியிலிருந்து பிடித்து, விட்டுச்சென்ற தண்டை ஒரேயடியாக உடைக்கவும்.

**19834) மூலிகைகளின் ராணி என அழைக்கப்படுவது எது?** துளசி **துளசியின் வேறு பெயர்கள் என்ன?** திருத்துளாய், துளவு, அரி, இராம துளசி, குல்லை, வனம், விருந்தம், துழாய், துளவம், மாலலங்கல், விஷ்ணுபிரியா, பிருந்தா, கிருஷ்ணதுளசி, ஸ்ரீதுளசி

**19835) துளசியின் வகைகள் எத்தனை? அவற்றில் சில தருக?** 22 நல்துளசி, கருந்துளசி, செந்துளசி, கல்துளசி, முள்துளசி, நாய்துளசி, காட்டு துளசி

**19836) துளசியை பச்சையாக சாப்பிடுவதால் என்ன பலன்?** இருமல், சளிக்கு மிகவும் நல்லது.



முந்தல் இராக்குரிசி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வருஷாபிஷேக நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (14)நடைபெற்றது.
உடப்பு குறூப் நிருபர்

# புனித அல்-குர்ஆனுக்கு சவூதி அரேபியா வழங்கும் ஒப்பற்ற சேவைகள் ஒரு நோக்கு

**சவூதி அரேபியாவின் தற்போதைய ஆட்சியாளர் மன்னர் சல்மான் தனது பத்தாவது வயதில் அல்–குர்ஆனை முழுவதுமாக மனனமிட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது தொடர்பில் பறகஹதெனிய, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட உப அதிபர், கலாநிதி எம். ஆர்.எம்.அம்ஜத் ராசிக் PhD தினகரா–னுக்கு தெரிவித்த கருத்து,...**



**கே: கலாநிதி அவர்களே! நாம் தொடராக சவூதி அரேபியாவினைப்பற்றிய முக்கிய தரவுகளை வாசகர்களுடன் பகிர்ந்து வருகிறோம். அதன் தொடரில் இம்மாதம் சவூதியிலே நடைபெற்ற சர்வதேச அல்-குர்ஆன் மனனப் போட்டியையொட்டி சில முக்கிய தகவல்களை எமது தினகரன் வாசக நெஞ்சங்களுடன் பரிமாறிக்கொள்ள முடியுமா?**

ப: இஸ்லாமிய மார்க்கத்தின் புனித வேதமாம் அல்குர்ஆனுக்காக வேண்டி வருடாந்தம் சர்வதேச அளவில் ஏற்பாடு செய்யப்படும் ஒரு மாபெரும் நிகழ்வாகத்தான் நாம் இம்மாதம் நடைபெற்ற '43 ஆவது மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டி' இனை நோக்கவேண்டும். அந்தவகையில் அல்குர்ஆன் சம்பந்தப்பட்ட சில முக்கிய விடயங்கள் அதேபோன்று அல்குர்ஆனுக்காக வேண்டி சவூதி அரேபியா மேற்கொள்ளும்சேவைகளும்அர்ப்பணிப்புகளும் அவசியம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய தரவுகளாகும்.

**கே: சவூதி அரேபியா ஒரு முதல்தர இஸ்லாமிய நாடு என்ற வகையில் அதற்கும் அல்-குர்ஆனுக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி முதலாவதாக விவரிக்க முடியுமா?**

ப: புனித அல்குர்ஆன் எனப்படும் வல்ல அல்லாஹ்வின் கலாம் (பேச்சு) ஆனது, அல்லாஹ்வினால் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இரக்கியருளப்பட்ட புனித வேதமாகும். அதன் வார்த்தைகள் □முஃஜிஸாவாகும்□; அதாவது நபிமார்களுக்கு வழங்கப்பட்ட; மனித சக்திக்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் □முஃஜிஸா□ எனப்படும். அதன்படி இந்த அல்குர்ஆனின் வசனங்களைப் போன்று மனிதர்கள் எவருக்கும் வார்த்தைகளை வடிக்கமுடியாது. அதேவேளை இந்த அல்குர்ஆனை ஓதுவது ஒரு வணக்கமுமாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்து வாழ்ந்த தேசம் சவூதி அரேபியாவின் பிரதான நகரங்களான மக்கா, மதீனா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களாகும். ஆக அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட இடம், அதனை விசுவாசம் கொண்டு அதன்படி வாழ்ந்த, வாழும் மக்களின் தேசம், அதன்படி கட்டியெழுப்பப்பட்ட அரசுகள், நாகரிகங்கள் தோன்றிய பிரதேசம் என்பன போன்ற பல கோணங்களில்; புனித அல்குர்ஆனுடன் சவூதி அரேபியாவிற்கு இருக்கும் தொடர்பினை விவரிக்கலாம்.

**கே: சவூதியின் அரசியலமைப்பில் புனித அல்-குர்ஆனின் வகிபாகம் என்ன?**

ப: சவூதியின் யாப்பாக புனித அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் வழிமுறையுமே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சவூதியின் அடிப்படைச் சட்ட வரைவின் முதலாம் பிரிவின்; முதலாம் உப பிரிவின் முதலாவது வரியில் பின்வருமாறு உள்ளது: □(சவூதியின்) யாப்பானது; அல்லாஹ்வின் புனித வேதமும், நபி (ஸல்) அவர்களின் வழிமுறையுமாகும். அதன் மொழி (அல்குர்ஆனின் மொழியாகிய) அரபி மொழியாகும்□.

இதன்படியே சவூதி அரேபியாவின் அரசியலமைப்புச் சட்டங்கள், சமூக, பொருளாதார, குற்றவியல் போன்ற அனைத்து வகையான சட்டதிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**கே: புனித அல்-குர்ஆனை மனனமிடுவது ஒரு சிரமமான விடயமா? அதனை மனனமிடுதல் சவூதி அரேபிய கல்வித் திட்டத்தில் எவ்வாறான இடத்தினை வகிக்கின்றது.**

ப: புனித அல்குர்ஆன் எனப்படுவது மனனமிடுவதற்கு இலகுவான ஒன்றாகும். அல்லாஹ் தஆலா அல்குர்ஆனிலேயே அதனைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது: □நிச்சயமாக, அவ்வல்குர்ஆனை நினைவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு எளிதாக்கி வைத்திருக்கின்றோம். எனவே (இதிலிருந்து) நல்லுணர்வு பெறுவோர் உண்டா?□ என பல தடவைகள் வினாத்தொடுக்கின்றான். (அத்: 54: வச: 17, 22, 32, 40).

அல்குர்ஆனை மனனமிடுவது சவூதி அரேபியாவின் அனைத்துக் கல்விக்கூடங்களிலும் பிரதானமான ஒன்றாகும். பாடவிதானங்களில் முதல்தரமானதுமாகும். அது தவிர சிறார்களுக்கு சிறுவயதிலேயே அல்குர்ஆனை மனனமிட வைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்துப் பிரதேசங்களிலும் இலகுவாகவும், மிக சிறந்த முறையிலும் மேற்கொள்ளப்படுவதை நாம் காணலாம். குறிப்பாக அல்குர்ஆனை மனனமிடுவதற்கான அரச கல்விக்கூடங்கள் என்று அதிகமான கல்விக்கூடங்களையும் காணலாம். எமது நாடுகளில் மாலை நேரங்களில் சிறார்கள் அல்குர்ஆனை எவ்வாறு ஓதுவதென்று கற்றுக்கொள்வதற்காகவே அதிகமாக □அல்குர்ஆன் மத்ரஸா□க்களுக்குச் செல்வார்கள். ஆனால் அதே வயதுடைய சிறார்களில் அதிகமானவர்களை நாம் அங்கே அல்குர்ஆனை மனனம் செய்வதற்காக வேண்டி பள்ளிக்கூடம் செல்வதைக் காணலாம்.



**கே: சுமார் எத்தனை வயதில் புனித அல்-குர்ஆனின் முப்பது ஜுஸ்உகளையும் மனனமிடலாம்.**

ப: அநேகமாக சிறார்கள் அவர்களது பத்து, அல்லது பன்னிரண்டு வயதில் அல்குர்ஆனை முழுமையாக மனனமிட்டுவிடுவார்கள். இங்கே நான் வாசகர்களுடன் ஒரு முக்கியமான தரவினைப் பகிர ஆசைப்படுகிறேன்.

அதாவது சவூதி அரேபியாவின் தற்போதைய ஆட்சியாளர், இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்கள் தனது பத்தாவது வயதினை எட்டியவேளையில் அல்குர்ஆனை முழுவதுமாக மனனமிட்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அவர் அல்குர்ஆனை தனது சிறுவயதில் பத்து வயதையும் தாண்டுமுன் மிக விரைவாக முழுவதுமாக மனனமிட்டதற்காக வேண்டி அவரின் தந்தை மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் அரச பிரமுகர்களை அழைத்து 1945 ஜூலை 22 (ஹி 1364812) ஞாயிறன்று ஒரு விஷேட வைபவத்தினையே ஏற்பாடு செய்தார் என 194583 ஆம் திகதிய □உம்முல் குரா□ நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது இங்கே குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு அம்சமாகும். இதேபோன்று அல்குர்ஆனை முழுவதுமாக மனனமிட்டுள்ள சிறார்களை சவூதியில் சர்வசாதாரணமாகக் காணலாம்.

**கே: கலாநிதி அவர்களே! எமது நேர்காணலின் முக்கிய கேள்விக்கு வருவோம். இம்மாத நடுப்பகுதியில் மக்கமா நகரில் நடைபெற்ற சர்வதேச அல்-குர்ஆன் மனனப் போட்டி சம்பந்தமான தரவுகளைக் கூற-முடியுமா? இப்போட்டி எப்போது ஆரம்பமானது? எத்தனை போட்டியாளர்கள் பங்குபற்றியுள்ளனர்? அதன் நோக்கம் என்ன?**

ப: ஆம்! □அல்குர்ஆன் மனனம், அதன் விளக்கம் மற்றும் அதனை ஓதுதல் என்பவற்றுக்கான மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேசப் போட்டி□ என்பதே இப்போட்டியின் உத்தியோகபூர்வ மகுடமாகும். இது 1979 (ஹி 1399) ஆம் வருடம் தொடக்கம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இதுவரை இப்போட்டிகளில் 6616 போட்டியாளர்கள் உலகில் நாளா பாகங்களில் இருந்தும் கலந்து கொண்டுள்ளனர். வருடா வருடம் புனித மக்கமா நகரில் புனித மஸ்ஜிதுல் ஹராமில் நடைபெறும் இப்போட்டியானது 43 ஆவது தடவையாக இம்மாத நடுப்பகுதியில் மிக வெற்றிகரமாக நடந்தேறியது.

இப்போட்டியின் நோக்கங்களாக நன்கு நோக்கங்கள் இம்முறை பிரகடனப்படுத்தப்பட்டன:

அவையாவன:

1 அல்குர்ஆனை ஓதுவது, மனனமிடுவது, விளங்குவது, கிரகிப்பது என்பவற்றில் முஸ்லிம் சிறார்களுக்கு இருக்கும் ஆர்வத்தினைத் தூண்டுவது.

2 சர்வதேச மட்டத்தில் அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்களுக்கிடையேயான போட்டிமனப்பான்மைக்கு கண்ணியமிக்க வலுவூட்டலை வழங்குவது.

3 வளர்ந்துவரும் சந்ததிகளை அல்குர்ஆனுடன் தொடர்புபடுத்துவது.

4 அல்குர்ஆனுக்கும் அதனைக் கற்பிப்பதற்கும் சவூதி அரேபியா வழங்கும் கரிசனையினை உறுதிசெய்வது.

**கே: இப்போட்டி எத்தனை பிரிவுகளைக் கொண்டது?**

பரிசில்களின் தொகை பற்றிய விபரங்கள் உண்டா?

ப: ஆம்! இப்போட்டி ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அதில் முதலாம் பிரிவு சற்று கடினமானதாகும். அதாவது, அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பதுடன் அதனை ஓதும் ஏழு முறைக் கிறாஅத்துகளையும் விளக்கத்துடன் ஒப்புவிப்பது.

இரண்டாம் பிரிவு: அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பதுடன் அதன் தப்ஸீர் விளக்கங்களையும் தெரிந்திருப்பது.

மூன்று: அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது. நான்கு: அல்குர்ஆனின் பதினைந்து ஜுஸ்உகளை தொடராக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது. ஐந்து: அல்குர்ஆனின் ஐந்து ஜுஸ்உகளை தொடராக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது. இக்கடைசிப் பிரிவு (OIC) அங்கம் வகிக்காத நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களுக்குரியதாகும்.

பரிசில்களைப் பொறுத்தவரையில் உண்மையில் அவை வியக்கத்தக்க தொகையினை எட்டியதை எவராலும் மறுக்க முடியாது. முதலாம் பிரிவின் முதல் பரிசாக ஐந்து இலட்சம் சவூதி ரியல்கள் வழங்கப்பட்டன. அதாவது இலங்கை ரூபாயில் சுமார் 42.5 மில்லயன் ஆகும். அதே போன்று இரண்டாம் இடம் 4.5 இலட்சம், மூன்றாம் இடம் நாலு இலட்சம் என அந்த பரிசில்களின் பட்டியல் தொடர்கின்றது. முழுவதுமாக வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் மாத்திரம் 4 நான்கு மில்லியன் சவூதி ரியால்களை எட்டியது. அதாவது இலங்கை ரூபாயில் சுமார் 340 மில்லயன் (34 கோடிகள்) ஆகும்.



### இம்முறை மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச அல்-குர்ஆன் மனனப் போட்டியில் வெற்றிபெற்ற நாடுகள்.

- சவூதி அரேபியா (2),
- வங்காளதேசம் (2),
- சோமாலியா (2),
- லிபியா (2),
- அல்ஜீரியா,
- தஷாத்,
- பஹ்ரைன்,
- சிறியா,
- சுவிடன்,
- இந்தோனேசியா,
- செனிகல்,
- உகண்டா,
- இரேயூனியன் தீவு,
- இந்தியா,
- நெதர்லாந்து,
- பொஸ்னியா,
- வட மக்கதோனியா.

**கே: இம்முறை எந்தெந்த நாட்டு மாணவர்கள் வெற்றிவாகை சூடினர்?**

ப: இம்முறை, முறையே சவூதி அரேபியா, வங்காளதேசம், சோமாலியா, லிபியா ஆகிய நாடுகள் தலா இரண்டு பரிசில்களை வென்றுள்ளன.

மேலும் அல்ஜீரியா, தஷாத், பஹ்ரைன், சிறியா, சுவீடன், இந்தோனேஷியா, செனகல், உகண்டா, ஈரேயூனியன் தீவு, இந்தியா, நெதர்லாந்து, பொஸ்னியா, வட மக்கதோனியா ஆகிய நாட்டு மாணவர்களும் முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இம்முறை இப்போட்டியில் மூன்றாம் பிரிவில் இலங்கை மல்வானையைச் சேர்ந்த ஹாபிழ் M.S.M ஸாஜித் கலந்து கொண்டார்.

**கே: புனித அல்-குர்ஆனுக்கு சவூதி அரேபியா வழங்கும் வேறு சேவைகள் எவை?**

ப: சவூதி அரேபிய அரசதுறையினர் தொடக்கம் சாதாரண மக்கள் வரை அல்குர்ஆனுடன் வலுவான தொடர்பினைப் பேணுபவர்கள் என்பதனாலும் உலக முஸ்லிம் நாடுகளுக்கு மத்தியில் ஒரு தலையாய நாடாக சவூதி திகழுவதனாலும் சவூதியின் அல்குர்ஆனுக்கான சேவைகள் பலதரப்பட்ட வடிவங்களில் மேற்கொள்ளப்படுவதை நாம் உணரலாம்.

அவற்றில் மிக முக்கிய சேவையாக; 'அல்குர்ஆன் பிரதிகளை அச்சிடுவதற்கான மன்னர் பஹத் அச்சகம்' திகழ்கின்றது. உலகிலேயே மிகவும் பிரமாண்டமான அச்சகங்களில் ஒன்றாகத் திகழும் இதனை ஹஜ் உம்ரா யாத்திரைக்குச் செல்லும் அனைவரும் கண்டுகளிக்கலாம். அதேபோன்று நான் கல்விகற்ற மதீனா இஸ்லாமியப் பல்கலையில் அல்குர்ஆன் சம்பந்தப்பட்ட கற்கைகளுக்காக வேண்டி 'அல்குர்ஆன் பீடம்' என்று ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதேபோன்று சவூதியில் இன்னும் பல பல்கலைக்கழகங்களில் அல்குர்ஆன் சம்பந்தப்பட்ட ஆய்வுகளுக்காக வேண்டி ஆய்வு மையங்கள் செயற்படுவதைக் காணலாம். அதேபோன்று உலகளாவிய ரீதியில் அல்குர்ஆனை மனனமிடுவது அது சம்பந்தமான ஆய்வுகளுக்கு சவூதி தொடர்ந்தும் அனுசரணை வழங்கிவருவதும் யாவரும் அறிந்ததே.





**கே: சென்ற ஜூலை மாதமும் இலங்கையிலும் ஒரு தேசிய ரீதியிலான அல்-குர்ஆன் மனனப் போட்டி நிகழ்ந்தது அல்லவா?**

ப: ஆம்! சென்ற ஜூலை மாதம் தேசிய அல்குர்ஆன் மனனப் போட்டியொன்று சவூதி அரேபியாவின் பூரண அனுசரணையுடன் இலங்கை முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதரகத்துடன் இணைந்து மேற்கொண்டது. அதில் முதல் பரிசாக இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக சுமார் எட்டு இலட்சத்துக்கும் அதிகமான பணப் பரிசு வழங்கப்பட்டது.

ஆக புனித அல்குர்ஆனுக்கான சேவையினை செவ்வனே மேற்கொள்ளும் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் சவூதி அரேபியப் பொறுப்புதாரிகளுக்கு என்றும் உலக இஸ்லாமிய சமுதாயத்தின் நன்றி உரித்தாகும்.

குறிப்பாக நாம் எமது நன்றிகளை சவூதியின் அரச துறைக்கும் உலமாக்களும் தெரிவிப்பதோடு குறிப்பாக சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் மற்றும் தூதரக அதிகாரிகள் அனைவரையும் நன்றியுடன் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அதேபோன்று குறிப்பாக இத்தரவுகளை வாசக நெஞ்சங்களோடு பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த தினகரன் நாளிதழுக்கும் விஷேட நன்றிகள்.

**இக்பால் அலி**

அல்-குர்ஆன் பிரதிகளை அச்சிடுவதற்கான மன்னர் பஹத் அச்சகம்





# மட்டு. சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்







மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்...


## விலைக்கோரல் அறிவித்தல்

### வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### விலைக்கோரல் இல. 075/T/2023

### கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட பொதுமக்கள் அறிவிப்பு முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

**(SUPPLY, INSTALLATION, TESTING & COMMISSIONING OF NETWORK BASED PUBLIC ADDRESS SYSTEM AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் **கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட பொதுமக்கள் அறிவிப்பு முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத **இருபத்தையாயிரம் ரூபா (25,000.00)** தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்கு **2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி** வரையில் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை** விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் கொள்வனவு செய்யலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் மேற்கூறப்பட்ட முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் **2023 ஒக்டோபர் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00** முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் **இருபத்தொரு இலட்சம் ரூபாவுக்கான (2,100,000.00 ரூபா)** பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று **2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், புதிய நிர்வாகக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் இடம்பெறும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264106 / 011-2264103 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**



## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

KU-7904 TATA NANO 2012, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 059074

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

JD-5999 ISUZU 2004, LORRY அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 14542958. 059014

PQ -7596 MAHINDR A MAXIMO 20 11, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8. 059021

PX-3844 TATA ACE, 2 013 அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 14 5 4 295 8. 059044

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAV-0993 BAJAJ 2014, YE-5810 BAJAJ 2010, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705 9 9 916 3. 059066

QU-6739 BAJAJ 2009, ABA- 6 3 15 BAJAJ 2015, AAI-1359 BAJAJ 2013, THREE WHEE L அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 07 11 2 1 0810. 059053



## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை
## விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| வாகறை, பனிச்சங்கேணி, கடற்கரை வீதியை மேம்படுத்துதல் |
| வாகறை, கந்தலடி, குடியிருப்பு வீதியை மேம்படுத்துதல் |
| வாகறை, ஓரியன்கட்டு, வெல்லடிமடு பிரதான வீதியை மேம்படுத்துதல் |
| வாகறை, பல்சேனை, பெரியசாமி வீதியை மேம்படுத்துதல் |
| செங்கலடி, குமாரவெளியார் கிராமம், 1ஆம் குறுக்கு எல்லை வீதியை மேம்படுத்துதல் |
| கிரான், கோரக்கள்ளிமடு, முருகன் கோயில் வீதியை மேம்படுத்துதல் |
| வாகறை, கதிரவெளி, புதூர் உள்ளக வீதியை மேம்படுத்துதல் |
| மட்டக்களப்பு, பிள்ளையாரடி, EUSL, சுகாதார - பராமரிப்பு விஞ்ஞான பீட இடப்பரப்பின் உட்புறத்தில் உள்ளக வீதி நிர்மாணத்தில் மிகுதி வேலைகள் (படிநிலை-05) |
| மட்டக்களப்பு, பிள்ளையாரடி, EUSL, சுகாதார - பராமரிப்பு விஞ்ஞான பீட இடப்பரப்பின் உட்புறத்தில் உள்ளக வீதி நிர்மாணத்தில் மிகுதி வேலைகள் (படிநிலை-06) |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-09-18ஆம் திகதி முதல் 2023-09-21ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



(கல்வி அமைச்சு)

## நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்
## (ACCIMT)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்திற்கு ஜெனிடோரியல் சேவைகளை வழங்குதல் - 2023/2024

நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்திற்கு ஜெனிடோரியல் சேவையை வழங்குவதற்காக பொதுத் துறையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்ட புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் இத்தால் அழைக்கிறார்.

1) விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

2) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடம் அல்லது 0112650838 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் **2023 ஒக்ரோபர் 05 ஆம் திகதி வரையும் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான** காலப்பகுதியில் எந்தவொரு வேலை நாளிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்கள் மற்றும் வேலைத்தளத்தையும் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3) ஒவ்வொரு விலைமனுவுக்கும் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3000.00) நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குச் செலுத்தியதற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்குச் சமர்ப்பிப்பதன் பேரிலும் மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்று மற்றும் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களை (தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் போன்றவை) உள்ளடக்கி நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு சமர்ப்பிப்பதன் பேரிலும் **2023 செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் 2023 ஒக்ரோபர் 05 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில்** ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

4) **2023 ஒக்ரோபர் 06 ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணி** அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு விரைவாகவே திறக்கப்படும்.

5) **2024 பெப்ருவரி 02 ஆம்** திகதி வரையில் செல்லுபடியாகும் நிலையிலுள்ள நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அவர்களின் பெயரில் பெறப்பட்ட **84,000.00 ரூபாவிற்கான** விலைமனுப் பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6) விலைமனுப் பிணையானது பின்வரும் முகவரகத்தின் ஒன்றினால் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்:

- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது
- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உத்தரவாதம் உறுதி செய்யப்பட்ட வெளிநாடொன்றில் அமைந்துள்ள வங்கியொன்றில்.
- வங்கி வரைவு அல்லது ஏனைய வகையிலான பிணை முறிகள், உத்தரவாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்,**
**272, பண்டாரநாயக்க மாவத்தை,**
**கட்டுபெத்த, மொறட்டுவை.**
**தொலைபேசி: 011-2650838**
**தொலைநகல்: 011-2650662**

THE ORIGINAL DCSL EST 1913

# அறிவித்தல்

## வருடாந்த சபை பொதுக்கூட்டம் 2022/ 2023

## டிஸ்டிலரிஸ் கம்பனி ஒ.ஃப் ஸ்ரீ லங்கா பிஎல்சி

டிஸ்டிலரிஸ் கம்பனி ஒ.ஃப் ஸ்ரீ லங்கா பிஎல்சி யின் வருடாந்த சபை பொதுக்கூட்டம் மெய்நிகர் (Virtual) முறையில், 2023 செப்டெம்பர் 22ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இல 110. நொரிஸ் கனல் வீதி, கொழும்பு 10 இலங்கை எனும் முகவரியில் அமைந்துள்ள 'DCSL PLC Mini Auditorium' வளாகத்தில் நடாத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடாந்த கூட்டம் CSE பங்களிப்புடன் மற்றும் வழிநடாத்தல்களுக்கமைய நடாத்தப்படும். முழுமைபடுத்தப்பட்ட Proxy விண்ணப்பத்தினை கீழ் குறித்த பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரியில் வைப்பு செய்யப்பட வேண்டும் என்பதோடு அல்லது 2023 செப்டெம்பர் 21ம் திகதி பி.ப. 10.00 மணிக்கு முன்னதாக vyjayanthi.corp@melsta.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிடல் அல்லது +94 112 698 718 எனும் இலக்கத்திற்கு அழைத்து வழங்கிட முடியும், (பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்திற்கு, 24 மணித்தியாலங்களுக்கு முன்னதாக)

**பங்குதாரர்கள் ஆன்லைன் முறையில் பங்கேற்றல்**

பொதுக்கூட்டத்தில் பங்கேற்க விரும்பிடும் பங்குதாரர்கள் ஆடியோ அல்லது வீடியோ வழியாக இணைந்திட முடியும். இச்செயற்பாட்டிற்கான வசதியினை வழங்கிட, பங்குதாரர்களினால் குறித்த விபரங்கள் கீழ் காணப்படும் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரிக்கு அல்லது vyjayanthi.corp@melsta.com எனும் முகவரிக்கு மின்னஞ்சலாக அல்லது +94 112 698 718 எனும் இலக்கத்திற்கு அழைத்து குறைந்தது கூட்டம் நடைபெறும் தினத்திற்கு, ஐந்து நாட்களுக்கு (05) முன்னதாக கிடைக்கும் விதம் அனுப்பிடல் வேண்டும். பங்குதாரர்கள் வழங்கியுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டத்தில் பங்கேற்கும் விபரங்கள் அனுப்பப்படும்.

**பங்குதாரர்களின் விசாரணைகளுக்கு**

பங்குதாரர்கள் மேலும் தகவல்களை கூட்டத்தில் அறிந்திட தேவைப்படின் அவ்வாறான விசாரணைகளை கீழ் குறித்துள்ள பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அல்லது vyjayanthi.corp@melsta.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி, அல்லது +94 112698718 எனும் இலக்கத்திற்கு அழைத்து குறைந்தது கூட்டம் நடைபெறும் தினத்திற்கு, ஐந்து நாட்களுக்கு (05) முன்னதாக கிடைக்கும் விதம் அனுப்பிடல் வேண்டும்.

பங்குதாரர்களுக்கு இவ் அறிவித்தல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. 2022/23 - வருடாந்த அறிக்கையின் அச்சிட்ட பிரதி மற்றும் அறிவித்தல்கள் www.dcslgroup.com நிறுவன இணையத்தளத்தில் மற்றும் www.cse.lk கொழும்பு பங்குபரிவர்த்தனை இணையதளத்தில் பெற்றிட முடியும்.

**டிஸ்டிலரிஸ் கம்பனி ஒ.ஃப் ஸ்ரீ லங்கா பிஎல்சி**
**இல 110. நொரிஸ் கனல் வீதி, கொழும்பு-10.**
**தொலைபேசி: 0115507000**

**இயக்குநர் சபையின் அறிவுறுத்தலுக்கமைய**
**செல்வி.வி.ஜே, சேனாரத்ன**
**நிறுவன செயலாளர்**

**2023 செப்டெம்பர் 18**

---

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே பெயர் குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : யூ பி ஃபினான்ஸ் கம்பனி பிஎல்சி |
| கம்பனியின் இலக்கம் | : பிகியு00283806 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : இல. 10, டெய்சி வில்லா அவென்யு, கொழும்பு04. |
| கம்பனியின் புதிய பெயர் | : யூ பி ஃபினான்ஸ் பிஎஸ்சி |
| பெயர் மாற்றத்தின் திகதி | : 2023 செப்டம்பர் 11 ஆம் திகதியன்று |

UB பினான்ஸ் பிஎல்சி இற்காகவும்
அதன் சார்பிலும்
பி டபிள்யு கோர்ப்பரேட் செக்கிரட்டேரியல் (பீவீடி) எல்டீடி
கம்பனிச் செயலாளர்கள்

2023 செப்டம்பர் 12 ஆம் திகதியன்று

---

தமிழில் மொழிபெயர்ப்பு

## பொது அறிவித்தல்

இலங்கையின் புலமை சொத்துரிமைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, '.ஃபைசல் ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்' அதன் பதிவு செய்யப்பட்ட வர்த்தக குறியீடான 'KENTON' ஐ இதன் மூலம் அறிமுகப்படுத்துகிறது இந்த வர்த்தக குறியீடானது இலங்கையின் வர்த்தக அலைவரிசையில் 'Kenton' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் சைக்கிள் இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான தனித்துவமான அடையாளங்காட்டியாகவும் பிரத்தியேக உரிமையாகவும் செயல்படுகிறது.

இலங்கையில் 'Kenton' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் இந்த வர்த்தக குறியீட்டின் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத பயன்படும். உரிமையாளர்களின் நடைமுறையில் உள்ள இலங்கையின் புலமை சொத்துரிமைச் சட்ட மீறல் எனப்படுவதுடன் தகுந்த சட்ட நடவடிக்கைகளுக்கும் வழிவகுக்கும்.

KENTON

**.ஃபைசல் ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்,**
**74, டேம் வீதி, கொழும்பு-12**

---

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/17/2017/E/208**
**எனது இல.: KMB/LAN/ACQUI/02/20**

இங்கே பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்காக 2346/46ஆம் இலக்க 2023.08.24ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | மாகாணம் | : தெற்கு |
| 2. | மாவட்டம் | : மாத்தறை |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | : கம்புறுபிட்டிய |
| 4. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 330B- மஹமுரே |
| 5. | கிராமம் | : கம்புறுப்பிட்டிய |
| 6. | காணியின் பெயர் | : இரிகொந்த, முலன, பேருவலகும்புர, பெருவெலகும்புர, மாவத்தகும்புர |
| 7. | வரைபட இல. | : க.வ. 820227 தொகுதி 03 தாள் இல 1 வரைபடம் |
| 8. | மொத்த விஸ்தீரணம் | : 1 இருந்து 40 வரை |

**குசலக நாணயக்கார**
**பிரதேச செயலாளர்**
**கம்புறுபிட்டிய**

**2023.09. மாதம் 13 திகதி**
**கம்புறுபிட்டிய பிரதேச செயலகத்தில்.**

---

## 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல்

### ஆணமடுவ பிரதேச சபை

2024ஆம் ஆண்டில் பின்வரும் பதார்த்தங்களை மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள தகைமை பெற்ற வழங்குநர்களிடமிருந்து மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள்/தளபாடங்கள்/உருக்குத் தளபாடங்கள்/ பிளாஸ்டிக் பண்டங்கள்
02. எழுது கருவிகள் மற்றும் கடதாசிகள்
03. மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள்
04. கொங்கிறீட் பண்டங்கள்/ஹியூம் குழாய்கள்/சீமெந்து கல்
05. டயர்/டியூப்/பெற்றறிகள்
06. வாகன இயந்திராதிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்கள்
07. கணனிகள் மற்றும் கணனி துணை உறுப்புக்கள்
08. மின்னியல் தட்டச்சுகள்/தட்டச்சு பொறிகள்/ நிழற்படபிரதியிடும் இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்கள்
09. விளையாட்டுப் பண்டங்கள்/ விளையாட்டு உபகரணங்கள்
10. சீருடைகள்/பாதணிகள்/திரைச்சீலைகள்
11. நூலகப் புத்தகங்கள்/சஞ்சிகைகள்/ செய்தித்தாள்கள்
12. கல்/மணல்/சீமெந்து/ செங்கற்கள்/கருங்கல்/கண்ணாடி உற்பத்திகள்/ அலுமினியம் கட்டமைப்புக்கள்/ இரும்பு உட்பட கட்டிடப் பொருட்கள்
13. தார்/ சரளைக்கற்கள் உட்பட வீதிப்பராமரிப்புப் பதார்த்தங்கள்
14. முன்பள்ளி விளையாட்டு உபகரணங்கள்
15. அறிவித்தல் பலகைகள்/கட்டவுட்/ பெனர்கள்/ ஸ்டிக்கர்கள்
16. கூட்டுமாருகள்/ தூரிகைகள்/ கூடைகள்/ கால்துடைப்பான்கள்/ கிருமி நாசினி கழுவும் திரவங்கள்
17. செடிகள்/ பசளை/ எண்ணெய் உட்பட பூங்கா அலங்கரிப்புப் பதார்த்தங்கள்
18. பாடசாலைப் புத்தகங்கள்/ பாடசாலைப் பைகள்/ பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள்
19. கைத்தொழில் நிர்மாணத்திற்கான துணை உறுப்புக்கள்
20. மின்பிறப்பாக்கி இயந்திரங்கள்/புல் வெட்டும் இயந்திரங்கள்/ மரம் வெட்டும் இயந்திரங்கள்
21. பொலித்தீன்/அச்சிட்ட பொலித்தீன்/ உறைகள் மற்றும் பசளை உறைகள் (பொலிசெக்) வழங்கல்
22. சமையல் எரிவாயு (GAS) மற்றும் எரிவாயு சிலிண்டர்கள்
23. வெட்டப்பட்ட மரங்களை வழங்கல் (பலகை/பராள/ ரீப்ப போன்றவை)

**சேவைகளை வழங்கள்**

1. அச்சு வேலைகளை வழங்கல்
2. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கல்
3. வாகனங்களிற்கான சேர்விசு வழங்கல்
4. வாகன இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களைப் பழுது பார்த்தல்
5. கணனி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல்/ வலையமைப்பை ஏற்படுத்தல்
06. டயர் மீள் நிரப்பல்
07. நில அளவையாளர் சேவைகளை வழங்கல்
08. வளிசீராக்கி இயந்திரங்களைப் புதுப்பித்தல்/ தீயணைப்பு உபகரணங்கள்
09. கட்டிடங்களைப் புதுப்பித்தல்
10. வீச்சுக் கத்தி/ கத்திகள்/முள்ளுகள்/ இரேக்கைகள்/ குப்பைத் தொட்டிகள் உட்பட உபகரணங்கள் மற்றும் புதுப்பித்தல்
11. மோட்டார் கிரேடர்/ பெக்கோ இயந்திரங்கள்/ வீதிப்பாராமரிப்புக்கான சேவைகள வழங்குதல்
12. பயனிகள் போக்குவரத்து/ நிர்மாணப்பண்டங்களை எற்றி இறக்கல் உட்பட போக்குவரத்து சேவைகளை வழங்கல்
13. உள்ளகத் தொலைபேசி தொகுதி CCTV கெமராத் தொகுதிகளைப் புதுப்பித்தல்
14. கம்மல்வேலைகள் சார்ந்த சேவைகளை வழங்கல்

**நிபந்தனைகள்**

01. அதற்கான விண்ணப்பங்களை 2023.12.20 இற்கு முன்னர் 'செயலாளர், பிரதேச சபை, ஆணமடுவ' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் முடியும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்' எனக் குறப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
02. அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 உடன் பதிவுக்கட்டணம் ஒன்று அனுப்பப்படல்வேண்டுமென்பதுடன் இதற்காக காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம் பணம் செலுத்தாலாமென்பதுடன் அவை 'செயலாளர், பிதேச சபை, ஆணமடுவ' என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
03. பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து இதற்காக விலைமனுக் கோரப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பதிவு செய்யப்பட்டிராத வழங்குநர்களிடமிருந்தும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சபைக்கு உரித்தாகும். (பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)
04. பல் வகைப் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உரியவாறு வழங்குநர்களைப் தேர்ந்தெடுத்தல் சபைக்கு உரித்தாகும்.
05. கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத்தவறும் மற்றும் கட்டளையிடப்பட்டதும் பண்டங்களை வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் உரிய தரத்தில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களினதும் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டு அவர்களின் பெயர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படுவர்.
06. பதிவுக்கான விண்ணப்பப்படிவங்களைத் தாமாகவே தயரித்துக் கொள்ளல்வேண்டும்.
07. மேற்படி ஒவ்வொரு வகுதிகளிற்கும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவற்றிற்கான தனித்தனியான கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

**தகவுத் திறனகள்**

01. கூட்டுத்தாபனமொன்றெனின் அதற்கான சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்
02. தனியார் வியாபாரமொன்றெனின் அதற்கான பதிவுச் சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
03. கம்பனியொன்றெனின் கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பதிவுச் சான்றிதழ் (சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)
04. பெசேவ (VAT) செலுத்துபவராயின் அதற்கான பதிவுச் சான்றிதழ்/ சான்று படுத்தப்பட்ட பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)

**எச்.ஜே.எம்.எம்.எஸ். ஜயசுந்தர**
**செயலாளர்,**
**ஆணமடுவ பிரதேச சபை.**
2023.09.07

**ஆணமடுவ பிரதேச சபை அலுவலகத்தில்**
**தொ.பே. 032-2263275**

---

# இலங்கை அரசாங்கம்

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

**கடன் இல. Cr. 5685-lk & 9255-lk**

## விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| கிளிநொச்சி மாவட்டத்தில் முலங்காவில் நிர்மாண மிகுதி வேலைகள் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/ Kilinochchi/ NCB/ Balance Work - Mulankavil/AF/2023/01** | ரூபா 12,500/- | ரூபா 594,000/- | C5 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தின் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை மற்றும் கட்டிட நிர்மாணத் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஒக்டோபர் 13ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| **செயற்றிட்டப் பெறுகைக் குழு (கீழ்நிலை)** | | | | | |
| **வேலைக் கேள்விகள்** | | | | | |
| இரத்தினபுரி மாவட்டம் - மாவட்ட ஒத்துழைப்புப் பிரிவிற்கு 4WD டபள்கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/ Ratnapura/NCB/ IOC/Vehicle Hiring (CAB)/2023/02** | ரூபா 2,000/- | ரூபா 51,500/- | வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு |
| **காலத்தை நீடித்தல்** | | | | | |
| **2023-08-10ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. பின்வரும் கேள்விகளின் முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் என்பன பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.** | | | | | |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி நகர நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணம் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/ Mullativu/ Urban / NCB/Mallavi WSS/ AF/2023/01** | கேள்வி முடிவுறுத்தல்: 2023 ஒக்டோபர் 11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு (கேள்வி செல்லுபடியாகும் திகதி 2024 ஏப்ரல் 16ஆம் திகதி வரையும் கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2024 மே 14ஆம் திகதி வரையுமாகும்) | | | | |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை பின்வரும் முகவரிக்கு ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

## விலைக்கோரல் அறிவித்தல்

### வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### விலைக்கோரல் இல. 043/T/2023

### மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் வீதி அடையாளமிடும் கறுப்பு, சிவப்பு, வெள்ளை மற்றும் மஞ்சள் நிற (கண்ணாடி மணிகள் அற்ற) நிறப்பூச்சு (நீர் அடிப்படை) வழங்குவதற்கான விலைக்கோரல்

**(BID INVITATION FOR THE SUPPLY OF PAINT ROAD MARKING (WATER BASED) – BLACK, RED, WHITE & YELLOW (WITHOUT GLASS BEADS) AT MATTALA - RAJAPAKSE INTERNATIONAL AIRPORT)**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் அளவுப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள உருப்படிகளின் பிரகாரம் மத்தல, **மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் வீதி அடையாளமிடும் கறுப்பு, சிவப்பு, வெள்ளை மற்றும் மஞ்சள் நிற (கண்ணாடி மணிகள் அற்ற) நிறப்பூச்சு (நீர் அடிப்படை) வழங்குவதற்காக** நிபுணத்துவம் வாய்ந்த நிறப்பூச்சி வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-09ஆம் திகதி வரையான** வார நாட்களில் **மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில்** மீளளிக்கப்படாத **மூவாயிரத்து ஐந்நூறு ரூபா (3,500.00)** தொகையை வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்தி (011-2264102 / 011-2264107) கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவன தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். ஆர்வமுள்ள இதே நேரத்தில் விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை வழங்கல் முகாமைத்துவ பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை செயலாளர், பெறுகைக் குழு, இல. 03, வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவு, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு **2023 ஒக்டோபர் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணி** அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். **பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.** சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட **ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூபா 125,000.00)** தொகைக்கு **வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்குச்** செலுத்தும் வகையில் (கோரிக்கை விலைக்கோரல் உத்தரவாதம்) விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்தல, மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் சகல விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது பெயரிடப்பட்ட பிரதிநிதிகளுக்கு இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், சிவில் பொறியியல் (பராமரிப்பு) தலைவரிடமிருந்து 011-2264700 மற்றும் 011-2264704 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## விலைக்கோரல் அறிவித்தல்

### வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### விலைக்கோரல் இல. 103/T/2023

### கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள முனையக் கட்டிடத்தின் கொங்கிறீட் பெனல் – கூரைக்கு மேல் உள்ள தளம் என்பவற்றுக்கு இடையிலான இணைப்புகளுக்கு சீலன்ட் பூசுதல்

**(APPLY SEALANT FOR JOINTS BETWEEN CONCRETE PANELS –TOP ROOF SLAB TERMINAL BUILDING AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் **கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள முனையக் கட்டிடத்தின் கொங்கிறீட் பெனல் - கூரைக்கு மேல் உள்ள தளம் என்பவற்றுக்கு இடையிலான இணைப்புகளுக்கு சீலன்ட் பூசுவதற்காக** விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இதனையொத்த வேலைகளில் அனுபவத்துடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) முன்னைய ICTAD **C6 அல்லது அதற்கு மேற்பட்ட** தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை **மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபா (3,000.00)** தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் உத்தியோகபூர்வ வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிலிருந்து **2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-09ஆம்** திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை** விலைக்கோரல் ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம். விலைக்கோரல் ஆவணங்களை மேற்கூறப்பட்ட முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் **2023 ஒக்டோபர் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00** முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**விலைக்கோரல் பிணை** முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் **ஐம்பதாயிரம் ரூபாவுக்கான (50,000.00 ரூபா)** பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று **2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சிவில் பொறியியல் (பராமரிப்பு) பிரிவு கூட்ட அறையில் இடம்பெறும்.

எந்தக் காரணத்தையும் கூறாமல் நிறுவனத்தின் நலனுக்காக ஏதேனும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் அல்லது விலைக்கோரலின் எந்தவொரு பகுதியையும் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264102 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## விலைக்கோரல் அறிவித்தல்

### வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### விலைக்கோரல் இல. 074/T/2023

### இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு (CIAR) 04 எண்ணிக்கையான எயார் பேன்ட் டிரான்ஸ்சீவர்களை வழங்குதல்

**SUPPLY OF 04 NOS HF AIR BAND TRANSCEIVERS AT COLOMBO INTERNATIONAL AIRPORT, RATMALANA (CIAR)**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் கொழும்பு சர்வதேச விமான நிலையத்திற்கு **(CIAR) 04 எண்ணிக்கையான எயார் பேன்ட் டிரான்ஸ்சீவர்களை வழங்குவதற்காக** விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத **ஆறாயிரம் ரூபா (6,000.00)** தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்கு **2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-10ஆம்** திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் மேற்கூறப்பட்ட முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் **2023 ஒக்டோபர் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00** மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவருக்கு செலுத்தும் வகையில் கோரும் போது செலுத்தப்படும் **மூன்று இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவுக்கான (375,000.00 ரூபா)** பெறுமதியான வங்கிப் பிணைமுறியொன்றாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264128 / 011-2264103 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

## விலைக்கோரல் அறிவித்தல்

### வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### விலைக்கோரல் இல. 046/T/2023

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 22 இறுதிப் பிரதேசத்திற்கு அருகிலுள்ள விமான நிலைய நிலத்திற்கு சங்கிலி இணைப்பு வேலி மற்றும் முட்கம்பி வேலி அமைத்தல்

**(CONSTRUCTION OF CHAIN LINK FENCE AND BARBED WIRE FENCE FOR AIRPORT LAND NEAR TO 22 END AREA AT BIA)**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள ''**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 22 இறுதிப் பிரதேசத்திற்கு அருகிலுள்ள விமான நிலைய நிலத்திற்கு சங்கிலி இணைப்பு வேலி மற்றும் முட்கம்பி வேலி அமைத்தல்"** எனும் வேலைக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. விபரக் குறிப்புகள், அளவுப் பத்திரங்கள் மற்றும் வரைபடங்களின் பிரகாரம் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். முடிவுறுத்தல் காலமானது வேலை தொடங்கப்படும் நாள் முதல் 90 நாட்களாகும்.

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் இடம்பெறும்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இதனையொத்த வேலைகளில் அனுபவம் சகிதம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) C4 அல்லது C5 தரத்தில் (கட்டிட நிர்மாண விசேடத்துவம்) ஒப்பந்தக்காரர்கள் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், சிவில் பொறியியல் (P&D), சிவில் பொறியியல் (P&D) தலைவரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-2263502/ 011-2263503 தொலைநகல் இலக்கம் 011-2251356 மற்றும் **2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான** வார நாட்களில் **மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00** மணி வரையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத **பன்னிரண்டாயிரம் ரூபா (12,000.00)** தொகையை செலுத்தியதன் பின் **2023.09.19ஆம் திகதி முதல் 2023.10.10ஆம் திகதி வரை மு.ப. 09.00 மணி முதல் 03.00** மணி வரை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவப் பிரிவு, 01ஆம் இலக்க பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்து மூலமான வேண்கோண் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு இல. 01, வழங்கல் தொடர் முகாமைத்துவப் பிரிவு, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு **2023 ஒக்டோபர் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்** ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட **ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 500,000.00)** தொகைக்கு (கோரிக்கை விலைக்கோரல் உத்தரவாதம்) விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ரொக்கப் பண வைப்பொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று **2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், சிவில் பொறியியல் (P&D) பிரிவு கூட்ட அறையில் இடம்பெறும் என்பதுடன் சகல விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது பெயரிடப்பட்ட பிரதிநிதிகளுக்கு இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டுநாயக்க, பண்டாநாயக்க சர்வதேச விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், சிவில் பொறியியல் (பராமரிப்பு) தலைவரிடமிருந்து 011-2264700 மற்றும் 011-2264704 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போதனா வைத்தியசாலை - மஹமோதர

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மஹமோதர போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை அம்சம் | விலை மனுதாரருக்காக தேவைப்படும் தகைமை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள அடிப்படை ஆகு செலவு (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| 1 | மஹமோதர போதனா வைத்தியசாலையிலுள்ள ''தாதிமார் பயிற்சி பாடசாலையின்'' புதுப்பித்தல் வேலைகள். | சி-7 மற்றும் சி-8 (கட்டிட வேலைகள்) | 3,500 ரூபா | 28,000 ரூபா | 2.8 |

1. மஹமோதர போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே விலைமனுவானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023.10.09 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
3. 2023.10.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் தலைவர், போதனா வைத்தியசாலை, மஹமோதர என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தலில் பங்குபெறலாம்.
4. விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
5. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் கேள்வியை வழங்குதலையும் நிராகரிப்பதற்கான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

தொடர்பிலக்கம்: 091-2222261

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, மஹமோதர,**
**காலி.**
14.09.2023.

Repeat Your ad For Better Offers
www.adz.lk
it's what you want

# பெறுகை அறிவித்தல்

## வத்தளை மாபோல நகர சபை

## வத்தளை மாபோல நகர சபைக்கு சூரிய சக்தி அமைப்பை ஸ்தாபித்தல்

வத்தளை மாபோல நகர சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் செயற்றிட்டத்தை பூர்த்தி செய்வதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் பிரகாரம் தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| தொடர் இல. | செயற்றிட்டத்தின் பெயர் | பொருத்தப்படும் இடம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாத) ரூ. | கேள்விப் பிணை (மீளளிக்கப்படும்) ரூ. |
|---|---|---|---|---|
| 01 | வத்தளை மாபோல நகர சபை - சூரிய சக்தி அமைப்பை ஸ்தாபித்தல் (40KW) | 1. நகர சபை தலைமையகம் - (25KW)<br>2. நகர சபை - (10KW)<br>3. நூலகம் - (5KW) | 5,000.00 | 89,700.00 |

01. பெறுகை விபரம்:
    i. பெறுகைப் படிவம் விநியோகித்தல் - 2023.09.19 மு.ப. 9.00 முதல் 2023.10.10 பி.ப.3.00 வரை
    ii. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் - 2023.10.11 மு.ப. 10.30 இற்கு முன்பு
02. பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்துமூல வேண்டுதல் கடிதத்தை நகர சபை தலைமையகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. விபரங்களை அறிந்து கொள்வதற்காக வத்தளை மாபோல நகர சபையின் வேலை அதிகாரி மூலம் விசாரித்தறியலாம். (தொ.பே.இல. 011-2932132)
04. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் படிவக் கட்டணத்தை காசாக செலுத்தி இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் படிவத்தின் மூலம் மாத்திரம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. அவ்வாறே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட கட்டணத்தை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை சான்றிதழ் அல்லது நகர சபையில் வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. இத்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையில் 5% தொகையை செயற்பாட்டு பிணை முறியாக சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக இலங்கை நிலைபெறு சக்தி அதிகார சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
08. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.10.05 மு.ப. 10.30 இற்கு நகர சபை தலைமையகத்தில் நடைபெறும்.
09. சரியாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட நகல் பிரதியுடனான கேள்விப் பத்திரங்களை 2023.10.11 மு.ப. 10.30 இற்கு முன்பு கிடைக்குமாறு நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி, வத்தளை மாபோல நகர சபை, வத்தளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
10. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளுடன் தயாரித்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு இரு உறைகளில் இட்டு, அவ் உறைகள் இரண்டையும் கேள்வி சமர்ப்பிக்கப்படும் ஒரு உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு வலது பக்கம் கீழே நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி, வத்தளை மாபோல நகர சபை என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கேள்விகள் திறத்தல் 2023.10.11 மு.ப. 10.30 ஐ தாண்டியவுடன் நகர சபை தலைமையகத்தில் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதி பெற்ற பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.
12. கேள்விப் படிவங்களில் விலைகளை மாற்றுதல், அழித்தல் மற்றும் ஏனைய சகல திருத்தங்களுக்கும் விண்ணப்பதாரியின் முழுமையான ஒப்பத்தை இட்டு உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் தெளிவற்ற மற்றும் உறுதி செய்யாத கேள்விப் படிவங்களை நிராகரிக்கும் அதிகாரம் வத்தளை மாபோல நகர சபைக்கு உரியது.
13. கேள்விப் பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் வத்தளை மாபோல நகர சபைக்குரியது

**பீ.ஏ.எஸ்.எஸ். சந்தருவன்**
**நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**வத்தளை மாபோல நகர சபை.**
**2023.09.14**

**தொ.பே.இலக்கம் - 0112932275**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6513(MP) | Trolley Rail Mounting Accessories of the ZPMC 41T STS Cranes at JCT | 57,000.00 | 1000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6500(MP) | Main Trolley Wire Ropes of 25MM X 457M & 25MM X311M | 120,000.00 | 3500.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6504(MP) | 04 Nos. Main Hoist Wire Rope for Mitsui 35.5 T STS Cranes | 72,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6517(EL) | 01 No. 12KVA Rated Incoming and Outgoing Switchgear Panel | 60,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6509(EL) | 10 Nos. Pulse Generators for ZPMC Yard Cranes at JCT | 50,000.00 | 1,000.00 | 2023.10.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6515(MP) | 08 Nos. Complete Trolley Wheels Assy (Drive & Driven) of the RMT Cranes (IHI) | 44,000.00 | 1,000.00 | 2023.10.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/21/011 | Hardware Items | 19,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/21/010 | Steel materials & Accessories | 24,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/22/012 | Steel materials & Accessories for the extension of the existing workers' Rest Room as part of the Refurbishment Project for the GCMU(M) – JCT Workshop | 22,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/10/030 | MS Thread Bar & G.I. Pipe | 90,000.00 | 1,000.00 | 2023.10.11ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/14/021 | 01 No. Printer A3 colour with Scanner | 30,000.00 | 1,000.00 | 2023.10.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/11/051 | Alfa Laval Heat Exchanger (Center Cooler) of M/T Barana II | 40,000.00 | 1,000.00 | 2023.10.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/14/061 | 100000 Nos. Inter-locking blocks 100MM thick | 171,000.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/54 | 7560 liters Gear Oil Lanka MP90 | 127,500.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/053 | 30240L Hydro Oil 68 Lanka | 181,000.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/060 | 6480 KGS of Grease MP-2 | 144,000.00 | 3,500.00 | 2023.10.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. **2023 செப்டம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள** மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக கீழேயுள்ளமுகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

# அறிவித்தல்

## தேங்காய் எண்ணெய் கைத்தொழில் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்குதல்

தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதியுதவியை வழங்குவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

நிதியுதவி வழங்கப்படும் வேலைகள் - தேங்காய் உலர்த்தும் இயந்திரம் அல்லது போத்தலில் அடைக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக உத்தேச நிதியுதவி இயைபான வேலைகளுக்காக சிபாரிசு செய்யப்பட்ட தொகையின் 70% வீதத்திற்கு அதிகபட்சமாக 600,000.00 ரூபா வரை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் பொருட்டு கடந்த 05 வருட காலத்தினுள் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளாதோர் மட்டும் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் வியாபாரப் பதிவு மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் பதிவைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

இந்த முதலீட்டுக்கான உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கும் கைத்தொழிலாளர்கள் கொழும்பு-01, டியூக் வீதி, இல. 11, தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி பிரிவில் அல்லது அந்தந்த மாவட்டங்களுக்கு இயைபான அதிகாரிகள் ஊடாக அல்லது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து தரப்பட்டுள்ள இணைப்புகளை கட்டாயம் இணைத்து 2023-10-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, இல. 54, நாவல வீதி, நாராஹேன்பிட்டி'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கான விசாரணைகளுக்கு:

| | |
|---|---|
| மகேந்திர லங்காபுர (கொழும்பு / களுத்துறை) | – 0769901038 |
| குசும்சிறி சோமசந்திர (கம்பஹா) | – 0718364081 |
| நிசும் மாதுவகே (தெற்கு மாகாணம்) | – 0714817487 |
| சானக்க ரணசிங்க (குருநாகல் / மத்திய மாகாணம்) | – 0719933500 |
| எச்.ஆர்.ஏ. சந்தன (புத்தளம் / ஊவா மாகாணம்) | – 0714406874 |
| அஹமட் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம்) | – 0779311248 |
| தனுஷ்க அபேசேக்கர (சப்ரகமுவ மாகாணம்) | -- 0711825171 |
| பீ.எம். லங்சக்கார (வடமத்திய மாகாணம்) | – 0769901039 |

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான உதவியைப் பெற்றுக்கொள்ளல்'' எனக் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 54, நாவல வீதி, நாராஹேன்பிட்டி,**
**கொழும்பு-05.**

**தொலைபேசி** : **0112502502**
**0112502503**
**தொலைநகல்** : **0112508729**
**இணையதளம்** : **www.cda.gov.lk**
**தொலைபேசி இலக்கம்** : **0112502504**

NLDB

# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## புத்தம் புதிய பசும்பாலின் விற்பனை

2023 நவம்பர் 1 ஆம் திகதியிலிருந்து 2024 சனவரி 31 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்/கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீற்றர்களில்) | பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீற்றர்களில்) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 5,000 | பெலிகம பண்ணை, பெலிகமுவ | 100 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 2,500 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 300 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 400 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 100 | நிக்கவரட்டிய பண்ணை, நிக்கவரட்டிய | 100 |
| கவுல்வெவ பண்ணை, நாரம்மல | 400 | ஓயமடுவ பண்ணை, அலயபட்டுவ | 100 |
| நாரங்கல பண்ணை, கித்தலாவ | 150 | ------------------------------------------- | -------------------- |
| மஹாபேரதன்ன பண்ணை, திகன | 100 | ------------------------------------------- | -------------------- |

ஆர்வமுள்ள கொள்வனவுக்காரர் தேபவிஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவை அல்லது மேலேயுள்ள எந்தவொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் **''தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என முகவரியிடப்பட்டு 2023 ஒக்டோபர் 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.** தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"Bids for Purchasing Fresh Milk"** என தயவு செய்து குறிப்பிடவும். விலைமனுக்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

அனைத்து விபரங்களும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல.: 40, நாராஹேன்பிட்ட வீதி, கொழும்பு-05.**
**011-2501701/2, 0773782127 (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

# கேள்வி அழைப்பு

## மாவட்ட செயலகம் - பதுளை

01. பதுளை மாவட்ட செயலகத்தினால் கீழ்க்காணும் கைத்தொழிலை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | குறைந்த பட்ச தேவைப்படும் இக்டாட் தரம் | பொதுவான மதிப்பீட்டு தொகை (வரிஇன்றி) ரூ.மி. | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரூ) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (கேள்வி பிணை) காசாக/ இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கி பிணை முறி மூலம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக (ரூ) | வங்கிப் பிணை முறி (ரூ) |
| 1 | Supplying & Installation of Sewerage & Waste Water Treatment Plant at District Secretariat - Badulla. | C7 அல்லது C6 | 8.4 | 2,500.00 | 42,000.00 | 84,000.00 |
| 2 | Removing & Refixing of Clading Sheet at District Secretariat Badulla | C7அல்லது C6 | 8.2 | 2,500.00 | 41,000.00 | 82,000.00 |
| 3 | Design and Build of Steel Roof and Services for Economic Centre at Keppetipola welimada. | C4அல்லது C3 | 150 | 5,000.00 | 750,000.00 | 1,500,000.00 |
| 4 | Construction & Completion Balance works of Divisional Secretariat Office Mahiyanganaya. | C6 அல்லது C5, C4 | 27.7 | 6,000.00 | 4,150,000.00 | 830,000.00 |

02. கேள்விகள் கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் இடம்பெறும்.

03. கெப்பெட்டிபொல பொருளாதார நிலையத்தின் கூரை நிர்மாண கைத்தொழிலுக்காக கேள்விகோரல் இரட்டை கடித உறை முறையின் கீழ் இடம்பெறும்.

04. மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முன்பு பொருளாதார நிலைய வளாகத்தைப் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன், பொருளாதார நிலையத்தின் வர்த்தக விடயங்கள் மேற்கொள்ளப்படும் போதே நிர்மாண விடயங்களும் இடம் பெறல் வேண்டும்.

05. மேற்படி கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்களை, 2023.09.18 முதல் 2023.10.16 வரை அரச அலுவலக நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை மற்றும் 2023.10.16ம் திகதி 09.00 மணி முதல் 12.00 மணி வரையான காலத்திற்குள் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கேள்விவைப்புத் தொகையை மாவட்ட செயலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கெண்ட பற்றுச்சீட்டு மற்றும் நாளது வரைக்கு உற்படுத்தப்பட்ட இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்யும் புத்தகத்தை பதுளை மாவட்ட செயலக கட்டிடத் தொகுதியின் 3ஆம் மாடியில் அமைந்துள்ள நிதி முகாமைத்துவ பிரிவிற்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

06. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை இலங்கை வங்கி பதுளைக் கிளையின் கணக்கு இல. 7042240 இற்கு கிடைக்குமாறு எந்த இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன் ஏனைய ஆவணங்களை மாவட்ட செயலகத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவிற்கு சமர்ப்பித்து பிரதிநிதியொருவர் மூலம் அல்லது கூரியர் சேவை மூலம் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

07. ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் முறையாக பூர்த்தி செய்த கேள்வி பிரதிகள், 'மூலப் பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என்று குறிப்பிட்டு வேறுவேறாக கடித உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு, அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிட்டு 'தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், பதுளை' என்ற முகவரிக்கு 2023.10.16 14.00 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பதுளை மாவட்ட செயலக கட்டிடத் தொகுதியின் 3ம் மாடியில் அமைந்துள்ள நிதி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

08. தபாலில் இடம்பெறும் தாமதங்கள் பற்றி பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்பட மாட்டாது அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

09. 2023.10.16 15.00 மணிக்கு பதுளை மாவட்ட செயலக கட்டிடத் தொகுதியின் 5ஆம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட செயலக உத்தியோகபூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது எழுத்து மூல அனுமதி பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

10. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது குறித்த ஆவணங்களில் குறிப்பிடப்படுமாறு கேள்விப் பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

11. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு தகைமையான சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருத்தல் வேண்டும்.

12. உருப்படி இல. 01, 02 மற்றும் 04 இற்கு குறித்த கைத்தொழிற்காக 2024ம் ஆண்டில் மானியங்கள் வழங்கப்பட மாட்டாது என்பதால் 2023.12.15ம் திகதியளவில் வேலையை நிறைவு செய்து பற்றுச் சீட்டுகளை மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

13. மேலதிக விபரங்களை தொ.பே. இல. 055-2222048 மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாவட்ட செயலகம்.**
**பதுளை.**
**2023.09.15**

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

வெகுசன ஊடக அமைச்சு

## அழைப்புக் கடிதம் (LOI)

## 2023 ஜனாதிபதி திரைப்பட விருது விழாவின் நிகழ்ச்சி முகாமைத்துவத்திற்கான ஆலோசனை நிறுவனத்தின் தேர்வு மற்றும் பணியமர்த்தலின் பெறுகை

**No. NFC/BID/S/2023-3**

கீழ் விபரிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனங்களிடம் இருந்து தேசிய திரைப்பட கூட்டுத்தாபன ஆலோசனை பெறுகைக் குழு (CPC), தலைவரினால் தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளுக்கு தற்போது அழைப்பு விடுக்கப்படுகிறது.

| ஒப்பந்த இல. | ஆலோசனை ஒப்பந்த பெயர் மற்றும் இடம் | மீளளிக்கப்படாத ஆவண கட்டணம் |
|---|---|---|
| NFC/BID/S/2023-3 | 2023 நவம்பர் 14ஆம் திகதி தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் 2023 ஜனாதிபதி திரைப்பட விருது விழாவின் நிகழ்ச்சி முகாமைத்துவம் | 2,000.00 ரூபா |

**2. பணி நோக்கம்**

a) அரங்க வடிவமைப்பு, மின்னொளி மற்றும் இலத்திரன் அலங்காரம் உட்பட நிகழ்ச்சி மேடை முகாமைத்துவம்
b) நிகழ்ச்சி மண்டபத்தின் வெளிப்புற மற்றும் உட்புற அலங்காரங்கள்
c) கலாசார நிகழ்ச்சிகள் (5 நிமிடங்களின் 4-5 நிகழ்ச்சிகள்)
d) விருது பெற்றவர்களின் வீடியோக்களை தயார்படுத்தல் மற்றும் காட்சிப்படுத்தல் (1 நிமிடத்தில் 12 வீடியோக்கள்) மற்றும் உத்தியோகபூர்வ புகைப்படப்பிடிப்பு மற்றும் வீடியோ எடுத்தல்

3. தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவின் இரு கடித உறை முறைமையில் பின்வரும் திறந்த போட்டி நடைமுறை மூலம் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு முறை (QCBS) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

4. தகைமை அளவுகோல்

இலங்கையில் நிறுவப்பட்ட நிகழ்ச்சி முகாமைத்துவத்திற்கான தகுதி பெற்ற ஆலோசனை நிறுவனம் ஒன்றின் மூலம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்க முடியும். ஆலோசனை நிறுவனம் நிகழ்ச்சி முகாமைத்துவத்தை மேற்கொள்வதில் குறைந்தது 7 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுடைய ஆலோசனை நிறுவனங்கள் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி தொடக்கம் 2023 ஒக்டோபர் 2ஆம் திகதி வரை (பொது மற்றும் வங்கி விடுமுறை தினங்கள் தவிர்த்து) எந்த ஒரு வேலை நாட்களிலும் 0900 மணி தொடக்கம் 1600 மணி வரை 011 – 2584295 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெறுகை அலுவலகம், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக 2000.00 இ. ரூபாவை செலுத்தி 2023 ஒக்டோபர் 2ஆம் திகதி 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு -07 என்ற முகவரியில் இருந்து ஆர்வமுடைய ஆலோசனை நிறுவனங்கள் மூலம் ஆங்கில மொழியிலான முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP) ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும்.

7. தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதி முன்மொழிவுகளின் வெவ்வேறான கடித உறைகளை 2023 ஒக்டோபர் 3ஆம் திகதி 1400 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். கொழும்பு – 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 303, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன, மாநாட்டு அறையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் தொழில்நுட்ப முன்மொழிவு உடன் திறக்கப்படும்.

8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு – 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 303, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன, மாநாட்டு அறையில் 2023.09.26 ஆம் திகதி 1100மணிக்கு இடம்பெறும்.

9. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனை பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும் முடிவு இறுதி முடிவாகும் என்பதோடு அவ்வப்போது வெளியிடப்படும் திறைசேரி சுற்றுநிபங்களில் மற்றும் நிதி ஒழுங்குமுறைகளில் ஏதேனும் திருத்தங்களை செய்வதற்கு வாங்குபவர் உரிமை பெற்றுள்ளார்.

**தலைவர்**
**இலங்கை ஆலோசனை பெறுகைக் குழு**

N.T.C

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பான தகவல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மாகாணங்களுக்கிடையிலான வீதிகளில் பயணிகள் போக்குவரத்திற்காக வழங்கப்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் காத்திருப்பு மேலதிக பேருந்துகள் பற்றிய தகவல்களை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.ntc.gov.lk** இல் பெற்றுக்கொள்ள முடியும் என இதன்மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்புடுகின்றது.

**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,**
**இல-241, பார்க் வீதி,**
**கொழும்பு 05.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## ஆசிய விளையாட்டு போட்டி:

# இலங்கையின் கிரிக்கெட் குழாத்தில் விஜயகாந்த் வியாஸ்காந்துக்கு இடம்

சீனாவின் ஹான்சு நகரில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் இலங்கை ஆடவர் கிரிக்கெட் அணியின் விபரத்தை தேசிய ஒலிம்பிக் குழு வெளியிட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்தும் இடம்பெற்றுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியின் 37 விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் விளையாட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

இதில் பங்கேற்பதற்கு அவிஷ்க பெர்னாண்டோவை பயிற்சியாளராகக் கொண்ட 25 பேர் கொண்ட குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வீரர்கள் விபரத்தை இலங்கை கிரிக்கெட் சபை இன்னும் வெளியிடாத நிலையில் தேசிய ஒலிம்பிக் குழு இந்த விபரத்தை வெளியிட்டுள்ளது.

டி20 சர்வதேச தொடராக இடம்பெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் 15 ஆடவர் அணிகளும் எட்டு மகளிர் அணிகளும் பங்கேற்கவுள்ளன. இதில் முன்னணி அணிகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் காலிறுதிச் சுற்றில் இருந்து நேரடியாக தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களுக்காக ஆடவுள்ளன.

ஆடவர் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் 27 தொடக்கம் ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு மகளிர் போட்டிகள் நாளை (19) தொடக்கம் எதிர்வரும் செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை நடைபெறும். சென்ஜியாங் தொழில்நுட்ப பல்கலைக்கழக கிரிக்கெட் மைதானத்தில் அனைத்து போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இலங்கை குழாம்: நுவன் துஷார, அஷேன் பண்டார, டயான் லசித் செஹான், கேஷவ பெர்னாண்டோ, லியோன் டானியல், ஷஷின்த தியமன்த, சசித ஜயதிலக்க, ரவிந்து சுமர்ஷன பெர்னாண்டோ, அஹன் சன்சித்த, லஹிரு உதார, விஜயகாந்த் வியாஸ்காந்த், மினோன் லியனாரச்சி, இசித்த டியு விஜேசுந்தர, லஹிரு தர்ஷன சமரகோன், நிமேஷ் விமுக்தி சில்வா.



# உலகக் கிண்ணத்தில் அதிர்ச்சி கொடுக்க தசுன் ஷானக்க தயார்



எதிர்வரும் உலகக் கிண்ணத்தில் பெரும் அதிர்ச்சியை கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் அந்த சவலை எதிர்கொள்ள தமது அணி தயாராக இருப்பதாகவும் இலங்கை ஒருநாள் மற்றும் டி20 அணித் தலைவர் தசுன் ஷானக்க தெரிவித்துள்ளார். இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட உலகக் கிண்ணம் சினமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டபோது அங்கு வருகை தந்த தசுன் ஷானக்க இதனைத் தெரிவித்தார்.

தற்போது சில பிரச்சினைகளை எதிர்கொண்டபோதும் உலகக் கிண்ணத்திற்கு முன்னர் வலுவான நிலையை எட்ட எதிர்பார்ப்பதாக தசுன் கூறினார். இந்திய ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக சாதகமாக இருக்கும் என்று நான் நினைப்பதோடு எம்மால் அந்த ஆடுகளங்களில் திறமையை வெளிப்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ‘சிரேஷ்ட அல்லது கனிஷ்ட எந்த வீரராக இருந்தபோதும் அவர்கள் சிறப்பாக விளையாடுகின்றனர். எமது கனிஷ்ட வீரர்களான மதீஷ பதிரண மற்றும் துனித் வெள்ளாலகே போன்றவர்கள் அணிக்காக விக்கெட்டுகள் மற்றும் ஓட்டங்களை பெறுவது நல்ல சமிக்ஞையாக உள்ளது. எனது அணியின் அனைவரும் சவாலுக்கு உளரீதியாக தயாராகி இருக்கின்றனர்’ என்றும் அவர் தெரிவித்தார். உலகக் கிண்ணத்தை காட்சிப்படுத்தும் நிகழ்வில் தசுன் ஷானக்கவுடன் இளம் வீரர்களான மதீஷ பதிரண மற்றும் துனித் வெள்ளாலகேவும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியிடம் மோசமாகத் தோற்று ஆசிய கிண்ணத்தை இழந்தது இலங்கை

**இந்தியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்த நடப்புச் சம்பியன் இலங்கை அணி கிண்ணத்தை பறிகொடுத்தது.**

**ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று (17) நடைபெற்ற இந்த போட்டியில் மொஹமட் சிராஜ் மற்றும் இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை அணி 15.2 ஓவர்களில் 50 ஓட்டங்களுக்கே சுருண்ட இலங்கை அணி ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் தனது இரண்டாவது மிகக் குறைந்த ஓட்டங்களை பெற்றது.**

**அதேபோன்று ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முழு அங்கத்துவ நாடு ஒன்றின் இரண்டாவது மிகக் குறுகிய இன்னிங்ஸ் ஒன்றாகவும் இது அமைந்தது.**

**நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி ஜெஸ்பிரிட் பும்ரா வீசிய முதல் ஓவரில் குசல் பெரேராவை இழந்தது. இந்நிலையில் மொஹமட் சிராஜ் வீசிய நான்காவது ஓவர் ஆட்டத்தை முழுமையாக திசை திருப்பியது. அந்த ஓவரில் இலங்கையின் நான்கு விக்கெட்டுகள் பறிபோயின.**

**இந்நிலையில் மத்திய பின்வரிசை வீரர்களும் தமது விக்கெட்டுகளை தாரைவார்த்தனர். இதன்போது இலங்கை அணியின் நான்கு ஆரம்ப வரிசை வீரர்களுடன் ஐவர் டக் அவுட் ஆனதோடு இருவர் மத்திரமே இரட்டை ஓட்டங்களை பெற்றனர். குசல் மெண்டிஸ் தட்டுத் தடுமாறி 34 பந்துகளில் பெற்ற 17 ஓட்டங்களுமே அதிகபட்சமாக இருந்தது.**

**பும்ரா, மொஹமட் சிராஜ் மற்றும் ஹார்திக் பாண்டியா மூவரினதும் பந்துக்கு முகம்கொடுக்க முடியாமல் இலங்கை வீரர்கள் திக்குமுக்காடினர். எதிரணியின் சிறப்பான பந்துவீச்சுக்கு மத்தியில் அநாவசியமான துடுப்பாட்டத்தால் பல வீரர்களும் விக்கெட்டை பறிகொடுத்தனர்.**



**அபாரமாக பந்து வீசிய மொஹமட் சிராஜ் 7 ஓவர்களில் 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒருநாள் போட்டிகளில் தனது சிறந்த பந்து வீச்சை பதிவு செய்தார்.**

**ஹார்திக் பாண்டியா 2.2 ஓவர்களில் 3 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். எதிரணிக்கு எதிர்கொள்ள முடியாத வகையில் பந்துவீசிய பும்ரா 5 ஓவர்களுக்கு 23 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.**

**இந்நிலையில் பதிலெடுத்தாடிய இந்திய அணி 6.1 ஓவர்களிலேயே விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கான 51 ஓட்டங்களையும் எட்டியது. இஷான் கிஷன் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும் சுப்மன் கில் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும் பெற்றனர் இதன்படி முழு அளவில் ஆடப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் இந்தப் போட்டி மூன்றாவது குறுகிய ஆட்டமாக பதிவானது. இந்த போட்டியில் மொத்தமாக 129 சட்டபூர் பந்துகளே வீசப்பட்டன.**

**அதேபோன்று இந்த போட்டியில் மொத்தமாக 101 ஓட்டங்களே பெறப்பட்ட நிலையில் இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் ஒருநாள் போட்டி ஒன்றில்**

**பெறப்பட்ட மிகக் குறைந்த மொத்த ஓட்டங்களாகவும் இது இருந்தது.**

**போட்டி மழை காரணமாக 40 நிமிடங்கள் தாமதித்து ஆரம்பமானபோதும் சூரிய வெளிச்சம் முழுமையாக மறைவதற்கு முன் அட்டம் முடிவுக்கு வந்தது அரங்கில் நிரம்பி வழிந்த ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக அமைந்தது.**

**குறிப்பாக போட்டியின் நாணய சுழற்சி போடப்பட்ட பின்னர் மழை பொழிந்தது ஆடுகளத்தின் நிலைமையை முற்றாக மாற்றுவதாக இருந்தது. இந்த வெற்றியுடன் இந்திய அணி எட்டாவது முறையாக ஆசிய கிண்ணத்தை கைப்பற்றியது.**

## பிரேசில் விமான விபத்தில் பதினான்கு பேர் உயிரிழப்பு



பிரேசிலின் அமேசன் மாநிலத்தில் சீரற்ற காலநிலை காரணமாக விமானம் ஒன்று விபத்துக்கு உள்ளானதில் அதில் இருந்த பதினான்கு பேரும் கொல்லப்பட்டுள்ளனர். அமேசன் மாநிலத் தலைநகர் மனவுஸில் இருந்து 400 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் தொலைதூர காட்டுப்பகுதி நகரான பார்சிலோஸுக்கு பயணித்த விமானம் தரையிறங்கும்போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விமானத்தில் இருந்த 12 பயணிகள் மற்றும் இரண்டு பணியாளர்கள் அனைவரும் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். விபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வானிலை மோசமாக இருந்த சூழலில் சுற்றுவட்டாரத்தை சரியாக காணமுடியாமல் போயுள்ளது. இந்நிலையில் விமானத்தை ஓடுபாதையின் நடுவே விமானி தரையிறக்க முயன்ற நிலையில் அந்த விமானம் ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று விபத்துக்கு உள்ளாகி இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அண்டார்டிக் கடல் பனியில் சாதனை அளவுக்கு வீழ்ச்சி



அண்டார்டிகாவை சூழவுள்ள குளிர் கால கடல் பனி முன்னர் பதிவாகாத அளவுக்கு குறைவாக இருப்பதாக செய்மதி தரவுகள் காட்டுகின்றன. இது ஏற்கனவே உலக வெப்பமாதலால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தப் பிராந்தியம் புதிய சாதனை அளவை தொடும் என்று அஞ்சப்படுகிறது.

‘இது நாம் இதற்கு முன்னர் பார்த்ததற்கு அப்பால் பிரமிக்க வைக்கும் அளவுக்கு உள்ளது’ என்று தேசிய பனி மற்றும் பனித் தரவு மையத்தில் கடல் பனியை கண்காணிக்கும் வொல்டர் மீர் தெரிவித்துள்ளார். ஒரு நிலையற்ற அண்டார்டிகா எதிர்காலத்தில் விளைவுகளை ஏற்படுத்தும் என்று துருவ பிராந்திய நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். பூமியை குளிர்விக்கும் அண்டார்டிகாவின் பனி இல்லாத பட்சத்தில் அந்த பிராந்தியம் பூமியின் குளிர்சாதன பெட்டி என்ற நிலையில் இருந்து சூடேற்றியாக மாறிவிடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அண்டார்டிக் பெருங்கடலின் மேற்பரப்பில் மிதக்கும் பனி இப்போது 17 மில்லியன் சதுர கி.மீற்றருக்கும் குறைவாகவே உள்ளது. அதாவது செப்டம்பர் சராசரியை விட 1.5 மில்லியன் சதுர கி.மீ கடல் பனி குறைவாக உள்ளது.

## சர்வதேச செய்திகள்

# லிபிய வெள்ளம்: இன்னும் கரையொதுங்கும் சடலங்கள்

### மீட்பு நடவடிக்கை தொடர்ந்து தீவிரம்



லிபியாவின் டெர்னா நகர் மீது பயங்கர வெள்ளம் தாக்கி ஒரு வாரத்தை எட்டும் நிலையில் கடலில் இருந்து உடல்கள் கரைக்கு தொடர்ந்து அடித்துவரப்படுவதோடு இடிபாடுகளில் உடல்கள் அழுகிவரும் நிலையில் காணாமல்போனோரை தேடும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை நேற்று (17) வெளியிட்ட அறிக்கையில், டெர்னா நகரில் மாத்திரம் 11,300 பேர் உயிரிழந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 10,100 பேர் தொடர்ந்தும் காணாமல்போயிருப்பதாக மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா அலுவலகத்தை மேற்கோள்காட்டி லிபிய செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

‘தேடுதல் மற்றும் மீட்பாளர்கள் உயிர் தப்பியவர்களை தேடி ஓய்வின்றி ஈடுபட்டு வரும் நிலையில் எதிர்வரும் நாட்கள் மற்றும் வாரங்களில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது’ என மேற்படி ஐ.நா அலுவலகம் தெரிவித்தது.

இரண்டு அணைகள் உடைப்பெடுத்ததால் ஏற்பட்ட இந்த அனர்த்தத்தினால் சுமார் 40,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கில் இருந்த சர்வதேச உதவிகள் வர ஆரம்பித்திருக்கும் நிலையில் அது உயிர்தப்பிய மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு உதவியுள்ளது.

இந்நிலையில் கடந்த மூன்று நாட்களில் இடிபாடுகளில் இருந்து 10 உடல்கள் உட்பட கடற்கரையில் இருந்த 450க்கும் அதிகமான உடல்கள் மீட்கப்பட்டதாக லிபியாவில் காணாமல் போனோருக்கு பொறுப்பான அதிகாரி ஒருவரான கமால் அல் சிவிசி தெரிவித்துள்ளார்.

‘பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதோடு அது மிக, மிக சிக்கலானதாக உள்ளது. இந்த நடவடிக்கைக்கு மாதங்கள் மற்றும் வருடங்கள் எடுத்துக் கொள்ளும் என்ற நான் நினைக்கிறேன்’ என ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் டானியால் புயல் தாக்கியதை அடுத்து ஏற்பட்ட கடும் மழை வெள்ளத்தால் வழக்கமாக வறண்டு காணப்படும் ஆற்றில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டதால் இரு அணைகள் உடைபெடுத்து வெள்ள நீர் சுனாதி அலை போன்று டெர்னா நகர் ஊடாக கடலை நோக்கி பாய்ந்துள்ளது.

இதேவேளை துப்புரவுப் பணிகள் ஆரம்பித்துள்ள நிலையில், நோய்ப் பரவல், தேவைப்படுவோருக்கு நிவாரணப் பொருட்களைக் கொண்டுசேர்ப்பதில் சிரமம் ஆகியவை குறித்து நிவாரண உதவிக் குழுக்கள் எச்சரித்துள்ளன.

நீரில் பரவும் நோய்கள் குறித்தும் உணவு, உறைவிடம், மருந்துகள் ஆகியவற்றின் பற்றாக்குறை குறித்தும் அவை எச்சரித்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீரின் தரத்தையும் கழிவு வெளியேற்றத் தரநிலை குறித்தும் மதிப்பிடப்பட்டு வருகிறது.

உயிரிழந்தோரின் சடலங்களால் சுகாதார அச்சுறுத்தல் ஏற்படும் என்று பரவலாக அஞ்சப்படும் நிலையில், செஞ்சிலுவைச் சங்கமும் உலக சுகாதார அமைப்பும் அவ்வாறு நிகழ்வது அரிது என்று கூறியுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகார சபை
## விலைக்கோரலுக்கான அழைப்பு

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| அல்லைக் கந்தளாய் வீதியை மேம்படுத்துதல் (B010) (36+050 - 36+340) |
| அறபா நகர் அம்மன் நகர் வீதியை மேம்படுத்துதல் (0+240 - 1+240 km) 100,000 கி.மீ. வேலை கீழ் இடைநிறுத்தப்பட்டது. |
| அறபா நகர் அம்மன் நகர் வீதியை மேம்படுத்துதல் (1+440 - 2+090 km) 100,000 கி.மீ. வேலை கீழ் இடைநிறுத்தப்பட்டது. |
| கட்டைப்பறிச்சான் தெற்கு, பெரியார் வீதிக்கான கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| சீனக்குடா, வெள்ளைமணல் பாலம், செல் பால அணுகல் ஜனசவிய வீதியின் மிகுதி வேலைகள் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-09-18ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை, திருகோணமலை.**

## அறிவித்தல்

வ/ப புதிய தலவாக்கலை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான,

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு 2023.07.31 திகதிக்கு ஒரு வருடம் பூர்த்தியாகிய மீட்கப்படாத நகைகள் 2023.10.05, 06ம் திதகிகளில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை

வ/ப புதிய தலவாக்கலை பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமையக காரியாலயத்தில் பகிரங்கமான ஏல விற்பனை செய்யப்படும்.

1. ஹோல்புறூக கிராமிய வங்கி
2. வட்டகொடை கிராமிய வங்கி
3. ராணிவத்தை கிராமிய வங்கி
4. போகாவத்தை கிராமிய வங்கி
5. டயகம கிராமிய வங்கி
6. லிந்துலை கிராமிய வங்கி
7. பத்தனை கிராமிய வங்கி
8. கிலைன்லைன் கிராமிய வங்கி

**கௌரவ தலைவர்,**
**வ/ப புதிய தலவாக்கலை பலநோக்கு கூட்டுறவு சங்கம்**
**பிரதான காரியாலயம்,**
**நுவரெலியா வீதி, தலவாக்கலை.**
**T/P. 0522258267, 0522258118**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 செப்டெம்பர் 20ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 170,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123L220 | LKA18224C224 | LKA36424I209 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 60,000 | 40,000 | 170,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2023 செப்டெம்பர் 20 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2023 செப்டெம்பர் 22 |
| வழங்கப்படும் திகதி | : | 2023 செப்டெம்பர் 22 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2023 செப்டெம்பர் 20, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

### நீர் வழங்கல் அமைச்சு
## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
## பெறுகை அறிவித்தல்

DNCWS

## பெறுகை அறிவிப்பின் திருத்தம்

**2023.08.30** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட Designing, Supply, delivery, Construction, Installation and Commissioning of Advanced Water Treatment Plants to Kurunegala, Puttalum, Vavuniya & Mannar District CBOs (DNCWS/PRO/2023/Advance Water Filter Systems) குறித்த மனு ஆவணங்கள் பெறுவதற்கான கடைசித் திகதயான **2023.09.19** தவிர்க்க முடியாத காரணத்தினால் **2023.09.27 ஆம் திகதி மு.ப.10.00 மணி** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது மேலும், அன்றைய தினம் **மு.ப.10.15** மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாறாது என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுத்தொடர்பான முன்மனுக் கூட்டம் (Per Bid Meeting) **2023.09.20** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகை குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.**
**2023.09.18**

**For classified advertisements and for replies**

received in response to advertisements published under Lake House box numbers

Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

**Repeat Your Ad For Better Offers**

# கேள்வி அறிவித்தல் - 2024
## புத்தளம் நகரசபை

2024ம் ஆண்டுக்கு புத்தளம் நகரசபையின் இறைச்சிக்கடை மற்றும் இதர சொத்துக்கள் உட்பட பத்தொன்பது (19) சொத்துக்களின் வியாபார உரிமைகளை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகரசபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புத்தளம் நகரசபையின் அறிவித்தல் பலகையிலும், நகரத்தில் உள்ள அரச அலுவலக அறிவித்தல் பலகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள் என்பவற்றை உரிய கொடுப்பனவுகளை செலுத்தி 2023.09.18ம் திகதி மு.ப 8.30 முதல் 2023.10.11ம் திகதி பி.ப 3.00 வரை புத்தளம் நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி கட்டுப்பாடுகளுக்கமைவாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2023.10.12ம் திகதி மு.ப 10.00க்கு முன்னர் ''கேள்விப் படிவம் 2024'' என குறிப்பிட்டு ''செயலாளர், நகரசபை, புத்தளம்'' என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விகளை நகரசபைக்கு நேரில் வந்து கையளிக்கவோ அல்லது வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடவோ முடியும்.

கேள்விகள் யாவும் 2023.10.12ம் திகதி மு.ப 10.10க்கு திறக்கப்படும். கேள்விகள் தொடர்பாக கேள்விச் சபையால் மேற்கொள்ளும் தீர்மானம் இறுதியானதாகும்.

**எல்.பீ.ஜீ. பிரீதிகா,**
**செயலாளர்,**
**நகரசபை - புத்தளம்**
2023.09.15

### குத்தகை அறிவித்தல் - 2024
### புத்தளம் நகரசபை

2024 ம் ஆண்டிற்கான புத்தளம் நகரசபையினால் வழங்கப்படுகின்ற சொத்துக்களின் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகரசபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.

| இல. | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்வி பிணை முறி (ரூபா) மீளளிக்கப்படும் | படிவக் கட்டணம் (ரூபா) மீளளிக்கப்படாது | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை இல.01 | 880,110.00 | 44.005.50 | 10,000.00 | 1 |
| 2 | பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை இல.02 | 880,110.00 | 44,005.50 | 10,000.00 | 1 |
| 3 | வட்டார இல 01 மாட்டிறைச்சிக்கடை இல.01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 4 | வட்டார இல 03 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 5 | வட்டார இல 03 மாட்டிறைச்சிக்கடை இல.02 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 6 | வட்டார இல 03 மாட்டிறைச்சிக்கடை இல.03 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 7 | வட்டார இல 04 மாட்டிறைச்சிக்கடை இல.01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 8 | வட்டார இல 04 மாட்டிறைச்சிக்கடை இல.02 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 9 | வட்டார இல 06 மாட்டிறைச்சிக்கடை இல.01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 10 | வட்டார இல 07 மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 11 | வட்டார இல 10 மாட்டிறைச்சிக்கடை இல.01 | 643,335.00 | 32,166.75 | 10,000.00 | 1 |
| 12 | வட்டார இல 11 மாட்டிறைச்சிக்கடை இல.01 | 781,935.00 | 39,096.75 | 10,000.00 | 1 |
| 13 | பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை இல. 01 | 311,850.00 | 24,948.00 | 10,000.00 | 1 |
| 14 | பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை இல.02 | 311,850.00 | 24,948.00 | 10,000.00 | 1 |
| 15 | பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை இல.03 | 311,850.00 | 24,948.00 | 10,000.00 | 1 |
| 16 | பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை இல.04 | 311,850.00 | 24,948.00 | 10,000.00 | 1 |
| 17 | தினச்சந்தை கோழியிறைச்சிக்கடை இல.01 | 173,250.00 | 13.860.00 | 10,000.00 | 1 |
| 18 | வட்டார இல 07 இபுனு பதூதா வீதி கோழியிறைச்சிக்கடை இல. 01 | 173,250.00 | 13.860.00 | 10,000.00 | 1 |
| 19 | பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல.01 | 360,360.00 | 28.828.80 | 10,000.00 | 1 |

**எல்.பீ.ஜீ. பிரீதிகா,**
**செயலாளர்,**
**புத்தளம் நகரசபை.**
**032-2265275**

## அறிவித்தல்
# மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
## சங்கீதம் கலைமாணி சிறப்புப் பட்டம் (Uni - code 068C)
### பல்கலைக்கழக அனுமதி 2022/2023 கல்வியாண்டு (2022 க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில்)
## திறன் தேர்வுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/தரம்) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2022/2023 கல்வியாண்டுக்கான பின்வரும் தகுதிகளைப் பெற்றவர்கள், மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக சேர்க்கைக்கான தகுதிகளை பூர்த்தி செய்தவர்களிடமிருந்து திறன் தேர்வுக்கான **விண்ணப்பங்கள் 15.09.2023 முதல் வரவேற்கப்படுகின்றன**.

விண்ணப்பிக்கும்போது உத்தர பாரத சங்கீதம், வயலின், சிதார், தபேலா ஆகிய பாடங்களில் ஒன்றை முக்கியப் பாடமாகப் படிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**1. அனுமதிக்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகள்,**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ''இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பாடநெறிக்கு படிப்புகளுக்கான சேர்க்கை, கல்வியாண்டு 2022/2023 க.பொ.த (உ/தரம்) 2022" என்ற மாணவர் கையேட்டின்படி பல்கலைக்கழகத்தில் சேருவதற்கான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

2022இல் G.C.E A/L பரீட்சையில் சங்கீத பாடத்திற்கு குறைந்தபட்சம் கிரெடிட் பாஸ் (C) உடன் மூன்று பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) பல்கலைக்கழக அனுமதிக்கு மேற்கூறிய குறைந்தபட்ச தகுதிகளைப் பெற்ற மாணவர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் திறன் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**2. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இணைய பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை http://fhss.sjp.ac.lk/mct/aptitude-test/ என்ற இணைப்பினூடாக Online மூலம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி திகதி 27.09.2023 ஆகும்.

